சுவடி : 42

ஏடு : 12

சூன் 2018

*

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

*

ஆசிரியர் குழு

**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**

*

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**'சிந்தனையாளன்'**

மனை எண்.272/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :

**72992 14554**
**95975 26990**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly
@gmail.com

*

இதழ் வடிவமைப்பு :

**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179

*

இணையத்தில் படிக்க


**www.keetru.com**

*






# இந்தியாவில் அசோகப் பேரரசு மிகப்பெரியது; ஆனால், தென்னாட்டுக்கு அப்பேரரசு பரவவில்லை மனுநீதிதான் தென்னாட்டை ஆண்டது



அசோகர், பௌத்தத்தை கண்ணும் கருத்துமாகப் பரப்பினார். அவர் மறைவுக்குப்பின், கொள்ளுப் பேரன் பிருகரத்திரனிடம் சேனாதிபதியாக இருந்த பார்ப்பனன் புஷ்யமித்ர சுங்கன், பட்டப் பகலில் அரசனைக் கொன்றுவிட்டு சாம்ராஜ்ஜியத்தைக் கைப்பற்றினார். உடனே, சேனைக்கு ஆணையிட்டு எங்கெல்லாம் பௌத்த பிட்சுகள் இருக்கிறார்களோ, அவர்களைத் தேடி, அவர்களின் தலையை வெட்டி வந்தால், இத்தனை பவுன் என்று அறிவித்தார். பௌத்தம் அடியோடு அழிக்கப்பட்டது.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் புஷ்யமித்ரன் மனுஸ்மிருதி தொகுத்தார். இராமாயணத்தைத் தொகுத்தார்.

மனுநீதியின் அடிப்படையில், மக்களை நான்கு வருணங்களாகப் - பிறவி உயர்வு - தாழ்வு உள்ளவர்களாகப் பகுத்தார். நூற்றுக்கு எழுபது பேருக்கு மேற் பட்டவர்களுக்கு, சூத்திரர்கள் - நான்காம் வர்ணத்துக்காரர்கள் என்றும், அவர்களுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியறிவைக் கொடுக்கக் கூடாது என்றும் விதி செய்தார்.

20 விழுக்காடு மக்களை வர்ணத்துக்கு அப்பாற்பட்டவர்கள் - வெளியே உள்ளவர்கள் - தீண்டப்படாதவர்கள் - ஊருக்கு வெளியே குடியிருக்க வேண்டியவர்கள் என்று மனுஸ்மிருதியில் விதித்தார். அவர்கள் பெறுமானம் உள்ள எதையும் உடைமையாகக் கொண்டிருக்கக் கூடாது என்று விதித்தார். பிராமணன் - சத்திரியன் - வைசியன் என்கிற ஒரு சிறு கூட்டத்தார் கல்வி உடைமைக்கும் சொத்து உடைமைக்கும் அதிகார உடைமைக்கும் உரியவர்கள் என அறிவித்தார். வெள்ளையன் காலம் வரையில், எந்தச் சட்டமும் இந்த சமூக அமைப்பைக் குலைக்கவில்லை.

தென்னாட்டில், இந்த அமைப்பு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சோழர்களால் முதன்மை தந்து பரப்பப்பட்டது. அது நிலைத்துவிட்டது.

திருக்குறளை எந்தப் புலவரும் எந்தத் தமிழ் அரசனுக்கும் அறிமுகப் படுத்தவில்லை. எல்லாத் தமிழ் அரசர்களுக்கும் மனுநீதி, இராமாயணம், பாரதம் முதலிய நூல்களே வாழ்க்கை நெறி நூல்களாக அறிமுகப்படுத்தப் பட்டன.

இந்தச் சூழலில் தான், 1865-க்குப் பிறகு, வடலூர் இராமலிங்க அடிகளார் சமரச-சன்மார்க்கத்தைப் பொது நெறியாக அறிவித்தார். அதன் பிறங்கடையே, சுயமரியாதை இயக்கம் ஆகும்.

தந்தை பெரியார் 1922 முதல் மனுஸ்மிருதி, இராமாயணம் இவற்றைக் கண்டித்தார். ஆனால், அவற்றைச் செல்வாக்கு இழக்கச் செய்ய, சமதர்ம ஆட்சி மட்டுமே தீர்வாக அமையும் என்று 1927-இல் திருநெல்வேலியில் அறிவித்தார். 1928இல் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டில், "சீர்திருத்தம் என்பது, ஒரு ஆட்சி அமைப்பாகாது; சோவியத் நாட்டில் உள்ளதைப்

போல, சமதர்ம புரட்சியொன்றே தீர்வாகும்'' என்று உறுதியாக அறிவித்தார். அதற்கு ஏற்ற எந்தவொரு ஏற்பாட்டையும் அவர் செய்யவில்லை.

அதேநேரத்தில், பார்ப்பனர் அல்லாதார் என்கிற 97 விழுக்காடு மக்களைக் கல்வியுரிமை, அரசு வேலை உரிமை, இவற்றுக்கு எல்லாப் பாதுகாப்பையும் தேடினார். அதில் ஓரளவு வெற்றி பெற்றார். அதற்குத் தென்னிந்தியர் நல உரிமைச் சங்க அரசு (Justice Party Government) ஆக்கம் அளித்தது (1920-1937).

அடுத்து காமராசர் தலைமையில் நடந்த காங்கிரசுக் கட்சி ஆட்சி (1954-1964) ஆக்கம் அளித்தது.

திராவிட கட்சிகளான தி.மு.க. ஆட்சிக் காலம் வரையில் இடஒதுக்கீடு திட்டத்துக்குப் பெரியார் ஆக்கம் தேடினார்.

தந்தை பெரியார் அவர்கள் 24.12.1973இல் மறைந்தார்.

அதன் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1980 பிப்பிரவரியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு நாம் 60 விழுக்காடு கோரி, 50 விழுக்காடு இடஒதுக்கீடு பெற்றோம். அதனால் தமிழகத்தில் மட்டும் கல்வியிலும் வேலையிலும் 69 விழுக்காடாக உயர்ந்தது. அது காப்பாற்றப்பட தி.க. ஒத்துழைப்புடன், அ.தி.மு.க. அரசு பாதுகாப்புத் தேடியது.

ஆனால் இந்தியா முழுவதிலும் உள்ள பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோருக்கு, மா.பெ.பொ.க. சார்பில் 8.5.1978இல் இந்தியக் குடிஅரசுத் தலைவரிடம் வைத்த கோரிக்கை என்ன ஆனது?

1980இல் மண்டல்குழு அமையக் காரணமாக இருந்தது நம் கட்சிதான். 1990இல் வி.பி.சிங் ஆட்சிக் காலத்தில் மண்டல்குழு பரிந்துரையால் 27 விழுக்காடு நடுவண் அரசு வேலையிலும், அதன்பின் கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு இடஒதுக்கீடு கிடைத்தது. இத்துடன் மட்டும் நிறைவடைய முடியுமா? விகிதாசார இடஒதுக்கீடே சரியான சமூக நீதியாகும்.

இதை வென்றெடுப்பது தந்தை பெரியாரின், மக்கள் நாயகக் கோரிக்கை வென்றெடுப்பதாகும்.


2018க்குப் பிறகு, இதில் மா.பெ.பொ.க.வும், ''சிந்தனையாளன்'' இதழும் முழு மூச்சுடன் பாடுபடுவோம் என்பது என் 94ஆம் ஆண்டு பிறந்த நாள் கோரிக்கையும் வேண்டுகோளும் ஆகும்.

**01-06-2018** - **வே.ஆனைமுத்து**

**2018 மே சிந்தனையாளன் இதழின் முகப்பு அட்டையில் பேராசான் காரல் மார்க்சு என்று இருக்க வேண்டியது, பேராசன் காரல் மார்ச்சு என்று இடம் பெற்றுவிட்டது. இது பெரும் பிழையாகும். தவறுக்கு வருந்துகிறோம்.**

**-ஆசிரியர்குழு**

## தமிழறிஞர் ம.இல.தங்கப்பா 84ஆம் அகவையில் மறைந்தார்



தமிழ்மொழி, இன மேம்பாட்டுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் அரும்பணி ஆற்றிய ம.இல.தங்கப்பா புதுச்சேரியில் தன் 84ஆம் அகவையில் 31.05.2018 அதிகாலை 1.30 மணியளவில் மறைவுற்றார். நெல்லை மாவட்டம் தென்காசி வட்டம் குறும்பலாப்பேரியில் 8.3.1934இல் பிறந்தார் தங்கப்பா. இளமையிலேயே தமிழ்புலமை கைவரப் பெற்றவராக விளங்கினார். இளங்கலையில் பொருளியியல் பயின்ற தங்கப்பா முதுகலையில் தமிழ் இலக்கியம் படித்தார். மாணவப் பருவத்திலேயே மொழிபெயர்ப்பு ஆற்றல் இவரிடம் சிறந்திருந்தது.

1968 முதல் 1994 வரை புதுச்சேரி அரசின் கல்லூரிகளில் பணியாற்றினார். பாரதிதாசனுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். பாரதிதாசன் நடத்திய குயில் ஏட்டில் முதன்முதலாக எழுதத் தொடங்கி, அதன்பின் பல்வேறு இதழ்களில் எழுதினார். 1958இல் பாரதிதாசன் இல்லத்தில்தான் வே.ஆனைமுத்து அவர்களும் ம.இல.தங்கப்பாவும் சந்தித்தனர். அதன்பின் வாழ்நாள் முழுவதும் இந்த நட்பு நீடித்தது. சிந்தனையாளன் பொங்கல் மலரில் ஆண்டுதோறும் ம.இல. தங்கப்பாவின் கட்டுரை இடம் பெறும். பாரதிதாசன் நூற்றாண்டையொட்டி ஆனைமுத்துவின் வேண்டுகோளை ஏற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பாரதிதாசன் கவிதைகளை ம.இல. தங்கப்பா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "Selected Poems of Bharathidasan" என்ற தலைப்பிலான நூலை மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சென்னையில் கலைஞர் அரங்கில் நடத்திய விழாவில் வெளியிட்டார். முத்தொள்ளாயிரம் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு சாகித்திய அகாதமி விருது தங்கப்பாவுக்கு வழங்கப்பட்டது. ம.இல.தங்கப்பா சங்க இலக்கியப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல் அறிஞர்களால் போற்றப்பட்டது.

மொழிப்பற்றும் இனப்பற்றும் மிக்க ம.இல.தங்கப்பா தமிழ்நலம் சார்ந்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றார். நடைமுறை வாழ்வியல் குறித்து அரிய நூல்களை எழுதியுள்ளார். இவர் அய்ம்பது நூல்களை எழுதியுள்ளார். ம.இல.தங்கப்பாவின் மறைவு தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் பேரிழப்பாகும்.

- **ஆசிரியர்குழு**

*மக்கள் திரள் போராட்டத்தின் மூலம்*

# ஸ்டெர்லைட்டை விரட்டியடிப்போம்

## ஆளும் வர்க்கத்தின் வஞ்சக முகத்திரையைக் கிழித்தெறிவோம்

க. முகிலன்

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி மக்கள் 22.5.2018 அன்று நடத்திய போராட்டத்தில் துப்பாக்கியால் சுட்டதில் 13 பேர் கொல்லப் பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அ.தி.மு.க. ஆட்சி கட்டவிழ்த்துவிட்ட இந்த அரச பயங்கர வாதம் தமிழகத்தையே உலுக்கியது.

எந்த அரசியல் கட்சியின் சார்பும் இல்லாமல் மக்கள் தன்னெழுச்சியாகக் கடந்த பிப்பிரவரி 12 முதல் ஆலைக்கு அருகில் உள்ள குமரெட்டியாபுரத்தில் நடத்தி வந்த போராட்டத்தின் 100ஆவது நாளான மே 22 அன்று தங்கள் கோரிக்கையை அரசுக்கு வலிமையாக உணர்த்தும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவல கத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துவ தென்று ''ஸ்டெர்லைட் எதிர்ப்பு மாவட்ட மக்கள் கூட்ட மைப்பு'' இரண்டு நாள்களுக்கு முன்பே அறிவித்தது.


முற்றுகைப் போராட்டத்தை முறியடிக்கும் நோக்கில் மாவட்ட ஆட்சியர் 144 தடை ஆணையைப் பிறப்பித் தார். ஆயினும் அதைப் பொருட்படுத்தாமல் மக்கள் பல பகுதிகளிலிருந்து மே 22 அன்று பனிய மாதா கோயில் அருகில் திரண்டனர். 5 கி.மீ. தொலைவில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர். வழிநெடுகிலும் எந்தவொரு வன்முறையும் நடக்கவில்லை. இப்பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயிலை அடைந்ததும். எத்தகைய முன்னறிவிப்பும் இன்றி காவல்துறையினர் திடீரென்று தடியடி நடத்தினர். அந்நிலையில் போராட்டக் காரர்களில் சிலர் காவல் துறையினர் மீது கற்களை வீசினர். ஆட்சியர் அலுவலகத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன. இந்தச் சூழலில், காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டனர்.

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடவேண்டும் என்கிற நியாயமான கோரிக்கையை முன்வைத்து நூறு நாள்கள் நடந்த போராட்டத்தின் போது மக்களைச் சந்தித்துப் பேசாமல் புறக்கணித்த தமிழக அரசு, துப்பாக்கிக் குண்டுகள் மூலம் பதில் சொல்லியிருப்பது கடுங்கண்டனத்துக்கு உரியதாகும். இப்போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்காகத் திட்டமிட்டு மக்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறது தமிழ்நாட்டு அரசு. சல்லிக்கட்டுப் போராட்டம் தொடங்கி கடந்த இரண்டு ஆண்டுகளாக நெடுவாசல், கதிராமங்கலம் என்று பல இடங்களில் மக்கள் அரசுக்கு எதிராகத் தன்னெழுச்சியாக நடத்தி வரும் போராட்டங்களை இனி அரசு அனுமதிக்காது என்று தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டின் மூலம் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி எச்சரித்துள்ளது.

காவல்துறையினர் துப்பாக்கியால் சுடுவதற்குமுன் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளைத் தூத்துக் குடியில் பின்பற்றவில்லை. கூட்டத்தைக் கட்டுப்படுத்த



மே 22 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் போராட்டக்காரர்கள் மீது காவல்துறையினர் தடியடி நடத்தினர்.



ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட பேரணியாக வந்த மக்கள்

முடியாத நிலையில் தண்ணீரைப் பீச்சியடித்து விரட்டி யடிப்பது, இரப்பர் குண்டுகளால் சுடுவது, ஒலிபெருக்கி மூலம் எச்சரிப்பது, வானத்தை நோக்கிச் சுடுவது ஆகிய வற்றைக் காவல்துறை மேற்கொள்ளாமல் நேரடியாகத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டது. தூத்துக்குடியில் சுட்டது போல் காஷ்மீரில் கூட கண்டபடி துப்பாக்கியால் மக்களைச் சுடுவதில்லை. காவல்துறை ஊர்தியின் மேலிருந்து உயர்வகை துப்பாக்கியால் சுட்டது அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது.

தான் பாதுகாக்க வேண்டிய மக்களைப் பகைவர் போல் கருதி மார்பிலும், முகத்திலும் காவல்துறை குண்டு களைப் பாய்ச்சியது. முழுங்காலுக்குக் கீழே சுடவேண்டும் என்கிற நடைமுறைகூட பின்பற்றப்படவில்லை. பன்னி ரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வை எழுதியபின் போராட்டத்தில் தொடர்ந்து கலந்துகொண்ட 17 அகவை மாணவி ஸ்னோலினியின் வாயில் குண்டு பாய்ந்து தலைச்சிதறி மாண்டார். புரட்சிகர இளைஞர் முன்னணி யைச் சேர்ந்த தமிழரசன், மக்கள் அதிகாரம் அமைப் பின் செயராமன் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஸ்டெர் லைட்டுக்கு எதிரான போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் குறிவைத்துக் கொல்லப்பட்டனர்.

அன்று பிற்பகல் மாவட்டக் காவல் கண்காணிப் பாளரின் வாகனத்தைச் சிலர் இடைமறித்து, தங்கள் மனக்குமுறலை வெளிப்படுத்தியபோது, போலீசார் துப்பாக்கியால் சுட்டதில் நான்கு குழந்தைகளின் தாயான ஜான்சி கொல்லப்பட்டார். காவல்துறைக்கு இதுபோல் கண்டபடி சுடுவதற்கு யார் அதிகாரம் அளித்தது? தூத்துக் குடியில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு ஆணையிட்டது யார்? என்று தமிழக அரசு சொல்ல மறுத்து வந்தது.

காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் பழனிச்சாமி, துப்பாக்கிச் சூடு நடந்த மே 22 அன்று மாலை, "துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதை நான் தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன்" என்று செய்தியாளர்களிடம் சொன்னார். முதலமைச் சரின் ஒப்புதல் இல்லாமல் காவல்துறை 13 பேரைச் சுட்டுக் கொல்லமுடியுமா? அப்படியே காவல்துறை, தான்தோன்றித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந் தாலும், அடுத்த நொடியே அச்செய்தியை முதலமைச் சருக்குத் தெரிவித்திருக்காதா? அவ்வாறு தனக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை; தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று கூறுகின்ற எடப்பாடி பழனிச்சாமி ஒரு நொடியேனும் முதலமைச்சர் பதவியில் நீடிப்பதற்கு தார்மீக உரிமை இருக்கிறதா? நடுவண் அரசு, தமிழக ஆளுநர்-தமிழகத்தின் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் ஆகியோர் மூலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்கிறது என்கிற கூற்றைத் தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு மெய்ப்பிப்பது போல் இருக் கிறதல்லவா!

துப்பாக்கியால் சுடப்பட்டு 13 பேர் கொல்லப்பட்டு ஆறு நாள்கள் கழித்து 28-5-2018 அன்றுதான் துப்பாக்கியால் சுடுவதற்கு ஆணையிட்டது யார் என்கிற விவரம் ஊடகங்கள் வாயிலாக வெளியானது. மே 22 அன்று மாவட்ட ஆட்சியர் வளாகத்திலும், ஸ்டெர்லைட் ஆலை ஊழியர் குடியிருப்புப் பகுதியிலும் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்குத் தனித் துணை வட்டாட்சியர் (தேர்தல்) சேகர் ஆணையிட்டார்; அன்று பிற்பகல் திரேஸ்புரத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டிற்கு தூத்துக்குடி மண்டல துணை வட்டாட்சியர் கண்ணன் ஆணை யிட்டார் என்று இந்நிகழ்வுகள் குறித்து காவல்துறை

பதிவு செய்த முதல்தகவல் அறிக்கையில் கூறப்பட்டிருப்ப தாகச் செய்தி வெளிவந்தது. மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டத்தில் 20,000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்வார்கள் என்று தெரிந்திருந்தும் ஆட்சியர், துணை ஆட்சியர் மாவட்ட வருவாய் அலுவலர் போன்ற வருவாய்த்துறை உயர் அதிகாரிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏன் இல்லை? துணை வட்டாட்சியர்கள் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு ஆணை யிட்டார்கள் என்பது எடப்பாடி பழனிச்சாமி தலைமை யிலான ஆட்சியும் நிர்வாகமும் எந்த அளவுக்குச் சீர்குலைந்து கிடக்கிறது என்பதையே காட்டுகிறது.

போராட்டத்தின் 100ஆவது நாளான மே 22 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகை யிடும் போராட்டம் குறித்து இரண்டு நாள்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. 24.3.2018 அன்று தூத்துக் குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த பேரணியில் 20,000 பேர் கலந்து கொண்டனர். பொதுக் கூட்டமும் நடைபெற்றது. அதன்பின் 9-4-18 அன்று பத்து ஊர்களைச் சேர்ந்த மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடவேண்டும் என்று ஆட்சி யரிடம் விண்ணப்பம் கொடுத்தனர். எனவே மே 22 அன்று ஆட்சியர் அலுவலக முற்றுகையின்போது அதிக எண்ணிக்கையில் மக்கள் அணிதிரள்வார்கள் என்பதை உளவுத்துறை ஏன் கணிக்கத் தவறியது? 144 தடை ஆணை இருப்பதால் மக்கள் பெரும் எண் ணிக்கையில் போராட்டத்திற்கு வரமாட்டார்கள் என்று காவல்துறை கருதியதா? அப்படியானால் போராடு கின்ற மக்களிடம் கனன்று கொண்டிருந்த உணர்வை நிர்வாகமும் ஆட்சியாளர்களும் புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. போதிய எண்ணிக்கையில் காவல்துறையினரைப் பணியில் ஈடுபடுத்தியிருந் தாலே, துப்பாக்கிச் சூட்டைத் தவிர்த்திருக்க முடியும். 5 கி.மீ. தொலைவு எந்தவொரு வன்முறையிலும் ஈடு படாமல் பேரணியாக வந்தவர்களை ஊருக்கு வெளியே அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்த பிறகு அவர்களைப் பழிதீர்ப்பது என்று காவல்துறை முன்பே திட்டமிட்டிருந்தது என்றே எண்ண வேண்டியுள்ளது.

வன்முறை கட்டுக்கடங்காமல் போனதால்தான் துப்பாக்கியால் சுட நேரிட்டது என்று அமைச்சர் ஜெயகுமார் மே 22 மாலை அரசின் சார்பில் விளக்கமளித்தார். வாகனங்கள் எரிக்கப்பட்டன; மாவட்ட ஆட்சியர் அலு வலகத்தின் முகப்புக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன என்பதற்குமேல் துப்பாக்கியால் கண்டபடி சுடுவதற் கான எந்தக் காரணமும் இல்லை. போராட்டக்காரர் களிடம் எந்த ஆயுதமும் இல்லை. சல்லிக்கட்டுப் போராட் டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகக் காவல் துறையின் ஊர்திக்கு ஒரு பெண் போலீசே தீ வைத்தது போல், தூத்துக்குடியிலும் நிகழ்ந்திருக்குமோ என்கிற அய்யம் ஏற்படுகிறது.


24-3-18 அன்று தூத்துக்குடியில் ஸ்டெர்லைட்டுக்கு எதிராக 20,000 பேர் பங்கேற்ற பேரணி. இதற்குப் பிறகும் மாவட்ட ஆட்சியரோ, அமைச்சர்களோ போராட்டக் குழுவினருடன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை

துப்பாக்கிச் சூட்டாலும், தடியடியாலும் காயம்பட்டு மருத்துமனையில் இருப்பவர்களைப் பார்ப்பதற்கு மே 23 அன்று வந்த உறவினர்களை விரட்டியடிக்க மீண்டும் காவல்துறை துப்பாக்கியால் சுட்டது. காவல்துறையும் ஆட்சியாளர்களும் எந்த அளவுக்கு இரத்த வெறி பிடித்த வர்களாக இருக்கின்றனர் என்பதையும், மக்களின் உயிரைத் துச்சமென மதிக்கும் மனப்போக்கினராக உள்ளனர் என்பதையும் இது காட்டுகிறது. மே 23 அன்று தூத்துக்குடி நகரில் மின்வழுங்கலைத் துண்டித்து விட்டு காவல்துறையினர் வீடுகளுக்குள் புகுந்து நூற்றுக் கணக்கான இளைஞர்களை இழுத்துச் சென்றனர். அவர்களை இரண்டு நாள்கள் கடுமையாக அடித்தனர். இது, ஸ்டெர்லைட் போராட்டத்தில் இனி எவரும் பங் கேற்கக்கூடாது என்று எச்சரிக்கும் நடவடிக்கையாகும். வழக்குரைஞர்களின் முயற்சியால் அவர்களில் பெரும் பாலோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஆயினும் கைது நடவடிக்கை தொடர்கிறது.

ஸ்டெர்லைட் ஆலை இலண்டனைத் தலைமை யிடமாகக் கொண்டுள்ள வேதாந்தா பன்னாட்டு நிறு வனத்துக்குச் சொந்தமானதாகும். இந்நிறுவனத்தின் உரிமையாளர் அனில் அகர்வால். இவர் இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர். உலக அளவில் உலோகத் தாது சுரங்கங்கள், உலோக உற்பத்தியில் வேதாந்தா நிறு வனம் ஈடுபட்டுள்ளது.

வேதாந்தா நிறுவனம் ஸ்டெர்லைட் ஆலை அமைக்க முதலில் கோவா. குசராத் மாநிலங்களை அணுகியது. அதன் ஆபத்துகளைக் கருதி அம்மாநிலங்களில் அனுமதி மறுக்கப்பட்டது. மகாராட்டிர மாநிலத்தில் கடற்கரை



காவல்துறையினரின் காட்டுமிராண்டித் தாக்குதலில் படுகாயமடைந்த பொதுமக்கள்

மாவட்டமான இரத்தனகிரியில் 500 ஏக்கர் பரப்பில் ஸ்டெர்லைட் ஆலை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் ரூ.300 கோடி செலவில் நடந்தன. அப்பகுதி ஏற்றுமதியாகும் அல்போன்சா மாம்பழங்கள் விளையும் தோட்டங்கள் நிறைந்தது. ஆலையின் கழிவுகளால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று உழவர்களும், மக்களும் ஓராண்டு தொடர்ந்து கடுமையாகப் போராடினர். இறுதியில் மகாராட்டிர அரசு ஸ்டெர்லைட் ஆலைக்கு வழங்கிய அனுமதியை இரத்து செய்தது.

செயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு 1994இல் மற்ற மாநிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையைத் தூத்துக்குடியில் அமைக்க அனுமதி அளித்தது. அவரே அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 1996 அக்டோபர் 14 அன்று ஸ்டெர்லைட் ஆலைக்கு உரிமம் வழங்கியது. 1997 சனவரி முதல் ஸ்டெர்லைட் ஆலை தாமிர உற்பத்தியைத் தொடங்கியது. ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் நிராகரிக்கப்பட்ட இயந்திரங்களை இறக்குமதி செய்து ஸ்டெர்லைட் ஆலை நிறுவப்பட்டது. மற்ற நாடுகளிலிருந்து தாமிரத் தாது இறக்குமதி செய்யப்பட்டு, அதிலிருந்து தாமிரம் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு, தாமிரக் கம்பிகளும், தாமிரத் தகடுகளும் ஸ்டெர்லைட் ஆலையில் தயாரிக்கப்படுகின்றன.

இயற்கைச் சமன்பாட்டில் முதன்மையான பங்காற்றும் அரியவகை உயிரினங்களுக்குத் தாயகமான மன்னார்வளைகுடாவில் 21 தீவுகள் உள்ளன. அத்தகைய பாதுகாக்கப்பட்ட கடற்பகுதியிலிருந்து 25 கி.மீ. தொலைவுக்குள் வேதியியல் தொழிற்சாலை எதுவும் அமைக்கப்படக்கூடாது என்பது விதி. ஆனால் 14 கி.மீ. தொலைவுக்குள் ஸ்டெர்லைட் ஆலை ஆட்சியாளர்களின் ஆதரவால் அமைக்கப்பட்டது.

ஸ்டெர்லைட் ஆலை அமைந்த போது அதனால் காற்று மண்டலத்தில் ஏற்படும் மாசு அளவைக் கட்டுப்படுத்த 250 மீட்டர் சுற்றளவுக்குப் பசுமை வளையம் (மரங்கள்) அமைக்க வேண்டும் என்கிற விதியை வளைத்து. அதை 25 மீட்டர் என்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் குறைத்தது. இவ்வாறாக, தொடக்கம் முதலே பல விதிமீறல்கள் நடந்தன.

1994இல் 1200 ஏக்கர் பரப்பளவில் தூத்துக்குடியில் தமிழ்நாட்டு அரசு அமைத்த சிப்காட் வளாகத்தில்தான் ஸ்டெர்லைட் ஆலை உள்ளது. ஆண்டிற்கு 70,000 டன் தாமிர உற்பத்தியுடன் தொடங்கியது. இப்போது 4 இலட்சம் டன் உற்பத்தியாகிறது. இதற்கு ஏற்ற வகையில் புகைப்போக்கியின் உயரத்தை உயர்த்தவில்லை. திடக்கழிவுகளின் சேமிப்பு முறையை மேம்படுத்தவில்லை. இதனால் காற்றில் நச்சுத்தன்மை மிகுந்தது. மழைக் காலங்களில் திடக்கழிவுகளின் நச்சுகள் நிலத்தடி நீரில் கலந்தன. 1997 சூலை 5 அன்று சிப்காட் வளாகத்தில் இருந்த செயற்கை மலர் தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றிய 160 பெண்கள் நச்சுக் காற்றால் மயங்கி விழுந்தனர். அருகில் இருந்த துணை மின் நிலையத்தின் ஊழியர்கள் 20-8-97 அன்று இருமல், தலைவலி, வாந்தி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர்.

இதுபோன்ற பாதிப்புகள் மக்களுக்குத் தொடர்ந்து ஏற்பட்டதால் 1998 நவம்பர் 23 அன்று ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. ஆயினும் ஸ்டெர்லைட் நிர்வாகம் தன் பணவலிமையைக் கொண்டு அதே உயர்நீதிமன்றத்தில் 1998 திசம்பர் 1 முதல் ஆலை இயங்குவதற்கான ஆணையைப் பெற்றது. அதேசமயம் சென்னை உயர்நீதிமன்றம், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல்



பேட்டை ரவுடியாகிவிட்ட காவல்துறை



துப்பாக்கி குண்டு பாய்ந்ததில் வலது காலை இழந்த இளைஞர் பிரின்ஸ்டைன். இவரைப்போல் துப்பாக்கிச் சூட்டால் பலர் முடமாகிவிட்டனர்

ஆய்வு நிறுவனம் (NEERI) ஸ்டெர்லைட் ஆலையின் கழிவுகளால் ஏற்படும் நச்சுகள் குறித்து ஆராய வேண்டும் என்று கூறியது. இந்த ஆய்வு நிறுவனம், ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றியுள்ள நிலத்திலும், நிலத்தடி நீரிலும், காற்றிலும் அனுமதிக்கப்பட்ட அளவை விட நச்சுப்பொருள்கள் அதிகமாக இருப்பதாக அறிக்கை அளித்தது. அந்த ஆய்வு நிறுவனத்தின் ஆட்களையும் ஸ்டெர்லைட் நிர்வாகம் விலைக்கு வாங்கி, ஆய்வறிக் கையை அதற்கு ஆக்கம் சேர்க்கும் வகையில் மாற்றிய மைக்கச் செய்தது. ஸ்டெர்லைட் ஆலை மட்டுமின்றி இந்தியாவில் உள்ள எல்லாத் தொழிற்சாலைகளும் ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கையூட்டுக் கொடுத்து அவற்றால் சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் ஏற்படும் கேடுகளை மூடிமறைத்து வருகின்றன.

நீதிமன்றத்தால் அய்ந்து தடவைகள் ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது. ஒவ்வொரு முறையும் தனக்குள்ள பணவலிமை, ஆட்சியாளர்களின் ஆதரவு ஆகியவற்றின் துணையுடன் மீண்டும் செயல்படத் தொடங்கியது. ஸ்டெர்லைட் ஆலையில் தாமிரம் தவிர, கந்தக அமிலம், பாஸ்பாரிக் அமிலம் ஆகியவையும் தயாரிக் கப்படுகின்றன. இதனால் காற்றின் நச்சுத்தன்மை அதிகமாகிறது.

தூத்துக்குடியைச் சுற்றியுள்ள மக்கள் நச்சுத்தன்மை மிகுந்த காற்றினாலும் நீரினாலும் புற்றுநோய், தோல் நோய், ஆஸ்துமா, கருச்சிதைவுகள், பெண்களின் மாதவிடாய் சிக்கல்கள், இருமல், குழந்தைகள் ஊனமுடன் பிறத்தல் போன்ற பல கொடிய நோய்களால் பல ஆண்டுகளாக பெருந்துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். அதனால் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

2005 முதல் 2010 இடையிலான காலத்தில் அ.தி.மு.க., தி.மு.க. ஆட்சிகளின் போது, மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், 342 ஏக்கர் நிலம் மற்றொரு ஆலை அமைப்பதற்காக ஸ்டெர்லைட்க்கு அளிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் நிருவாகம் மேலும் 4 இலட்சம் டன் தாமிரம் உற்பத்திச் செய்வதற்கான ஆலையை 'விரிவாக்கம்' செய்வது என்ற பெயரில் பொய்யான தரவுகளை அளித்து நடுவண் அரசிடம் அனுமதி பெற்று, அதற்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கிவிட்டது. எனவே தூத்துக்குடி மக்களின் அச்சம் பன்மடங்காக மேலோங்கியது. தங்கள் மண்ணையும், தங்கள் உயிரையும், தங்கள் எதிர்காலத் தலைமுறை யினரின் வாழ்வையும் காக்க வேண்டும் என்ற உறுதிப் பாட்டுடன் தூத்துக்குடி வட்டார மக்கள் தீவிரமான போராட்டங்களை மேற்கொண்டனர்.

2013ஆம் ஆண்டு மார்ச்சு 23 அன்று ஆலையின் நச்சுப் புகையால் பலரும் பாதிக்கப்பட்டனர். அன்று காலை தூத்துக்குடி நகரமே நச்சுப் புகையால் சூழ்ந் திருந்தது. கண் எரிச்சல், இருமல், மூச்சுத் திணற லுடன் மக்கள் விழித்தெழுந்தனர். அதனால் முதல மைச்சர் செயலலிதா ஸ்டெர்லைட் ஆலையை மூடுமாறு ஆணையிட்டார். உச்சநீதிமன்றத்தை ஆலை நிர்வாகம் நாடியது. ஆலையின் தவறுக்காக ரூ.100 கோடி தண்டம் விதித்த உச்சநீதிமன்றம் நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஆலையை மூடும் தமிழக அரசின் முடிவை ஏற்க முடியாது என்று கூறியது. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதைக் காரணமாகக் காட்டி எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி, ஸ்டெர்லைட் ஆலையை மூட முடியாது என்று கூறி வந்தது.

தமிழ்நாட்டில் கூடங்குளம், ஹைட்ரோ கார்பன் - மீதேன் எடுத்தல், கெயில் குழாய் புதைத்தல், ஸ்டெர் லைட், நியூட்ரினோ திட்டம் ஆகியவற்றுக்கு எதிராக எந்தவொரு அரசியல் கட்சியின் சார்பும் இல்லாமல் மக்கள் தன்னெழுச்சியாகக் கிளர்ந்தெழுந்து தொடர்ந்து ஊக்கமுடன் வலிமையாகப் போராடி வருகிறார்கள். இப்போராட்டங்களின் ஊடாக தற்போது இருக்கின்ற அரசமைப்பும், ஆட்சி நிர்வாகமும் வளர்ச்சி என்ற பெயரால் பெருமுதலாளிகள் கொள்ளை இலாபம் ஈட்டு



28-05-2018 அன்று அரசாணைப் பிறப்பிக்கப்பட்டு ஸ்டெர்லைட் ஆலைக்குத் தமிழக அரசு சீல் வைத்தது. 100ஆவது நாள் முற்றுகைப் போராட்டத்திற்கு முன்பே இதைச் செய்திருக்கவேண்டும்.

வதற்காக மக்களின் நலனை, எதிர்கால வாழ்வை பலியிடுகின்றன என்கிற அரசியல் புரிதல் மக்களிடம் வேகமாக ஏற்பட்டு வருகிறது. அத்துடன் பார்ப்பனிய-பனியா ஆதிக்கத்தில் இருக்கும் இந்திய அரசை எல்லாத் தளங்களிலும் தமிழ்த்தேசியம் என்கிற ஆயுதத்தைக் கொண்டு எதிர்ப்பதன் மூலமே தமிழர்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்கிற கருத்தும் கூர்மையடைந்து வருகிறது. இதை ஆளும் வர்க்கம் பேராபத்தாகக் கருதுகிறது. எனவேதான், எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி, மே 22 அன்று முற்றுகைப் போராட்டத்தின்போது, சமூக விரோத சக்திகளும், தீவிரவாத அமைப்புகளும் ஊடுருவி வன்முறையில் ஈடுபட்டதால் தான் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது என்று கூறி வருகிறது. மக்களின் உரிமைக்களுக்காகவும், சனநாயகத்தின் உயிர் நாடியான கருத்துரிமைக்காகவும் போராடி வருகிறவர்களையும், அமைப்புகளையும் தீவிரவாதிகள், சமூக விரோதிகள் என்று முத்திரை குத்தி ஒடுக்குவது ஆளும் வர்க்கத்தின் உத்தியாகும்.

மக்களின் போராட்டங்களை முறியடிப்பதற்காகவே இந்திய ஆளும் வர்க்கமும், பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகக் குற்றேவல் செய்து கொண்டிருக்கும் பழனிச்சாமி ஆட்சியும் சேர்ந்து தீட்டிய கூட்டுச்சதியே தூத்துக்குடியின் துப்பாக்கிச் சூடு. மக்கள் அதிகாரமே உண்மையான சனநாயகம். மக்கள் அதிகாரத்தின் ஒப்பற்ற வலிமையைக் கொண்டு ஸ்டெர்லைட்டை விரட்டி அடிப்போம். எடுபிடி எடப்பாடி ஆட்சியையும், இந்துத்துவ மோடி ஆட்சியையும் தூக்கியெறிவோம். ❖

# காடுவெட்டி ஜெ.குரு மறைவு



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தை அடுத்த காடுவெட்டி கிராமத்தைச் சேர்ந்த ஜெ.குரு அவர்களின் தந்தை செயராமன் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்.

ஜெ.குரு இளம்வயதில் தமிழ்நாடு விடுதலைப் படையை அமைத்த தமிழரசன் அவர்களோடு சேர்ந்து சிலகாலம் செயல்பட்டார்.

டாக்டர் இராமதாசு வன்னியர் சங்கத்தை தோற்றுவித்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வன்னியர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கேட்டு போராட்டம் நடத்தியபோது குரு தீவிரமாகச் செயல்பட்டார். அதனால் டாக்டர் இராமதாசு ஜெ.குருவை வன்னியர் சங்கத்தின் மாநிலத் தலைவராக நியமித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கிய காலத்திலிருந்து ஜெ.குரு அதில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார். 2001இல் ஆண்டிமடம் தொகுதியிலிருந்தும் 2011இல் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்தும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சில ஆண்டுகளாக உடல்நலம் குன்றிய நிலையில் நுரையீரல் கோளாறு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சைப் பலனின்றி 57ஆவது வயதிலேயே 25.5.2018 அன்று மறைவுற்றார். அவருக்கு மனைவியும் ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். குருவை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், பா.ம.க.வினருக்கும் மா.பெ.பொ.க.சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்த் தேசம் – எங்கே நிற்கிறது?

- பொழிலன்

'தமிழ்நாடு தமிழருக்கே!' - என்கிற முழக்கம் தமிழகத்தில் ஒலிக்கத் தொடங்கி எண்பது ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன.

1937 சூலையில் திருச்சி மாநாட்டில் மறைமலையடிகள், சோமசுந்தரபாரதியார், பெரியார், கி.ஆ.பெ. விசுவநாதம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு இயற்றப்பட்ட தீர்மானமும், 1938-இல் திருச்சியிலிருந்து சென்னை நோக்கி நடந்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் பேரணியின் நிறைவில் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்பதுதான் தீர்வு என்பதான அறிவிப்புமே தமிழ்நாட்டு விடுதலைக்கான தொடக்க தீர்மானங்களாக, முழக்கங்களாக இருந்தன.

ஆனால் அத் தீர்மானத்திற்கோ, முழக்கத்திற்கோ - இன்றைய காலத்திற்கான தமிழ்த்தேசத்திற்குரிய பொருளைப் பொருத்திப் பார்க்க முடியாது என்பது மட்டுமல்ல அவ்வாறு பார்க்கவும் கூடாது.

அன்றைக்கு எழுந்த தமிழ்நாட்டு விடுதலை முழக்கத்திற்கான அடிப்படைக் காரணிகள் தமிழ்மொழி உரிமைக்கானதாக, பார்ப்பனிய எதிர்ப்புக்கானதாக மட்டுமே இருந்தன.

அதன்பிறகும் அம் முழக்கத்தின் உள்ளடக்கப் பொருள் விரைவாக மாறிவிடவில்லை.

4.8.1940-இல் திருவாரூரில் நடந்த தென்னிந்திய நலவுரிமைக் கழகத்தின் (நீதிக்கட்சியின்) மாநாட்டுத் தீர்மானத்தின் உள்ளடக்கத்தைப் பார்த்தால் அத்தன்மை விளங்கும்.

**அத் தீர்மானம் கீழுள்ளது:**

**“திராவிடர்களுடைய கலை நாகரிகம் பொருளாதாரம் ஆகியவை முன்னேற்றமடைவதற்கும், பாதுகாப்பதற்கும் திராவிடர்களின் தேசமாகிய சென்னை மாகாணம் இந்திய மந்திரியின் நேர்பார்வையின்கீழ் ஒரு தனிநாடாகப் பிரிய வேண்டும்”.**

இந்தத் தீர்மானத்தை இன்றைய தமிழ்த்தேச விடுதலை அரசியலோடு நேர்ப்படுத்த இயலாது. ஆனால் இன்றைய தமிழ்த்தேச விடுதலைக்கான அரசியல் வளர்ச்சிக்குரிய பின்புலத்தில் இத்தகைய தீர்மானங்களும் உண்டு என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து 1944-இல் தென்னிந்திய நல உரிமைக் கழகம் - திராவிடர் கழகமாக மாற்றப்பட்ட மாநாட்டின் தீர்மானமும், 1945-இல் திருச்சி - புத்தூரில் நடந்த திராவிடர் கழக மாநாட்டின் தீர்மானமும் தமிழ்நாட்டு விடுதலைக்குரிய தீர்மானங்களாகப் படிப்படியாகக் கருத்தளவில் வளர்ச்சி பெற்றன.

1949-இல் தி.மு.க. தோற்றங் கொண்டு 1952-இல் 'திராவிட நாடு' விடுதலைக் கோரிக்கையை எவர் முன்வைக்கிறார்களோ அவர்களுக்கே எங்களின் வாக்கு - என்று அறிவித்தது. 1957 தேர்தலில் திராவிட நாடு விடுதலையை நேரடியாகப் பேசி போட்டியிட்டு 15 இடங்களைப் பெற்று வெற்றியும் பெற்றது அக்கட்சி.

இதற்கிடையில் தமிழ்நாடு தமிழருக்கே என்றும், திராவிட நாடு திராவிடருக்கே என்றுமான முழக்கங்களை வலியுறுத்திப் பலரும் பல்வேறு முனைப்பான வேலைகளை செய்யத் தொடங்கினர்.

தமிழக வெகு மக்களிடையே பிரித்தானிய வெள்ளை அரசெதிர்ப்பு எந்த அளவு வளர்ந்திருந்ததோ அதைவிட அதிகமாகவே 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கி வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர், மறைமலையடிகள், திரு.வி.க., சிங்காரவேலர், பெரியார் உள்ளிட்ட எண்ணற்ற தமிழ் அறிஞர்களாலும், தலைவர்களாலும் பார்ப்பன எதிர்ப்பரசியல் பரவியது. அப்பார்ப்பன எதிர்ப்பரசியலின் உள்ளீடு கொண்ட கருத்து வளர்ச்சியே தமிழ்நாடு - திராவிட நாடு - என்கிற கருத்துகளோடு ஒன்றியது.

ஆக - அன்றைய தமிழ்நாடு தமிழருக்கே முழக்கத்திற்கும், திராவிட நாடு திராவிடருக்கே முழக்கத்திற்கும் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு அரசியலே உள்ளீடாக இருந்தது.

1890-களின் காலங்களில், அயோத்திதாசரால் தொடங்கப்பட்ட திராவிடர் கழகத்திற்கும் பின்னர் ஐம்பதாண்டு இடைவெளியில் 1944-இல் பெரியாரால் தொடங்கப்பட்ட திராவிடர் கழகத்திற்கும் சாதி ஒழிப்பு, ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு ஆகியவையே நடுவ அரசியலாக இருந்தன.

அதிலிருந்தே இந்தி எதிர்ப்பை, ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பை, இந்திய எதிர்ப்பை (அவர்கள் மொழியில் வடநாட்டான் எதிர்ப்பை) அடையாளப்படுத்திக் காட்டினர்.

அன்றைய சென்னைத் தலை மாநிலம் (மெட்ராஸ் பிரசிடென்சி) என்பது இன்றைய தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், கேரளம் பகுதிகளை யெல்லாம் இணைத்து பிரிட்டீசாரின் ஆட்சியினால் உருவாக்கப்பட்டிருந்த நிலையில், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பது தெளிவான நில அடையாளத்தைக் காட்டுகிற அரசியலாக எழவில்லை.

இன்னொருபுறம் ஆரியமல்லாதவையே 'திராவிடம்' - எனக் கால்டுவெல் மொழியியல்வழி விளக்கப்படுத்தியதும், பழங்காலந் தொட்டே தமிழைத் திரமிளம் - திராவிடம் என்று பிராகிருத, ஆரிய வழிமுறையினர் அடையாளப்படுத்தி வந்ததுமான நிலையில் 'திராவிடர்' - என்போர் ஆரியம் அல்லாதவர் என்கிற அரசியல் விளக்கமே அக்கால் பரவியிருந்தது.

எனவேதான் அயோத்திதாசப் பண்டிதரும், பின்னர் பெரியாரும் ஆரியம் அல்லாத மறுப்பு நிலையிலிருந்து திராவிடர் கழகம் எனும் பெயர்களில் இயக்கங்களைத் தொடங்கினர்.

1952-இலிருந்தே அதாவது மொழிவழி மாநிலப் பகுப்புக்கு முன்பிருந்தே தேர்தலில் ஈடுபடத் தொடங்கிய தி.மு.க. அன்றைய சென்னைத் தலைமாநிலத்தோடு தெலுங்கு, கன்னட, மலையாள மக்களும் இணைந்திருந்த விரிந்த நிலப்பரப்பையே 'திராவிட



தமிழ்த்தேசியத்தின் முன்னோடிகள்

நாடு' என்பதாக அடையாளப்படுத்தி அவர்களையும் இணைத்துக் கொண்டு திராவிட நாடு விடுதலையைக் கேட்டது.

1956 மொழிவழி மாநில பகுப்புக்கு முன்னர் வரை பெரியாரும் அவ்வாறே திராவிட நாடு என முழங்கினார். மொழிவழி மாநிலப் பகுப்புக்கு பின்னர், அரசியல் சூழல் மாறியது.

தமிழுக்கு, தமிழருக்கு உரிய மாநிலம் தமிழ் நாடாயிற்று.

எல்லைப் பகுப்பில் நடந்த தில்லுமுல்லுகள் பலவாயினும் இறுதியாகத் தமிழ்நாடு என்பது இதுதான் என்பதான ஓர் அடையாளத்திற்கு வந்தது.

எல்லைப் பகுப்பு நடந்து ஏறத்தாழ 14 ஆண்டுகள் கழித்தே தமிழர்களுக்கான இந்நிலப் பகுதிக்குத் 'தமிழ்நாடு' எனச் சட்டப்படி போராடிப் பெயர் பெற முடிந்தது.

இனி, தெலுங்கனையும், கன்னடனையும், மலையாளியையும் நம்பிக்கொண்டு பயனில்லை. அவர்கள் திராவிட நாட்டு விடுதலைக்கு உடன்படப் போவதில்லை. தமிழ்நாடு தமிழருக்கே என்பதுதான் சரி என்று பெரியார் 1956-இல் முடிவுக்கு வந்தார்.

ஆனால் 1963-இல் பிரிவினைத் தடைச் சட்டம் வந்த பிறகும்கூட திராவிட நாடு - என்கிற அடையாளத்தையே தி.மு.க. வலியுறுத்தி வந்தது. நெருக்கடிக்காகப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டபோதுகூட, திராவிட நாடு பிரிவதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன, நாங்கள்தாம் கைவிட்டு விட்டோம் என்றனர்.

முழுக்க முழுக்கத் தேர்தல் நலன் நோக்கியே அவர்களின் கொள்கைகளும், நடைமுறைகளும் நீர்த்துப் போகவும், ஆட்டங் காணவும் செய்தன.

ஆரிய மாயை எழுதிய அவர்களே அன்றைக்கு ஆரியத்தின் ஊற்றுக் கண்ணாக இருந்த இராஜாஜியோடு கூட்டுச் சேர்ந்து தேர்தலில் பங்கேற்றனர். அதற்குத் தகவாக அரசியல் பேசவும் செய்தனர்.

புரட்சிக்கான, விடுதலைக்கான, உழைக்கும் மக்களுக்கான, சாதி ஒழிப்புக்கான அரசியல் கருத்துகளையெல்லாம் தேர்தல் வாக்குக்காகப் பேசிக் கொண்டே அவற்றுக்கு நேரெதிராக முதலாளியத்தோடும், இந்தியத்தோடும், பார்ப்பனியத்தோடும் உறவாடியபடி கொள்கை அனைத்தையும் அடிசாய்த்தனர்.

ஆவர்களின் படிப்படியான அன்றைய சீரழிவு நடைமுறை களை விளங்கிக் கொள்ளாதவர்கள் 2009-இல் முள்ளிவாய்க்காலின் பேரழிவுக்குத் தி.மு.க., ஆட்சியிலிருந்தும் ஏதும் செய்யாததற்குக் காரணம் கருணாநிதி பிறப்பால் தமிழர் இல்லை என்றும், அவர் திராவிடக் கருத்துள்ளவர் என்றும் அரைகுறை அரசியல் பாடம் படித்து தி.மு.க.வையும், திராவிடக் கட்சிகளையும் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர்.

தமிழர் ஒருவர் முதலமைச்சராக வந்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்பதாகக் கருதவும் பரப்பவும் செய்கின்றனர்.

தமிழ்த்தேச அரசியல் என்றால் என்ன? அது யாருக்கானது? யாரை எதிர்த்தது? அது என்ன செய்யப் போகிறது? எப்படிச் செய்ய போகிறது?-என்கிறபடியான நூற்றுக்கணக்கான கேள்விகளுக்குத் தெளிவாகச் சிந்திப்பதும் இல்லாமல், செயல்படுவதுமில்லாமல் இருக்கின்றனர்.

தமிழனைத் தமிழனே ஆள வேண்டும் என்று தன்னை முதலமைச்சராகத் தேர்வு செய்ய வேண்டுமான உத்தியோடு பேசுகின்றனர்.

எங்கு பிறப்பினும் தமிழன் தமிழனே,
இங்கு பிறப்பினும் அயலான் அயலானே''

- என்ற புரட்சிப் பாவலரின் பாடல் வரிகளைத் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

- தமிழ்நாட்டை ஆளுவதற்கு ஒருவன் தமிழனா? இல்லையா என்பதை மட்டுமே தகுதியாகச் சொல்கின்றனர்!

தமிழ்நாடு இந்திய அரசாலும், பன்னாட்டு நிறுவன வல்லரசிய முதலைகளாலும் சூறையாடப்பட்டு வருவதைப் பற்றியெல்லாம் அவர்கள் பேசுவதும் எதிர்த்துப் போராடுவதும் இல்லை.

நெய்வேலி பறிபோனது குறித்தோ, காவிரி கடைமடை மாவட்டங்கள் பறிபோய்க் கொண்டிருப்பதைப் பற்றியோ, தமிழகக் கனிம வளங்கள், நீர் வளங்கள், நில விளைச்சல் வளங்கள், கடல் வளங்கள் - என எல்லாம் சூறையாடப்பட்டு வருவதைப் பற்றியோ அவற்றை தமிழகத்திற்கானவையாக மீட்டுப் போராட வேண்டும் என்பது குறித்தோ மக்களை அணி திரட்டியதில்லை. பறிபோய்விட்ட கல்வி உரிமையை காக்க வழிகாட்டியதில்லை.

தமிழன் இந்தியன் இல்லை, தமிழர்களின் தேசிய இனம் 'தமிழ்த் தேசிய இனமே' என்று பதிந்து கொள்ளுகிற உரிமைக்காக ஓங்கிக் குரல் எழுப்பியதில்லை.

சாதி வெறிக்கெதிராக, சமயத் திமிர்களுக்கு எதிராக அணி திரளுவதில்லை.

இந்துப் பார்ப்பனிய வெறிகொண்டு இந்தியாவை ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே அரசு, ஒரே பண்பாடு என்றெல்லாம் பேசுகிற ஆர்.எஸ்.எஸ்.-ஐ அதன் அடிவருடிப் பரிவாரங்களை எதிர்த்து இவர்கள் முணகுவதுகூட கிடையாது.

சாதியால்தான் தமிழனை அடையாளம் காணமுடியும் என்றும் சாதி தேவையுடையதாக இருப்பதாகவும் நியாயம் கற்பித்துக் கொள்கின்றனர்.

தமிழ்த் தேச விடுதலைக்குப் பிறகுதான் சாதி ஒழிப்பு, வகுப்பு(வர்க்க) ஒழிப்பு என்று கூறி, சாதி ஒழிப்பு பற்றியெல்லாம் பேசித் தமிழன் என்கிற ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது என்கின்றனர்.

அப்படியென்றால் தமிழ்த்தேச விடுதலைக்குப் போராடக் கூடியவர்கள் யார்? என்றால், தமிழர்கள் என்கின்றனர்.

எந்தத் தமிழர்கள் என்றால்-தமிழரை நாம் கூறுபடுத்துவ தாகப் பழி சுமத்துகின்றனர்.

ப. சிதம்பரம், பொன். இராதாகிருட்டிணன், சிவநாடார் போன்றோரெல்லாம் தமிழர்களா என்றால் - தமிழராகப் பிறந்த வர்கள்தானே, அவர்களும் ஒருவகையில் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பார்கள் என்கின்றனர்.

ஆக, தமிழ்த்தேச விடுதலை என்றால் என்ன என்கிற முதல்பாடத்திலிருந்தே விளக்கங்களைத் தொடங்க வேண்டி யுள்ளது.

எண்பதாண்டுகளுக்குப் பிறகு, தமிழ்த் தேச விடுதலை அரசியல் நுழைந்திருக்கிற நெருக்கடியான இக் குழப்பச் சூழலுக்கு எவையெல்லாம் காரணங்கள் என்பதை ஆய்வு செய்தாக வேண்டியுள்ளது.

ஆனால் இவ்வளவு காலம் தமிழ்த் தேச விடுதலைப் போராட்டம் அடுத்தடுத்தக் கட்டங்களுக்கு ஏன் நுழையவில்லை என்றால், அதற்குக் காரணம் திராவிட அரசியலே என்று ஒற்றை வரியில் எளிதாகச் சொல்லிவிடுகின்றன சில தமிழ் இயக்கங்கள்.

இன்னொருபுறம் ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்டு அதன் பரிவார இயக்கங்களும் இன்றைக்குள்ள சமூகக் கேடுகளுக்கு அவலங்களுக்குத் திராவிட அரசியலும், அதன் ஆட்சியுமே காரணம் என்கின்றன.

ஆக, எதிரெதிர் இயக்கங்களாக இருக்கவேண்டிய தமிழ் இயக்கங்களுக்கும், ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட ஆரியச் சார்பு இயக்கங்களுக்கும் எப்படித் திராவிட அரசியலும், நடைமுறை யுமே எதிரி என்று அடையாளப்பட முடியும்? - அடையாளப் படுத்திட முடியும்?

இந்த இடத்தில் திராவிட அரசியல் குறித்துக் கூடுதலாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

திராவிடம் என்பது பெரிய அளவிலான ஒரு கொள்கையோ, கோட்பாடோ, தேசமோ கொண்டதன்று.

அது ஆரியத்திற்கெதிரான அரசியல் நிலைப்பாடு கொண்ட தாக உணரவும், உணர்த்தவும் பட்டிருக்கிறது.

இன்னொருபுறம் அப்படியான ஆரியத்திற்கு எதிரான தமிழின மரபு சார்ந்த இனங்களை யெல்லாம் அவை ஆரிய எதிர்ப்புடையவையாகக் கருதி இணைத்துத் திராவிடம் என அடையாளப்படுத்தியது.

ஆக, திராவிடத்திற்கான இந்த இரண்டு செயல் இலக்குகளும் - திட்டங்களுமே ஆரியத்திற்கு எதிரானவை என்றாலும், அவை இரண்டுமே திராவிடத்தை முன்மொழிந்த இயக்கங்களால் முறையாக முன்னெடுக்கப்படவில்லை.

திராவிடத்தை முன்னெடுத்த இயக்கங்கள் ஆரியத்தை மொழியடிப்படையிலும், பண்பாட்டப் படையிலும் சிலவகையில் எதிர்த்துப் பேசினாலும் ஆரியத்தின் அரசியல் அதிகாரக் கருவான இந்தியத்தை வீழ்த்துவதற்கான செயல்திட்டமின்றி, அந்த இந்தியத்திற்கு அடிபணியவே செய்தன. இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன் என மயங்கின, தமிழர்களை மயக்கின.

எனவே, திராவிடம் என்பது ஆரியத்திற்கு, அதன் இன்றைய அரசியல் அதிகார அடையாளமான இந்தியத்திற்கு எதிரானதாக நிற்காமல் அவற்றினோடேயே இணங்கிப் போனதால், தமிழ்த் தேசக் கருத்தாளர்கள் பலருக்கும் திராவிடத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது, ஏற்பட்டுள்ளது. அவ்வெறுப்பிற்கான காரணத்தில் சரி இருந்தாலும், அவ்வெறுப்பிற்கான காரணம் இன்னதுதான் என்பதை அடி ஆழமாய் ஆய்வு செய்யாமல், திராவிடமே பகை என்பது போல் சுட்டத் தொடங்குவது, அத்தமிழ்த்தேசமும் ஆரியத்திற்குச் சார்பாய் போகிற பெரும் பிழையையே செய்வ தான போக்காக மாறுவதையே அவர்கள் உணரவேண்டும்.

அந்த இடத்தை இந்திய ஆரியம் சரியாக உணர்ந்து கொண்டது. எனவேதான் அது திராவிடத்தை எதிர்த்து தமிழை அரவணைப்பது போன்ற ஏமாற்றைச் செய்வதான நடை முறைகளை மேற் கொண்டது. இடைக்காலத்தில் தருண் விஜய்யைத் தூண்டிவிட்டுத் திருவள்ளுவரை, திருக்குறளைப் பாராட்டிய நாடகங்களை நடத்தியது. தமிழில் பேசுவது போன்ற புனைவை உருவாக்கியது.

ஆக, ஆரியத்தை - அதன் அரசியல் நடுவமான இந்தியத்தை, பொருளியல் அடித்தளமான பன்னாட்டு நிறுவன வல்லரசியங் களை எதிர்த்துக் களம் காண வேண்டிய தமிழ்த் தேச அரசியல், அவற்றை எதிர்ப்பதில் - போராடுவதில் திட்டமிடாமல், செயல் படாமல், அவ்வகை செயல் திட்டங்களே இல்லாத வெற்றுத் திராவிடக் கட்சிகளை எதிர்த்துக் கம்பு சுற்றுகிறது.

இன்றைக்கு ஓட்டாண்டிகளாய் மாறி இந்திய மடியில் சாய்ந்து கிடக்கும் திராவிடக் கட்சிகளின் முகத்திரைகளைக் கிழித்து, அவை தொடங்கப்பட்ட போது கொண்டிருந்த ஆரியப் பார்ப்பனிய - இந்திய அரசெதிர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ளாமல் எப்படிப் பொய்யாய் போலியாய் மாறிப் போய்விட்டன என அம்பலப் படுத்தி - அவற்றை ஆரியத்திற்கு எதிராகக் கொம்பு சீவிவிட வேண்டிய கடமையை ஆற்ற வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேச இயக்கங்களுக்கே இருப்பதை அவை உணர்ந்தாக வேண்டும்.

ஆரிய - இந்திய எதிரிகளைத் தனிமைப்படுத்தி எதிர்க்க வேண்டுமானால், இத்தகைய விரிவான திட்டத்தைத் தமிழ்த் தேசிய இயக்கங்கள் செய்தாக வேண்டும்.

மாறாக எதிரிகளைத் தனிமைப்படுத்தி எதிர்க்காமல், அவர்களின் வலுவை அதிகப்படுத்திக் கொண்டிருப்பது தமிழ்த் தேசப் போராட்டத்திற்கே பேரிழப்பாக முடியும்.

நிலைஇவ்வாறிருக்க, தமிழகத்தில் உள்ள புரட்சிவய கட்சிகளின் அரசியல் தெளிவின்மையும், செயல்திட்டமின்மை யும்கூட இன்னொரு பெருங்காரணமாய் உணரவேண்டி யுள்ளது.

1925 அளவில் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். கடந்து வந்து தன்னை வலுப்படுத்தி நிலை நிறுத்தி வைத்திருக்கிற அளவில்கூட,

அதே காலக்கட்டத்தில் தொடங்கப்பட்ட பொதுவுடைமைக் கட்சி தன்னை வலுப்படுத்தி நிலை நிறுத்தவும் புரட்சிக்கான நகர்வை முன்னெடுத்துச் செல்லவுமில்லை என்பதை மீளாய்வு செய்தாக வேண்டும்.

ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே குமுகம் - என ஆர்.எஸ்.எஸ். வகுத்துக்கொண்டு செயலாற்றிய அரசியல் பாடத்தைத்தான் மார்க்சிய இலெனினியத்தை வழிமொழியும் புரட்சிவயக் கட்சியினரும் பேசினர்.

இந்திய நாடு என்றும், இந்தியச் சமூகம் என்றும் அளவிடத் தொடங்கினர்.

இந்தியா எப்படி ஒரு நாடாகும்? தேசமாகும்? ஒற்றைச் சமூகமாகும்? - என்று பலமுறை நாம் உள்ளிட்டுப் பலரும் இடித்துக் கேள்வி எழுப்பியும் அவர்கள் மாறுவதாயில்லை, மாற்றிக் கொள்வதாயுமில்லை.

இந்தியப் புரட்சி நடக்கும் என இலவுகாத்துக் கிடந்தனர்; கிடக்கின்றனர்.

இந்திய அளவில் கட்சியை 'இந்தியப் பொதுவுடைமைக் கட்சி' - என்று வைத்துக்கொண்டனர்.

1925-இல் இ.பொ.க. தொடங்கப்பட்ட போதான இந்தியா வேறு, 1947-க்குப் பிறகான இந்தியா வேறு, 1980-களுக்குப் பிறகான இந்தியா வேறு. ஆக முதலாளிய அதிகார அரசு எதை நாடு என்று காட்டுகிறதோ, எதைச் சமூகம் என்று கூறுகிறதோ அதைத்தான் புரட்சிவயக் கட்சிகளும் நாடு என்றும், சமூகம் என்றும் அடையாளப்படுத்திக் கொள்ளும் என்றால் அது என்ன வகை இயங்கியல்.

அந்த அந்த மொழித் தேசங்கள் அளவில் கட்சிகளைக் கட்ட வேண்டும் எனத் தோழர் தமிழரசன், புலவர் கலியபெருமாள் எல்லாம் விரிவாகத் தருக்கமிட்டுத் தமிழ்நாட்டளவில் கட்சி கட்டிய போதெல்லாம் மா.இலெ.வினர் உள்ளிட்ட இ.பொ.க.வினர் அது 'முதலாளிய தேசிய வாதம்' - என இழித்துரைத்தனர்.

இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்றவர்கள் அச் சிறைக்கூடத்தை உடைத்திடுவது குறித்து எந்தத் திட்டத்தையும் முன்வைத்ததில்லை.

ஆக இப்படியான சூழலில் தமிழ்த்தேச அரசியல் ஏன் செழுமைப்படவில்லை, மக்கள் விடுதலைக்குரிய வகையில் ஏன் வழி அமைத்திடவில்லை, உழைக்கும் மக்களுக்கானதாக ஏன் திட்டமிடப்படவில்லை, சாதி ஒழிப்போடு ஏன் செயல்திட்டம் கொள்ளவில்லை என்றெல்லாம் பேசுவதில் அவ்வாறு செயல்படா ததற்கு எவை காரணம் என ஆய்ந்திட வேண்டுமா வேண்டாமா?

புரட்சிவய கட்சிகளின் அரசியல் திட்டங்களும், செயல் திட்டங்களும் தமிழ்த் தேசப் புரட்சியை நோக்கி இல்லாததே காரணம்.

தேசிய விடுதலைப் புரட்சி என்பது ஒரு மக்கள்(சன)நாயகக் கோரிக்கை அதை ஆதரிப்போம் - என்கிறவர்கள், அதை முன் னெடுத்து வழிநடத்துவோம் என முன்னுக்கு வருவதில்லை.

இந்தியா எங்கள் நாடு என்கிற குழப்பமும், இந்தியா ஒரே சமூகம் என்கிற மயக்கமுமே அவர்களைத் தமிழ்த் தேசப் புரட்சியை மறுத்து இந்தியப் புரட்சிக்காகக் காத்திருக்க வைத் திருக்கிறது.

இந்தியா என்பது நாடல்ல, இந்தியா என்பது ஒற்றை சமூகமும் அல்ல என ஓங்கி ஒலித்து, தேசிய இன அளவில் கட்சிகளைக் கட்டிப் புரட்சிவய அரசியல் - செயல்திட்டங்களை முன்னெடுத்திடும் போதே புரட்சிகர செயற்பாடுகள் முன்னுக்கு நகரமுடியும். தமிழ்த் தேச அரசியலும் அதன் விடுதலைக்குரிய போர்க்களத்தைக் காணமுடியும்.

அத்தகைய வழித்தடத்தை முன்னெடுப்பதற்கான நிலையில் ஆய்வு செய்வதும், முன்னெடுத்து நடத்த வேண்டிய கடமையை மேற்கொள்ளுவதுமே இன்றைக்குத் தமிழக மக்கள் புரட்சியின் மீது நம்பிக்கையுடைய தமிழ்த் தேச இயக்கங்களின், புரட்சிவய மார்க்சிய இலெனினிய இயக்கங்களின், ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்புக்கொண்ட திராவிட இயக்கங்களின் கடமை என்பதை உணரவேண்டும்.

அத்தகைய கடமையோடு அவை கட்டமைத்து செயல்படுகிற முன்னணிப் படையே இந்தியத்தை இடித்து உடைக்கும். பன்னாட்டு நிறுவன முதலாளியத்தை அடிசாய்க்கும், சாதியை, ஆரியப் பார்ப்பனியத்தைக் கருவறுக்கும் என்பதை உணர் வோம்! உணர்த்துவோம்! உயிர்ப்போடு போராடுவோம்! ❖

## க.இளவரசி மறைவு



மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் நெய்வேலி நகரப் பொறுப்பாளர் இரா.கல்யாண சுந்தரம் அவர்களின் துணைவி க.இளவரசி அவர்கள் 21.5.18 திங்கள் அன்று மறைவுற்றார். பி.அறிவழகன், மு.பால குருசாமி, துரை. சித்தார்த்தன், ஆ.வந்தியத்தேவன், பா.மோகன் ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் கூறினர். அங்கு நடைபெற்ற இரங்கள் கூட்டத்தில் உரை ஆற்றினர். அன்னாரை இழந்து துயரும் இரா. கல்யாண சுந்தரம் அவர்களுக்கும் அவருடைய இளவல் இரா.வாழைச் செல்வன் அவர்களுக்கும் அன்னையை இழந்து வாடும் தமிழ், புகழ் ஆகியோருக்கும் ம.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பகுத்தறிவுவாதியும் பேராசிரியருமான சவுரிபாளையம் பழனிச்சாமி தங்கவேலு மறைவு

## (22.07.1957 - 07.05.2018)

தில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் ச.ப.தங்கவேலு 07.05.2018இல், திங்கட்கிழமை அன்று காலையில் தில்லியில் தனியார் மருத்துவமனையில் மறைந்தார். இத்துயரச் செய்தியை, அப்போதே புதுதில்லியிலிருந்து தோழர்கள் லெனின் வினோபர், ப. இராமமூர்த்தி இருவரும் எனக்குத் தெரிவித்தனர்.

1987 முதல் 2017 பிப்ரவரி வரையில் அவரோடு நெருங்கிப் பழகியவர், வே. ஆனைமுத்து.

1978க்குப் பிறகு, 2017 வரையில் அடிக்கடி நானும் கட்சித் தோழர்களும் ஆண்டுக்கொருமுறை நீண்ட நாள் தில்லியில் தங்கிப் பணியாற்றுவதை வழக்க மாகக் கொண்டிருந்தோம். 1986-87களில், மாதக் கணக்கில், தில்லி நேரு நினைவு நூலகத்தில் படித்தேன். அந்நூலகத்தில், 1987இல், ஒருநாள், வேறு நூல்களைத் தேடிக்கொண்டு இருந்தேன். கொஞ்சம் எட்டத்தில், நான் எழுதிய நூல்கள், அந்நூலகத்தில் இருப்பதைப் பார்த்து உடனே அங்கிருந்த தங்கவேலு, என்னிடம் வந்தார். அப்போது, அவர் எங்கே பணியில் இருந்தார் என்பது எனக்குத் தெரியாது.

1990க்குப் பிறகு, நானும் தோழர் சங்கமித்ராவும் எப்போது தில்லிக்குப் பயணம் போனாலும், தில்லி வடவேங்கடவன் கல்லூரி ஆசிரியர் குடியிருப்பில், பேராசிரியர் தங்கவேலு குடியிருந்த, 2A எண் கொண்ட வீட்டில் அவரோடு தங்கியிருந்தோம். எத்தனை நாள் கள் தங்கினாலும் நாள்தோறும் காலை சிற்றுண்டியும் இரவு உணவும் தங்கவேலு அவர்கள் வீட்டில் இருவரும் உண்போம். சில சமயங்களில், என்னுடன் கலச இராமலிங்கம், காவிரி நாடன் ஆகியோரும் அவருடைய வீட்டில் தங்கினர்.



தங்கவேலு வீட்டில் வே. ஆனைமுத்து, தங்கவேலு, அவருடைய நண்பர் மற்றும் தங்கவேலு பெயர் சூட்டிய காவேரியும், பவானியும்

இரண்டு தடவைகள், கோவை சிங்காநல்லூரில் தம்முடைய வீட்டில் கோடை விடுமுறைக்காக அவர் தங்கினார். அப்போது, அவருடைய குடும்பத்தார், தாயார், தம்பிகள், தங்கைகள் ஆகியோர் எனக்கு நன்றாக அறிமுகமாயினர். பேராசிரியர் தங்கவேலு அவர்களுடைய கடைசித் தங்கை திருமணத்தின் போது, தங்கவேலு அழைப்பின் பெயரில் நான் சென்றிருந்தார். தங்கவேலு, அவர்களுடைய இளமைக்கால நண்பர்கள், துரைமடங் கன், நடராசன் ஆகியோர் அன்று நன்கு அறிமுகமாயினர்.

நானும் சங்கமித்ரா இருவரும் மிக உரிமையோடு தங்கவேலு அவர்களிடம் பழகினோம். நல்ல நூல் களைத் தெரிந்து கொள்வது, அவற்றை நூலகத்துக்கு வாங்குவது என தங்கவேலு மிகவும் உதவியாக இருந்தார். ஒரு தடவை, தங்கவேலு நேர்ச்சிக்கு ஆளாகி (விபத்துக்காளாகி), மருத்துவமனையில் இருக்கும் போது, அவருடைய தம்பி பாலன் துணை தேவைப் பட்டது. எனவே, தங்கவேலு அவர்களுடைய இறுதி மூச்சு வரை பாலன், தமையனாருடன் தங்கினார்.

பக்கத்து ஆசிரியர் குடியிருப்பில் குடியிருக்கும் தமிழ்ப் பேராசிரியர் ச. சீனிவாசன் அவர்களும் முதலாம் வீட்டிலிருந்த தெலுங்கு நாட்டுப் பேராசிரியர் ஒருவரும் அன்றாடம் பேராசிரியர் தங்கவேலு அவர்களைப் பார்த்து அளவளாவுவர்.

தங்கவேலு அவர்களது வீட்டுக்கு மளிகைப் பொருட் களைத் தொடர்ந்து வழங்கும் நண்பரும், தங்கவேலு அவர்கள் வீட்டு சமையல் பணிகளைச் செய்கின்ற நேபாளப் பெண்மணியும் மிகவும் அன்பானவர்கள். அங்கு வருவோர் போவோரிடம் அவர்கள் மிக அன்புடன் பழகுவார்கள்.

இரண்டு தடவைகள் பேராசிரியர் தங்கவேலு அவர்கள் சென்னை, அம்பத்தூர், பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்குப் பத்தாயிரம் ரூபாய் வீதம் நன்கொடை வழங்கினார்.

தில்லியில் இடஒதுக்கீடு மாநாடு ஒடுக்கப்பட்டோர் பேரவையினரால் நடத்தப்படும் போதும் தவறாமல் மாநாட்டுச் செலவுக்கு நன்கொடை அளிப்பார்.

தம் தாயார், தங்கைகள், தம்பிகள் ஆகிய உறவி னர்கள் பேரில் பாசத்தைப் பொழிவார். அப்படிப்பட்ட பேராசிரியர் தங்கவேலு அவர்களை, 2017 பிப்பிர வரிக்குப் பிறகு பார்க்கவே முடியாது போனது எனக்கு மிகப்பெரிய குறையாகும்.

வளர்க பேராசிரியர் ச.ப. தங்கவேலு புகழ்!

**- வே. ஆனைமுத்து**

❖

# காவிரி வழக்கில் இறுதித் தீர்ப்பு வந்துவிட்டது கர்நாடகம் தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்துவிடுமா?

க. முகிலன்

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பின் மீதான வழக்கில் இறுதியிலும் இறுதியான தீர்ப்பை உச்சநீதிமன்றம் 18.5.2018 அன்று வழங்கியது. உச்சநீதி மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நடுவண் அரசின் காவிரி மேலாண்மை ஆணையத்தின் வரைவுத் திட்டத்தை பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக அரசிதழில் வெளியிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது.




காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத மோடியே திரும்பிப்போ என்று நடத்திய கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

கிட்டத்தட்ட அய்ம்பது ஆண்டுகளாக நீடித்து வந்த காவிரி ஆற்றுநீர் பங்கீடு குறித்த சட்டச் சிக்கலுக்கு ஒரு திட்டவட்டமான தீர்வு எட்டப்பட்டுள்ளது என்ற வகையில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வரவேற்கத்தக்கதே ஆகும். அதேசமயம் காவிரி ஆற்றுநீர் உரிமையை நிலைநாட்டுவதற்காகத் தமிழக அரசும், தமிழக மக்களும் மேற்கொண்ட முயற்சிகளையும், போராட்டங்களையும் நடுவண் அரசில் இருந்த காங்கிரசுக் கட்சியும் பாரதிய சனதா கட்சியும் வஞ்சகமாக எவ்வாறெல்லாம் நீர்த்துப் போகச் செய்தன என்கிற வரலாற்றின் பின்னணியில் பார்க்கும் போது, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை பெரும் வெற்றியாகக் கருத முடியாது. காவிரி சட்டச் சிக்கலில் கடந்து வந்த சில படிநிலைகள் :

* கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி காவிரி தீர்ப்பாயம் அமைக்கக் கோரி 1971 ஆகத்துத மாதம் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.
* 1972 மே மாதம் தமிழகம் வந்த பிரதமர் இந்திரா காந்தி முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்து, காவிரிச் சிக்கலைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று உறுதியளித்ததன் பேரில் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப் பெற்றது. அதற்குமுன் கருணாநிதி அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்டி ஒப்புதல் பெற்றார்.
* 1972 சூன் 12 அன்று காவிரி உண்மை அறியும் குழு அமைக்கப்பட்டது. 1974 நவம்பர் 29 அன்று நடுவண் அரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில் நடுவண் அரசு உருவாக்கியிருந்த காவிரி ஒப்பந்த வரைவு விவாதிக்கப்பட்டது.
* பேச்சு வார்த்தைகள் பயன்தராததால் 1975இல் முதலமைச்சர் கருணாநிதி அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்டியபின், தீர்ப்பாயம் அமைக்கக் கோரி நடுவண் அரசுக்கு மடல் எழுதினார்.
* 1983 நவம்பரில் காவிரிப்படுகை உழவர்கள் சார்பில் மன்னார்குடி ரங்கநாதன், பொன்னுசாமி ரெட்டியார் இருவரும் 1956ஆம் ஆண்டின் சட்டத்தின்படி, காவிரி ஆற்றுநீர் நடுவர் மன்றம் அமைக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.
* எம்.ஜி. இராமச்சந்திரன் 1977இல் முதலமைச்சரான பின் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் பயன் தராததால், 1986 நவம்பரில் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் ரங்கநாதன் வழக்கில் தன்னையும் இணைத்துக் கொண்டது.
* 1989இல் முதலமைச்சரான பின் கலைஞர் கருணாநிதி கர்நாடகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் பயன் ஏற்படாததால், நடுவர் மன்றம் அமைக்கக் கோரி நடுவண் அரசுக்கு மடல் எழுதினார். மேலும் நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படியை நடுவண் அரசின் வழக்குரைஞர் மூலமாக உச்சநீதிமன்றத்தின் பார்வைக்கும் அனுப்பினார்.
* பேச்சுவார்த்தையால் பயனில்லை என்று வி.பி. சிங் அரசு உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தது. அதன் பின் 1990 மே 4 அன்று உச்சநீதிமன்றம் காவிரி நடுவர் மன்றம் அமைக்குமாறு ஆணையிட்டது.

* 1990 சூன் 2 அன்று மூன்று நீதிபதிகள் கொண்ட காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

* 1991 சனவரி சனவரி 10 அன்று காவிரி நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பித்தார்.

* 1991 சனவரி 31 அன்று அரசியல் காரணங்களுக்காக தி.மு.க. ஆட்சிக் கலைக்கப்பட்டது.

* 1991 சூன் 25 அன்று நடுவர் மன்றம் இடைக் காலத் தீர்ப்பை வழங்கியது.

* **1990க்கு முற்பட்ட 50 ஆண்டுகளில் கர்நாடகத்திலிருந்து மேட்டூர் அணைக்கு ஆண்டிற்கு சராசரியாக 361 டி.எம்.சி. நீர் பெறப்பட்டது. அதிக நீர் மற்றும் குறைவான நீர்வரும் ஆண்டுகளைக் கழித்துவிட்டு, சராசரியில் கணக்கிட்டால் ஆண்டிற்கு 305 டி.எம்.சி. வந்தது. இதுவே தமிழ்நாட்டு அரசின் காவிரி நீர் உரிமையின் கோரிக்கையாக இருந்தது. ஆனால் அதைவிட 100 டி.எம்.சி. நீரைக் குறைத்து 205 டி.எம்.சி. நீரைக் கர்நாடகம் தரவேண்டும் என்று இடைக்காலத் தீர்ப்பில் கூறப்பட்டது. 1980 முதல் 1990 வரையிலான காலத்தில் கர்நாடகத்திலிருந்து பெறப்பட்ட நீரின் சராசரி அடிப்படையில் 205 டி.எம்.சி. என்று நிர்ணயித்ததாக நடுவர் மன்றம் கூறியது. இது தமிழகத்துக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமாகும்.**

* 1991 சூலையில் முதலமைச்சர் செயலலிதா காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நடுவண் அரசின் அரசிதழில் வெளியிட வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

* உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி, 1991 திசம்பர் 10 அன்று நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பு நடுவண் அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது.

* இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகம் தண்ணீரைத் திறந்துவிடக்கோரி முதலமைச்சர் செயலலிதா 1993 சூலை 18 முதல் மூன்று நாள்கள் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் உண்ணாநோன்பு இருந்தார்.

* 2007 பிப்பிரவரி 5 அன்று காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியானது. இதில் தமிழகத்திற்கான நீரின் அளவு 192 டி.எம்.சி.யாகக் குறைக்கப்பட்டது. இதிலிருந்து புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. நீர் தமிழகம் தரவேண்டும்.



காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேரணி

* 2012 ஏப்பிரல் 17 அன்று நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக்கோரி முதலமைச்சர் செயலலிதா உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

* 2013 பிப்பிரவரி 20க்குள் அரசிதழில் வெளியிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டதால், மன்மோகன் சிங் தலைமையிலான நடுவண் அரசு 2013 பிப்பிரவரி 19 அன்று இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது.

* 2007 பிப்பிரவரி 5 அன்று நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பு தொடர்பாக தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தன. 2016 அக்டோபர் 18 அன்று இவற்றை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

* 2017 பிப்பிரவரி முதல் தொடர்ந்து விசாரணை நடைபெற்ற இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் 16.2.18 தீர்ப்பு வழங்கியது.

மேலே தரப்பட்டுள்ள முதன்மையான குறிப்புகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக காவிரி ஆற்றுநீர் மீது தமிழகம் பெற்றிருந்த உரிமையை, இந்திய அரசு கர்நாடக மாநில அரசை இளைய கூட்டாளியாக வைத்துக் கொண்டு எவ்வாறெல்லாம் வஞ்சிக்க முயன்றது என்பதைப் புரிந்து கொள்வதற்காகவே தரப்பட்டுள்ளன.

1924இல் அன்றைய சென்னை மாகாண அரசுக்கும் மைசூர் மன்னராட்சிக்கும் இடையில் ஏற்பட்ட காவிரி நீர் ஒப்பந்தப்படி, மைசூரில் கிருஷ்ணராஜசாகர் அணையும், சென்னை மாகாணத்தில் 1934இல் மேட்டூர் அணையும் கட்டப்பட்டன. அய்ம்பது ஆண்டுகள் கழித்து - அதாவது 1974இல் இந்த ஒப்பந்தம் குறித்து மறு ஆய்வு செய்யப்படும் என்று 1924 ஒப்பந்தத்தில் எழுதப்பட்டது.

காங்கிரசு ஆட்சியின்கீழ் இருந்த கர்நாடக அரசு 1924இன் ஒப்பந்தப்படி, தமிழ்நாட்டு அரசின் அனுமதி யைக் கேட்காமல், 1960களில் ஹேமாவதி, ஹாரங்கி, கபினி ஆகிய அணைகளைக் கட்டிக்கொண்டது. தமிழ் நாட்டை ஆண்டு கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியும் கர்நாடகத்தில் புதிய அணைகள் கட்டுவதைத் தடுக்கத் தவறிவிட்டது. இதனால் கர்நாடகத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் நீரின் அளவு குறைந்தது.

இந்தப் பின்னணியில் 1970 முதல் தமிழ்நாட்டு அரசு, தமிழகத்துக்கான காவிரி உரிமையை மீட்டெடுப் பதற்காக முயற்சிகளை மேற்கொண்ட போதெல்லாம் தில்லி ஆட்சியாளர்கள் தமிழ்நாடும் கர்நாடகமும் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என்று திசைத்திருப்பி இழுத்தடித்தனர். 1967இல் தமிழகச் சட்டமன்றத்துக்கு நடந்த தேர்தலில் காங்கிரசு தோற்றது. தி.மு.க. ஆட்சி அமைத்தது. அதுமுதல் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய திராவிடக் கட்சிகளே தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்து வருகின்றன. அதனால் காங்கிரசுக் கட்சிக்குக் கர்நாடகத்தில் ஆட்சியில் நீடிக்க வேண்டிய கட்டாயத் தேவை இருந்தது. அதனால் தமிழகத்தின் நியாயமான காவிரி உரிமையைப் புறக்கணித்து, கர்நாடகத்துக்குச் சார்பான நிலைப்பாட்டையே தில்லியில் ஆட்சியில் இருந்த காங்கிரசுக் கட்சி மேற்கொண்டது. இந்திய நாட்டின் பிரதமர்களிலேயே தமிழ்நாட்டின் உரிமைக்கு நியாயமாக நடந்து கொண்டவர் வி.பி. சிங் மட்டுமே ஆவார்.

கர்நாடகத்தில் எந்தக் கட்சி ஆண்டாலும், யார் முதலமைச்சராக இருந்தாலும் தமிழ்நாட்டுக்குரிய காவிரி நீர் உரிமையை மறுப்பதில் ஒத்த கருத்தையே கொண்டிருந்தனர். தமிழகத்துக்குத் தண்ணீர் தரக் கூடாது என்று கர்நாடகத்தில் கலவரங்களைத் துண்டி விடுவது. உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இழுத்தடிப்பது என்பது கர்நாடக அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. இதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் கன்னட அமைப்புகளும் ஒரே குரலில் ஒத்து ஊதின. நடுவண் அரசு, கர்நாடகத்தில் தன் கட்சியின் அரசியல் ஆதாயத்தைக் கருதி, கர்நாடக அரசின் அட்டூழியங் களுக்குத் துணை நின்றது. மேலும் தில்லியில் உள்ள மேல்சாதி உயர் அதிகார வர்க்கம் தமிழினப் பகை உணர்வுடன் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதில் ஈடுபட்டு வருவதும் ஒரு காரணமாகும்.

இக்காரணங்களால் காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை 1970இல் தமிழ்நாடு அரசு முன்வைத்த போதிலும், இருபது ஆண்டுகள் கழித்து, 1990இல்தான் நடுவண் அரசு காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தது. அதுவும்கூட உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியதால் அமைத்தது. 1991 சூன் 25 அன்று வழங்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பில் தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. நீரை மாத வாரியாக எவ்வளவு திறந்துவிட வேண்டும் என்று கூறப்பட்டிருந்த போதிலும், கர்நாடகம் இதை நடைமுறைப்படுத்த முடியாது என்று சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றியது. மீண்டும் உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பேரில் நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை பி.வி. நரசிம்மராவ் ஆட்சி 1991 திசம்பர் 10 அன்று அரசிதழில் வெளியிட்டது. இதை எதிர்த்து கர்நாடகத்தில் வாழ்ந்த தமிழர்கள் மீது கன்னட வெறி யர்கள் கொடுந் தாக்குதலை நடத்தினர்; அவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன; ஒரு இலட்சம் தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து வெளியேறி தமிழகம் வந்தனர். கன்னட வெறியர்கள் தமிழர்கள் மீது நடத்திய தாக்குதலை நடுவண் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

2007 பிப்பிரவரி 5 அன்று வழங்கப்பட்ட நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அரசிதழில் வெளியிடாமல் நடுவண் அரசு தவிர்த்து வந்தது. உச்சநீதிமன்றம் காலக்கெடு விதித்த பிறகுதான், 2013 பிப்பிரவரி 19 அன்று அரசி தழில் வெளியிட்டது. ஆனால் இந்த இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கான அதிகாரம் படைத்த காவிரி மேலாண்மை வாரியத்தை 2014 மே வரையில் ஆட்சியில் இருந்த மன்மோகன் சிங் அரசு அமைக்க வில்லை.

2014 மே மாதம் தனிப்பெரும்பான்மையுடன் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்ற நரேந்திர மோடி ஆட்சியும் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வில்லை. 2016 செப்டம்பர் 29 அன்று உச்சநீதிமன்றம், நடுவண் அரசு நான்கு கிழமைகளுக்குள் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்று காவிரி வழக்கில் இடைக்கால ஆணையிட்டது. ஆனால் நரேந்திர மோடியின் ஆட்சி, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மீது முடிவு எடுக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு இல்லை; நாடாளுமன்றத்துக்குத் தான் உண்டு என்று ஆணவத்துடன் பதில் சொன்னது. மேலும் ஒவ்வொரு ஆற்றுநீர்ப் பங்கீட்டுக்கும் தனித் தனி வாரியங்கள் இருப்பதற்குப் பதிலாக, நாடு முழு வதற்கும் நீர்ப்பங்கீட்டுக்கென்று ஒரே வாரியம் கொண்டு வரும் திட்டத்தை மோடி ஆட்சி முன்மொழிந்தது. அதன்மூலம் காவிரி மேலாண்மை வாரியத்தைக் குழிதோண்டிப் புதைக்க எண்ணியது. ஆனால் ஒரே வாரியம் என்கிற திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

2007இல் வெளியிடப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தொடர்பாக தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநில அரசுகள் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தன. பல்வேறு வகை

யான சட்டச் சிக்கல்கள், காலத்தாழ்வுகளுக்குப்பின் 2016 அக்டோபர் மாதம் இம்முறையீடுகள் ஒரே வழக் காக ஏற்கப்பட்டன. 2017 பிப்பிரவரி முதல் உச்சநீதி மன்றத்தில் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கான்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு 16.2.2018 அன்று இறுதித் தீர்ப்பை வழங்கியது.

அத்தீர்ப்பில் தமிழகத்துக்கு 2007ஆம் ஆண்டின் நடுவர் மன்றத் தீர்ப்பில் வழங்கப்பட்ட 192 டி.எம்.சி. நீரில் 14.75 டி.எம்.சி. குறைந்து 177.25 டி.எம்.சி. மட்டுமே வழங்கப்பட்டது. 1990 வரையில் சராசரியில் 360 டி.எம்.சி. காவிரி நீரைப் பெற்றுவந்த தமிழகத் துக்கு, தொடர்ச்சியாக இழைக்கப்பட்ட வஞ்சகத்தால் அதில் பாதிக்கும் கீழாகக் குறைப்பட்ட கொடுமை நேர்ந்துள்ளது. இவ்வாறு தமிழகத்திற்கு உரிய நீரின் பங்கு குறைக்கப்பட்டதற்கு உச்சநீதிமன்றம் கூறியுள்ள காரணம் இன்னும் கொடுமையானதாகும்.

வேகமான தொழில் வளர்ச்சி பெற்றுள்ள பெங்களூரு நகரத்திற்கு 4.75 டி.எம்.சி. ஒதுக்கப்படுவதாகக் கூறப் பட்டுள்ளது. சென்னை நகரம் பெங்களூருவைவிட தொழில் வளர்ச்சி பெற்ற பெரிய நகரம் என்பதையும், காவிரியிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது என்பதையும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் வசதியாக மறந்துவிட்டனர். மீதி 10 டி.எம்.சி. நீரைக் காவிரிப் படுகையில் நிலத்தடியில் உள்ள 20 டி.எம்.சி. நீரிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. காவிரி ஆற்றில் பாயும் நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்துதான் இந்த வழக்கு; இதில் நிலத்தடி நீரை இணைப்பது வஞ்சகச் செயலாகும்.

உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று வழங்கிய தீர்ப்பில் ஆறு கிழமைகளுக்குள் காவிரி நடுவர் மன்றத் தின் இறுதித் தீர்ப்பையும், அதில் உச்சநீதிமன்றம் செய்துள்ள மாற்றத்தையும் (தமிழகத்துக்கு நீரின் அளவைக் குறைத்தது) செயல்படுத்துவதற்கான ஒரு வரைவை உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. காவிரி மேலாண்மை வாரியம் என்று நேரடியாக உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்படாமை தமிழர்களிடையே அய்யத்தை ஏற்படுத்தியது. கடந்த காலங்களில் வஞ்சிக்கப்பட்ட நிகழ்வுகளை மனதில் கொண்டு அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் காவிரி நடுவர் மன்றம் வகுத்துள்ளபடி, காவிரி மேலாண்மை வாரியம் என்பதையே அமைக்க வேண்டும் என்று நடுவண் அரசுக்குக் கோரிக்கை வைத்து, தொடர்ந்து பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தின.

உச்சநீதிமன்றம் அளித்த கால எல்லை 29.3.18 அன்றுடன் முடிவடைந்தது. நடுவண் அரசு அதுவரை



தமிழமெங்கும் தொடர்வண்டி மறியல் போராட்டங்கள் நடந்தன.

அறிக்கை அளிக்கவில்லை. தமிழ்நாட்டு அரசு நடுவண் அரசுமீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்ந்தது. அதே நாளில் நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பம் அளித்தது. உச்சநீதிமன்றத் தீர்ப்பில் உள்ள "ஒரு செயல் திட்டம்" (A Scheme) என்பதற்கு என்ன பொருள் என்று விளக்கம் கேட்டிருந்தது. கர் நாடகத்தில் தேர்தல் நடைபெறுவதால், காவிரிச் சிக்கல் கர்நாடகத்தில் உணர்வுப்பூர்வமானதாக இருப்பதால், மேலும் மூன்று மாதங்கள் காலநீட்டிப்பு வழங்க வேண்டும் என்று கோரியது.

"நான் அடிப்பதுபோல் அடிக்கிறேன்; நீ அழுவது போல் அழு" என்பதுபோல் ஆறு வாரங்களுக்குள் செயல்திட்ட அறிக்கை அளிக்காததற்காக நடுவண் அரசை உச்சநீதிமன்றம் கடிந்து கொள்வதாகக் காட்டிக் கொண்டது. இக்கோரிக்கையை அவசர வழக்காக விசாரிக்க முடியாது என்று கூறி இதன் மீதான விசார ணையை 9-4-2018க்கு ஒத்தி வைத்தது. 9.4.2018 அன்று உச்சநீதிமன்றம் மே மாதம் 3ஆம் நாளுக்குள் வரைவுத் திட்டத்தை அளிக்க வேண்டும் என்று நடுவண் அரசுக்கு ஆணையிட்டது. நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்தபின் நிலவும் அரசியலைப் புரிந்தவர்கள் மே 12இல் கர்நாடகச் சட்டமன்றத் தேர்தல் நடப்பதற்கு முன்பாக நடுவண் அரசு காவிரி வரைவுத் திட்டத்தை அளிக்காது என்று கூறினர்.

மே 3 அன்று உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசின் தலைமை வழக்குரைஞர் கே.கே. வேணுகோபால், "வரைவு செயல்திட்டம் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும். பிரதமரும் அமைச்சர்களும் கர்நாடகத் தேர்தல் பிரச்சாரத்தில் இருப்பதால் இந்த வழக்கு விசாரணையை தேர்தலுக்கு மறுநாள் எடுத்துக் கொள்ளலாம்" என்று வாதிட்டார். நீதிபதிகள் நடுவண் அரசு மே 8 அன்று வரைவு அறிக்கையை அளிக்க வேண்டும் என்று ஆணை

யிட்டனர். மே 8 அன்றும் உச்சநீதிமன்றமும் நடுவண் அரசும் இணைந்து இதே நாடகக் காட்சியை அரங் கேற்றின. மே 14 அன்று நீர்வளத்துறைச் செயலாளர் செயல்திட்ட அறிக்கையுடன் உச்சநீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேர் நிற்க வேண்டும் என்று நீதிபதிகள் ஆணையிட்டனர்.

14.5.2018 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கான்வில்கர், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நடுவண் அரசின் நீர் வளத்துறைச் செயலாளர் யு.பி. சிங் 14 பக்கங்கள் கொண்ட செயல் திட்ட வரைவு அறிக் கையை மூடி முத்திரையிடப்பட்ட உறையில் அளித்தார். காவிரி மேலாண்மை அமைப்புக்கு வாரியம் அல்லது ஆணையம் அல்லது அமைப்பு என்று பெயரிடும் பொறுப்பை உச்சநீதிமன்றத்தின் முடிவுக்கு விடுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. காவிரி மேலாண்மை அமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே ஒரு முடிவை எடுக்க முடியாத நிலையில் நடுவண் அரசின் உதவியை நாடலாம். அந்நிலையில் நடுவண் அரசு எடுக்கும் முடிவே இறுதியானது; அனைவரும் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று கூறப்பட்டி ருந்தது. மேலாண்மை அமைப்பின் தலைமையிடம் பெங்களூருவில் இருக்கும். நான்கு மாநில அரசு களுக்கும் நடுவண் அரசின் அறிக்கை அளிக்கப்பட்டது. அதன்மீதான அவர்கள் கருத்தை 16.5.2018 அன்று உச்சநீதிமன்றத்தில் அறிக்கையாக அளிக்குமாறு உச்சநீதிமன்றம் கூறியது.

16.5.2018 அன்று உச்சநீதிமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, காவிரி மேலாண்மை வாரியம் என்று பெயரிடுவதில் நடுவண் அரசுக்கு மாற்றுக் கருத்து இல்லை என்று வேணுகோபால் தெரிவித்தார். புதுச்சேரி மாநில வழக்குரைஞர், இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் நடுவண் அரசிடம் இருக்கக் கூடாது என்று கூறியதை நீதிபதிகள் ஏற்றுக்கொண்டனர். அதேபோல் காவிரி மேலாண்மை அமைப்பின் தலைமையகத்தைப் புதுதில்லிக்கு மாற்ற முடிவு செய்தனர். இந்த மாற்றங் களை உள்ளடக்கிய வரைவை நடுவண் அரசு 17.5.18 அன்று அளித்தது. அதில் காவிரி மேலாண்மை ஆணையம் என்று பெயர் இடப்பட்டிருந்தது. வாரியம் என்ற சொல்லை இறுதி வரையில் நடுவண் அரசு ஏற்கவில்லை. இதை ஏற்று 18.5.2018 அன்று உச்ச நீதிமன்றத்தின் அமர்வு இறுதித் தீர்ப்பை வழங்கியது.

முதலில் இந்த இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளி யிடப்பட வேண்டும். தென்மேற்குப் பருவமழை வழக்க மாகத் தொடங்கும் சூன் முதல் நாளுக்கு முன்பாக காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றை நடுவண் அரசு அமைக்க வேண்டும். ஆனால் 30.5.18 அன்று வரையில் நடுவண் இதற் கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆணையத்தின் தலைவராக நடுவண் அரசின் நீர்வளத் துறையின் மூத்த அதிகாரி, அல்லது மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி இருப்பார் என்று இப்போது கூறப் பட்டுள்ளது. நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பில் நீர்ப் பாசனத் துறையில் 20 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த பொறியாளர் வாரியத்தின் தலைவராக அமர்த்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையம் முற்றிலுமாகத் தன்னாட்சி அதிகாரம் கொண்டது என்று குறிப்பிடப் படவில்லை. காவிரி நீர் சேமிப்பு, பங்கீடு, ஒழுங்கு படுத்தல் மற்றும் கட்டுப்பாடு, நீர்த் தேக்கங்களின் மேற்பார்வை அதிகாரம் ஆகியவற்றுக்கான அதிகாரம் மேலாண்மை வாரியத்திடம் வழங்கப்பட்டுள்ளது. அதேசமயம் நீர்த் தேக்கங்களை இயக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளிடமே இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே மேலாண்மை வாரியம் நீர் திறந்து விடுவது குறித்துப் பிறப்பிக்கும் ஆணையின் படி கர்நாடகம் அணைகளிலிருந்து நீரைத் திறந்து விடுமா? என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது. பியால் ஆற்றின் குறுக்கே இருக்கும் அனைத்து அணைகளும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பக்ரா-பியால் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதுபோல் காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு ஏன் அதிகாரம் வழங்கப்படவில்லை?

எனவே 2018 சூன் முதல் திசம்பர் வரையில் காவிரி மேலாண்மை வாரியத்தின் ஆணையின்படி கர்நாடகம் நீரைத் திறந்துவிடுகிறதா என்பதைப் பார்த்த பிறகே இறுதித் தீர்ப்பின் வெற்றியைக் கணிக்க முடியும்! ❖

## கோவையில் பெரியாரியியல் பயிலரங்கு



தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கோவையில் பெரியாரியல் பயிலரங்கு 27.5.2018 ஞாயிறு காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. வாலாசா வல்லவன் திராவிடர் இயக்கத்தின் வரலாறு, போராட்டங்கள், சாதனைகள் என்ற தலைப்பில் இரு வேளைகளிலும் பாடம் நடத்தினார். இளைஞர்கள் ஆர்வமுடன் பாடம் கேட்டனர். செய்தி : **கா. சோமு**

# நாகாலாந்து சுட்டும் உண்மைகள்

- குட்டுவன்

இந்தியா ஒரு நாடன்று. பல்வேறு தேசிய இனங்களையும் மொழிகளையும் பல்வேறு நம்பிக்கைகளையும் மதங்களையும் வாழ்க்கை பண்பாட்டு முறைகளையும் கொண்ட ஒரு துணைக்கண்டம் ஆகும்.

இந்தியாவின் மீது படையெடுத்த பல்வேறு இனங்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் முழுப் பகுதியையும் தங்களின் ஆட்சிகளுக்குக்கீழ் கொண்டு வர முடியவில்லை. போர்ச்சுக்கீசிய பிரெஞ்சு டச்சு ஆங்கிலேய குழுமங்கள் இப்பகுதியை வணிக நோக்கத்திற்காகப் பயன்படுத்திப் பின்பு பல பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்ததை வரலாறு தெளிவாகச் சுட்டுகிறது. இந்தக் குழுமங்களுக்குள் நடைபெற்ற சண்டைகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் ஏற்பட்ட சில அமைதி ஒப்பந்தங்கள் காரணமாக இங்கிலாந்து தனது பேராதிக்கத்தை இந்தியத் துணைக்கண்ட பகுதிகளில் நிறுவியது.

சான்றாக 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலோ-பிரெஞ்சு போர் நடைபெற்ற போது இங்கிலாந்து நாட்டினால் அமெரிக்க சுதந்திரப் போரைச்சந்திக்க முடியவில்லை. நான்காண்டுகளில் 40 போர்கள் நடத்திய இந்த இரு நாடுகள் ஓர்அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் சூழல் உருவாகியது. அப்போது கடலூரும் பாண்டிச்சேரியும் பிரான்சின் கட்டுப்பாட்டில் இருந்தன. கடைசி வரை கடலூரை பிரெஞ்சுப் படையிடம் இருந்து ஆங்கிலப் படை கைப்பற்ற முடியவில்லை. பிரான்சு நாட்டின் இராணுவ உயரதிகாரியான அன்ட்ரிடு சப்ரின் என்பவர் தமிழ்நாட்டின் கடலோர எல்லைப் பகுதிகளைக் கைப்பற்றப் போரிட்டார். இந்த அமைதி ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால் இன்றைய தமிழ்நாட்டின் பகுதிகள் பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு உட்பட்டுஇன்றைய தமிழ்நாடு நேரடியாக விடுதலை பெற்றிருக்கலாம். ஆங்கிலோ-பிரெஞ்சு ஒப்பந்தத்தின்படி கடலூர் இங்கிலாந்து நாட்டிற்கும் பாண்டிச்சேரி பிரான்சுக்கும் அளிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் கடலூர் துறைமுகத்தை பாதிக்கும் அளவிற்கு பாண்டிச்சேரியில் ஒரு துறைமுகம் அமைக்கக் கூடாது என்று ஒரு விதியும் இணைக்கப்பட்டது. இதன்காரணமாகத்தான் இன்று கூட பாண்டிச்சேரியில் ஒரு துறைமுகம் ஏற்படவில்லை.

இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் காலனி ஆதிக்கத்திற்கு எதிராகப் போர் தொடுத்த போது, இன்றைய இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், நாகாலாந்து, மிசோரம், மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, சிக்கிம் ஆகியன 1947இல் இந்தியாவைவிட்டு வெள்ளையர் வெளியேறிய போது சுயாட்சிப் பகுதிகளாக விளங்கின. குறிப்பாக தனிநாடு கோரிக்கையை இறுதி வரை வலியுறுத்திய நாகாலாந்தின் பழங்குடி இனத்தைச்சார்ந்த இங்கிலாந்தில் கல்வி கற்ற அங்காமி சபு பிசோ இங்கிலாந்து இந்தியாவைவிட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டவுடன் மேற்கூறிய இன்றைய மாநிலங்களில் உள்ள பல மலைவாழ் இனக்குழுக்களுடன் பேசி ஓர் ஒப்பந்தத்தின் வழியாகத் தனித்தனி நாடுகளாக இயங்கலாம் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இந்தக்கோரிக்கை வெற்றி பெறாமல் போகவேதான் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முதல் நாள் ஆகஸ்ட் 14 1947இல் நாகாலாந்தைத் தனிநாடாக அறிவித்தார்.

1951-52 ஆண்டுகளில் நேருவைச் சந்தித்து தனது தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தினார். இந்த நடவடிக்கைகள் தோல்வியுற்ற பிறகு இங்கிலாந்து நாட்டில் அடைக்கலம் புகுந்த பிசோ தனது 86ஆம் வயதில் 1990 இல் மறைந்தார். இறுதிவரை நாகாலாந்து தனிநாடு என்ற கோரிக்கையை அவர் கைவிடவே இல்லை. இதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு நாகலிம் (NSCN- The National Socialist Council of Nagaland) கோரிக்கையைத் தொடர்ந்து ஐசக்ஷிசி' சூ மற்றும் முய்வா (Isak Chishi Swu and Thuingaleng Muivah) இணைந்து தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தினர். இன்றைக்கு நாகாலாந்து இனக்குழுக்களில் பலர் படித்துப் பெரும் பொறுப்புகளில் இந்திய அளவில் உள்ளனர். இருப்பினும் இவர்கள் தங்களுடைய தனித்த அடையாளத்தை உறுதி செய்வதற்கு தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர். மக்கள் தலைவர் என்று போற்றப்பட்ட மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர் ஜெயப்பிரகாஷ் நாரயண் ஒருவர்தான் நாகாலாந்து பகுதிகளுக்கு முழு அளவில் பயணம் செய்து நாகாலாந் தில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் என்ற நூலை எழுதினார். அந்நூலில் நம் நாட்டிற்கு இந்தியா என்று பெயர் வருவதற்கு முன்பிருந்தே நாட்டின் கிழக்குப் பகுதியில் இந்தப் பழங்குடிகள் வசித்து வருகின்றனர் என்று குறித்துள்ளார். ஷில்லாங் நாளேட்டின் ஆசிரியரான பேட்ரீசியா முகிம் எழுதிய கட்டுரையை இந்து ஆங்கில நாளிதழ் மே 9 2018 அன்று வெளியிட்டுள்ளது. இக்கட்டுரையில்தான் ஜெயப்பிரகாஷ் நாரயண் கருத்தும் இடம் பெற்றுள்ளது.

இக்கட்டுரையில் எல்லாப் பிரச்சினைகளையும் இந்திய அரசியல் சட்டப்படித்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று முரட்டுப் பிடிவாதம் பிடிக்காமல் சாத்தியமான வழிகளைக் கையாளுங்கள் என்று தில்லியில் உள்ள எஜமானர்களை கேட்டுக்கொள்ள நாகர் மக்கள் குழுத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் அடிக்கடி வந்து செல்கின்றனர் என்றும் இக்கட்டுரையாசிரியர் குறித்துள்ளார். மேலும் தங்களுடைய நாட்டை இந்தியா

வுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் நாங்கள் எப்போதும் கையெழுத்திட்டதில்லை என்பதை நாகர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். தங்களின் பங்களிப்பு இல்லாமலேயே உருவான அரசியல் சட்டத்திற்குத் தங்களால் கட்டுப்பட முடியாது என்றும் நாகர்கள் கூறுகின்றனர் என்று முகிம் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில இந்து நாளிதழில் (ஏப்ரல் 25 2018)விடாமல் தொடர்ந்த பத்திரிக்கையாளர்என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. 2016 ஜுலை 29 அன்று முய்வா தில்லி நாகாலாந்து இல்லத்தில் தங்கியிருந்தார். இவருடன் கூட்டுத் தலைவராக இருந்த ஐசக் சி' சூ தில்லி மருத்துவமனையில் 86ஆம் வயதில் இறந்த போது அவருக்கு இறுதி மரியாதை செலுத்த தில்லிக்கு வந்திருந் தார். முன் அனுமதி இல்லாமல் முய்வாவிடம் பேட்டி எடுப்பது என்பது இயலாத காரியம். மேலும் காவல் துறை யின் பாதுகாப்புடனும் கடும் கட்டுப்பாட்டுடனும் உள்ள புதுதில்லி லோதி சாலையில் தங்கியிருந்தார். இதுவரை முய்வா இருமுறைதான் ஊடகங்களிடம் நாகாலாந்து மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியுள்ளார். இந்தச் செய்தியாளர் அந்த இல்லத்தில் காத்திருந்தார். 84 வயது முய்வா காவல் துறையின் உதவியுடன்தான் மகிழுந்தை விட்டு இறங்க முடிந்தது. பிறகு அவர் ஒரு பெரும் வரவேற்பறையில் அமர்ந்தார். அமர்ந்த உடன்செல்பேசி யில் அவரது உரையாடலைப் பதிவு செய்தார் செய்தி யாளர். உடனடியாக முய்வாநாகர்கள் எப்போதும் இந்திய அரசாட்சியின்கீழ் இயங்கியதில்லை. நாங்கள் தனியாகக் கொள்கை வைத்திருக்கிறோம். தனிநாட்டிற்கு உரிய உரிமையோடு கடவுச் சீட்டுகள் அளிக்கும் உரிமையை எங்களுக்குத் தரவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இந்த நேர்முக உரையாடல் சந்திப்பை ஏற்படுத்திய மூத்த அதிகாரி நீங்கள் ஒரு பத்திரிக்கையாளர் என்று கூற வேண்டாம் என்று குறிப்பிட்டார். இதற்கு காரணம் நாகாலாந்து சோசலிஸ்ட் கவுன்சில் அமைப்பிற்கும் ஒன்றிய அரசிற்கும் 2015இல் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத் தப்பட்டது. இதுவரை அந்த ஒப்பந்தத்தின் முழு அறிக்கை வெளியிடப்படவில்லை. ஆனால் சமூக வலைத்தளங் களிலும் சில ஏடுகளிலும் நாகாலிம் வைத்து ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டு பின்வரும் கோரிக்கைகள் இடம் பெற்று வருகின்றன:

1. பெரும் நாகாலாந்து மாநிலம் - Greater Nagaland அமைவதைத் தடுக்கும் செயலாக மணிப்பூர் மாநில காங்கிரசு அரசு மணிப்பூர் மாநிலத்தில் 7 புதிய மாவட் டங்களை உருவாக்க நடவடிக்கைகளை மேற் கொண்டது. இது நாகா குழுவினரோடு ஒன்றிய அரசு செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு எதிரானதாகும். இதைத் திரும்பப் பெற வேண்டும்.
2. 4 மாதங்களாக நடைபெற்ற முற்றுகைப் போராட் டத்தின் போது கைது செய்யப்பட்ட நாகா பழங் குடியினர் மாணவத் தலைவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்று உடனடியாக அவர்களை விடுதலைச் செய்ய வேண்டும்.
3. முத்தரப்புப் பேச்சினை ஒரு மாதத்தில் தொடங்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை இன்றைய பிரதமர் மோடி நடைமுறைப்படுத்த உறுதி அளித்து சில நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.

இருப்பினும் நாகாலாந்தின் 11 பகுதிகளில் நாகாலிம் அரசு இயங்கி வருகிறது. பாதுகாப்புத் துறை உள்துறை நிதித்துறை வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கும் துறை கல்வித்துறைகாடு வளர்ப்பு சுரங்கம் மதம் சட்டம் ஆகிய துறைகள் அடங்கிய ஓர் அரசு நடைபெற்று வருகிறது. இந்த 11 பகுதிகளிலும் நிர்வாகம் அதிகார பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது. நாகாலிம் அரசு ஐக்கிய நாடுகளு டைய மனித உரிமை ஆணையம் ஐக்கிய நாடுகளினு டைய பல அமைப்புகளுடனும் தொடர்பு வைத்துள்ளது. இவ்வாறாக இந்தியாவினுடைய எல்லையில் ஒரு தனித்து இயங்குகிற அரசிடம் மோடி அரசு ஒப்பந்தத்தை செய்துள்ளது. இந்தியா உண்மையான ஜனநாயக நாடாக இருந்தால் இந்த ஒப்பந்தத்தின் பிரிவு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். பிரதமர்கள் நேரு மன்மோகன் சிங் மோடி ஆகியோர் எந்த அடிப்படையில் நாகாலிம் குழுவிடம் பேசினார்கள் என்ற கருத்தையும் வெளியிட வேண்டும்.

நாடுகளின் ஏகாதிபத்தியப் பிடியில் இருந்து விடுதலை பெறும் உணர்வும் தேசிய இனப் போராட்டத்திற்கான உணர்வும் ஒத்தத் தன்மை உடையன என்று அறிஞர் எமர்சன் குறிப்பிட்டுள்ளார். நாம் எல்லோரும் ஒரு நாட்டவர் என்று மக்கள் பெறும் உணர்வுதான் ஒரு நாடாகிறது என்று எளிமையாகக் குறிப்பிடலாம். தேசிய இனம் பற்றிய-நாடு பற்றிய எல்லாக் கருத்துக்களையும் தொகுத்து ஆய்வு செய்தால் மேற்கூறிய விளக்கம்தான் சிறந்த இறுதியான முடிவு என்று கூறிவிடலாம் என்று கூட்டாட்சி இயல் அறிஞர் எரிக்சனிடம் அறிஞர் எமர்சன் விளக்கம் அளித்ததாகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இனமும் மொழியும் சுயஉரிமைக்கான அடையாளங் களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு நாடு உறுதியாக அமைகிறது. எனவே இன மொழி அடையாளங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். ஒரு நாட்டின் ஒற்றுமை நீண்ட கால வரலாற்றுப் பின்னணியோடு இனத்தின் தனித்த சிறப்புகளையும் இதற்கான இலக்கிய ஆதாரங் களையும் மக்களின் தனித்த பன்முகத் தன்மைகளையும் இணைத்துச் செல்வதுதான் கூட்டாட்சி இயலைக் கடைப்பிடிக்கிற ஒரு நாட்டிற்கு அழகாகும் என்று பல கூட்டாட்சி இயல் அறிஞர்களும் வாதிட்டு வருகின்றனர். எனவே இந்தியாவில் எவ்வகை கூட்டாட்சி அமைய வேண்டும் என்பதை இறுதி முடிவெடுக்கும் காலம்

விரைந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை. இத்தனை ஆண்டுகள் மாநில உரிமை பாதுகாக்கப்படா ததற்கு மாநிலக் கட்சிகளின் அரசியல் தலைமையே காரணம் என்று பல அரசியல் அறிஞர்கள் குறிப்பிடு கின்றனர். இதுவரை ஒன்றிய அரசின் பொறுப்பில் நீதிபதி சர்க்காரியா குழு (1983) அறிக்கையும் நீதிபதி புஞ்சி (2009) குழு அறிக்கையும் உறங்கிக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் 1969இல் நீதிபதி ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டு அதன் முழுப் பரிந்துரைகளையும் 1973ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி தீர்மானமாக நிறைவேற்றிய கலைஞர் அரசு, இந்திரா காந்தி அம்மை யார் தலைமையில் இருந்த ஒன்றிய அரசிற்கு அனுப்பியது.

இச்சூழலில் 2014ஆம் ஆண்டிற்குப் பிறகு அமைந்த மோடி அரசின் இரட்டை வேடம் மக்களாட்சி முறையை அடியோடு சிதைத்து வருகிறது. உண்மைகளை மறைப்பது பொய்களைப் பரப்புரை செய்வதே ஓர் ஒன்றிய அரசின் அன்றாட செயலாக இருந்துவிட முடியாது. ஒரு பக்கம் நாகாலிம்முடன் ஒப்பந்தம் மறுபக்கம் தமிழ் நாட்டினுடைய உரிமைகளைச் சிதைக்கும் வகையில் ஒரு பொம்மை அரசை மாநிலத்தில் நிறுவி நீட் தேர்வு முதல் காவிரி பிரச்சினை வரை தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து துரோகம் செய்வது எத்தனை நாட்களுக்குச் சாத்தியமாகும்? எத்தனை நாட்கள்தான் மக்கள் பொறுத்துக் கொள்வார்கள்?

ஒரே நாடு, ஒரே வரி, ஒரே சட்டம், ஒரே மதம் என்று சர்வாதிகாரக் கூறுகளை அடக்கிய ஒரு கொள்கைத் திட்டத்தினை சங்பரிவார அமைப்புகள் தொடர்ந்து வலி யுறுத்துகின்றன. சிறுபான்மை மக்களையும் தாழ்த்தப் பட்ட பழங்குடி மக்களையும் அடிப்பதை உதைப்பதை மக்கள் எத்தனை நாட்கள் பொறுத்துக் கொள்வார்கள்? வெளிப்படையாக இந்த சங்பரிவாரங் களின் கொட்டத்தை அடக்காமல் ஒன்றிய அரசே தூண்டிவிட்டு, கலவரங் களை வேடிக்கை பார்ப்பது இந்தியாவில் ஒற்றையாட்சி யின் கூறுகளை மீறிய சர்வாதிகார அடக்குமுறை ஆட்சிதான் நடைபெறுகிறது என்பதை இக்கூற்றுகள் உறுதி செய்கின்றன.

1990இல் சமூக நீதிக் காவலர் மறைந்த வி.பி.சிங் சென்னையில் ஒரு கூட்டத்தில் அருமையானக் கருத் தினைக் குறிப்பிட்டார். ஒரு நாயை அன்புடன் பல ஆண்டுகளாக வளர்த்ததாகவும் நான் வீட்டில் நுழையும் போது தெரு வரை வந்து வரவேற்கும் என்றும் குறிப் பிட்டார். தனது வீட்டிற்கும் சாலைக்கும் இடையே ஒரு மகிழுந்து நுழையும் அளவிற்கே நீண்ட சந்து இருந்தது என்றும் தனது காரோட்டி எப்போதும் சந்தின் இடது புறமாக மகிழுந்தை ஓட்டி வருவார் என்றும் சிறிய இடைவெளி யில் வலதுபுறமாக நாய் வரும் என்றும் ஒரு நாள் நாய் இடது பக்கமாக வந்துவிட்டது. காரோட்டி வழக்கம்போல் வந்தார். நாய் மகிழுந்தில் அடிபட்டு இறந்தது என்று கூறிய வி.பி.சிங் இது அரசியலுக்கு முழுமையாகப் பொருந்தும் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். அரசியலில் பாதை மாறினால் இறுதி முடிவு இதுவாகத்தான் அமையும் என்பதை அழகாகக் குறிப்பிட்டார்.

ஆனால் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு இடது, வலது, வடக்கு, தெற்கு, மேற்கு, வடகிழக்கு எனப் பல வழிகளில் வலம் வருகிறது. பாஜக ஆட்சியின் இத்தனை பல முகங்களை மக்கள் உணர்ந்து விட்டனர். எல்லாப் பக்கங்களிலும் மக்களால் அடிவாங்கி இந்த ஒன்றிய ஆட்சி சிதையும் என்பதில் ஐயமில்லை.

எனவே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு முகம் காட்டாமல் மக்களை ஏமாற்றாமல்இந்தியா ஒரு பெரும் கூட்டமைப்பாக மாறுவதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு செய்யத் தவறினால் சோவியத் ஒன்றியம் உடைந்தது போல இந்தியா பல நாடுகளாக உடைந்து விடும் என்பதுதான் நாகாலாந்து சுட்டும் உண்மைகள் நமக்கு உணர்த்துகின்றன. ❖

## காட்டுமன்னார்குடியில் மாமேதை காரல் மார்க்சு 201ஆவது பிறந்தநாள் அண்ணல் அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் 128ஆவது பிறந்தநாள்விழா



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி யின் சார்பில் 5-5-2018 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்குடி சீரணி அரங்கத்தில் காரல் மார்க்சின் 201ஆவது பிறந்தநாள், அண்ணல் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 128ஆவது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் வே.காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. பா.முத்தமிழன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் த.பழனிச்சாமி, கோ.செயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர்கள் சி.பெரியசாமி, இரா.திருநாவுக் கரசு, இரா.பச்சமலை, ஆ.முத்தமிழ்ச்செல்வன், செந்தீ நாகவரசன் தி.துரைசித்தார்த்தன் ஆகியோர் உரை யாற்றினர். துரை சித்தார்த்தன்-செம்மலர் இணை யரின் மகள் நிறைமொழி நன்றி கூறலுடன் கூட்டம் நிறைவடைந்தது.



# நினைக்கப்பட வேண்டிய நெ.து.சுந்தரவடிவேலு

- இராமியா

ஆட்சி அதிகாரக் கல்வி பார்ப்பனர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட நிலையை எதிர்த்து, பார்ப்பனர் அல்லாத வர்கள் போராடியதன் விளைவாக ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்குக் கல்வியிலும், அரசு வேலை வேலைகளிலும் வாய்ப்பு கிடைக்கத் தொடங்கியது. அவ்வாறு வாய்ப்பு கிடைத்த உடனேயே ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பார்ப்பனர்களைவிடத் திறமைசாலிகள் என்று மெய்ப்பிக்கப் பட்டுவிட்டது. இதனால் கதிகலங்கிப் போன பார்ப்பனர்கள் நாம் ஆட்சி அதிகாரக் கல்வி பெறுவதை எப்படியும் தடுத்து விட வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டு இருந்தார்கள். (இன்னும் அப்படியே தான் இருக்கிறார்கள்.)

இந்நிலையில் ஆங்கிலேயர்கள் இந்தியாவை "இந்தியர்களிடம்" (அதாவது பார்ப்பனர்களின் நேரடி ஆட்சியில்) விட்டு விட்டு வெளியேறினார்கள். ஆங்கிலே யர்கள் நாட்டை விட்டு வெளியேறிய உடனேயே, நாம் பெற்றுக் கொண்டு இருந்த கல்வி வழியை அடைக்கும் பணியை அவாள் தொடங்கிவிட்டார்கள்.

தமிழ் நாட்டில் இராஜாஜி குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதன் மூலம் அதிகார வேலை வாய்ப்புகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பார்ப்பனர்களுக் குப் போட்டியாக வருவதைக் கிள்ளி எறிய முயன்றார். ஆனால் பெரியாரின் கடுமையான போராட்டத்தின் முன் தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடி விட்டார். அதன் பின் பெருந் தலைவர் காமராசர் பொறுப்பேற்ற உடன் தமிழகத்தில் அனைத்துக் குழந்தைகளும் கல்வி பெறும் வண்ணம் கிராமப்புறங்களில் பள்ளிகளைத் திறக்கும் திட்டத்தை வரைந்து கொண்டு வருமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

அன்று அதிகாரப் பதவிகளில் அமர்ந்து இருந்தவர்களில் மிக மிகப் பெரும்பாலோர் பார்ப்பனர்களே. அவாள் எல்லாம் இணைந்து ஒரு திட்டத்தை "வரைந்து" முதல் அமைச்சரிடம் சமர்ப்பித்தார்கள். அவாள் "வரைந்து" இருந்த திட்டப்படி, கல்விக்காகச் செலவிடப்பட வேண்டிய தொகை நிச்சயமாக நடைமுறைப்படுத்த முடியவே முடியாத அளவில் மிக மிக ... மிக மிக ... மிக மிக ... மிக மிக அதிகமாக இருந்தது. பெருந்தலைவர் திகைத்துப் போய் விட்டார். அவர் திகைத்துப் போனதைப் பார்த்த (எதிர் பார்த்த) அந்த அதிகாரிகள் பெருந்தலைவரின் கல்வி வழங்கும் திட்டம் எல்லாம் மேடைப் பேச்சுக்குத் தான் பொருந்தும் என்றும் நடைமுறைக்குப் பொருந்தாது என்றும் "பணிவாக" உணர்த்த முயன்றார்கள்.

அதிகாரிகள் அளித்த இயலாமைத் திட்டத்தை எண்ணி என்ன செய்வது என்று பெரும் கவலையில் மூழ்கி இருந்த பெருந்தலைவரை, அன்று சாதாரண அலுவலராக இருந்த நெ.து.சு. என்று சுருக்கமாக அழைக்கப்படும் நெ.து.சுந்தர வடிவேலு பார்க்க வந்தார். பெரியார் அவரைப் பெருந் தலைவரிடம் புத்திசாலிப் பையன் என்ற அடைமொழியுட னும், பல விஷயங்களில் உதவிகரமாக இருப்பார் என்றும் கூறி அறிமுகப்படுத்தி இருந்தார். (நெய்யாடுபாக்கம் துரை சாமி சுந்தரவடிவேலு,

நெ.து.சு. பெருந்தலைவரிடம் கிராமப்புறங்களில் பள்ளிக் கூடங்கள் திறக்கும் திட்டம் பற்றி விசாரித்தார். பெருந் தலைவர் அதிகாரிகள் அளித்த இயலாமைத் திட்டத்தைப் பற்றிச் சலிப்புடன் கூறினார். நெ.து.சு.வே அப்படி எல்லாம் இல்லை என்றும் மிகக் குறைந்த செலவிலேயே திட்டத் தைச் செயல்படுத்த முடியும் என்றும் கூறினார். பெருந் தலைவரின் கண்களில் மின்னலைப் போல் ஒளி வீசியது. "எப்படி? எப்படி? எப்படி?" என்று தாங்க முடியாத ஆவலு டன் கேட்டார். உடனே நெ.து.சு. அதிகாரிகள் அளித்த திட்டத் தில் வலுவான கட்டிடங்கள், சேதனைச் சாலைகள், நீள் இருக்கைகள், நீள் மேசைகள் இன்னும் பல செலவினங் களைக் குறிப்பிட்டு அவை எல்லாம் இருக்குமே என்று கேட்டார். உடனே பெருந்தலைவர் கோப்பை வரவழைத் துப் பார்த்தார். நெ.து.சு. சொன்னபடி அவை அனைத்தும் இருந்தன. இவை எல்லாம் தேவை இல்லை என்றும், நம் திட்டப்படி ஒவ்வொரு கிராமப் பள்ளிக்கும் ஆசிரியர்களை அமர்த்துவது, கரும்பலகைகள் எழுதுகோல்கள் ஆகிய வற்றை அளிப்பது மட்டுமே அரசின் பொறுப்பில் போது மானது என்று கூறிவிட்டு, பள்ளியை அந்தக் கிராமத்து மக்கள் கல் கட்டிடத்திலேயே, கீற்றுக் கொட்டகையிலேயே, மரத்தடியிலே கூட அவரவர் வசதிக்கேற்ப நடத்திக் கொள்ள விட்டுவிடலாம் என்று விளக்கமாகவும் எடுத்துரைத்தார். அவ்வாறு செய்தால் பெருந்தலைவர் மனதில் திட்டமிட்டு வைத்து இருந்த செலவினத்தைவிடக் குறைந்த செல விலேயே திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று மேலும் கூறி முடித்தார். இதைக் கேட்ட உடன் பெருந்தலைவர் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். உடனே யாரும் எதிர்பாரா வண்ணம் நெ.து.சு.வைக் கல்வி அதிகாரியாக நியமிக்க ஆணையிட்டார்.

சாதாரண அலுவலரைக் கல்வி அதிகாரியாக நியமித்த உடன், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளாக இருந்த பார்ப்பனர்கள் போர்க் கோலம் பூண்டனர். அத்தகைய பதவிகளுக்கு இந்திய ஆட்சிப் பணியில் தேர்வு பெற்றவர் களைத் தான் நியமிக்க வேண்டும் என்றும் இவ்வாறு

சாதாரண அலுவலர்களை நியமிப்பது நிர்வாகத் திறமையைக் குலைத்துவிடும் என்றும் கூறி கடுமையாக வாதிட்டனர். ஆனால் பெருந்தலைவர் உறுதியுடன் இருந்து மிகக் கடுமையான சொற்களால் அவாளை எல்லாம் அடக்கி விட்டார். அதனால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் கல்வி பெற்று அரசுப் பணிகளில் அமர்ந்தனர்; பொறியாளர்களாக, மருத்துவர்களாக, அறிவியல் அறிஞர்களாக உருவானது மட்டும் அல்லாமல் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் உயர் சாதிக் கும்பலினரை விட, திறமைசாலிகள் என்று மெய்ப்பித்துக் கொண்டும் உள்ளனர். இதற்கு அடித்தளம் இட்டவர் அறிஞர் நெ.து.சுந்தரவடிவேலு தான்.

இப்படிப்பட்ட கடும் போராட்டங்களுக்குப் பின் கல்வியும் அதிகார வேலை வாய்ப்பும் பெற்ற ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில், அவாளின் நீடித்த நிலையான சதித் திட்டங்களை உணர்பவர்கள் இருந்தாலும், அதைப் பற்றிய தெளிவு இல்லாதவர்கள் மிகப் பலர் இருப்பது வேதனையைத் தருகிறது.

பெருந்தலைவரின் காலத்திற்குப் பிறகு, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை ஆட்சி அதிகாரக் கல்வி அரங்கில் இருந்து விரட்டுவதற்கு அவாள் மெதுவான ஆனால் உறுதியான நடவடிக்கைகளைச் சிறிதும் சளைக்காமல் எடுத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். அதன் தொடக்கமாக அரசுப் பள்ளிகளைச் சீர்குலைத்து, கல்வியை வணிகமயமாக்கினார்கள். அப்படிச் செய்துவிட்டு "ஐயோ கல்வி வணிகமயமாகி விட்டது; ஐயோ கல்வி வணிகமயமாகி விட்டது" என்று அவாளே கூப்பாடும் போடுகிறார்கள். ஆனால் கல்வி வணிகமயம் ஆனதினால் அவாள் இம்மி அளவும் பாதிக்கப்படவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருந்து விடக் கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே.

கல்வியை வணிகமயம் ஆக்கிய பிறகு ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் பலவிதங்களில் பாதிக்கப்பட்டு இருந்தாலும், தங்கள் வாழ்க்கைச் சுகங்களைத் தியாகம் செய்து, எதிர் நீச்சல் அடித்து, முழுவதுமாக அழிந்து போகாமல் நெ.து.சு. ஈட்டித் தந்த கல்வி அரங்கில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இதைக் கண்டு வயிறெரிந்து கொண்டு இருந்த / இருக்கின்ற அவாளுக்கு வாகாய் அமைந்தது கும்பகோணம் தீ விபத்து.

ஒரு பள்ளிக்கூடம் அல்லது எந்த ஒரு கட்டிடத்திலேயே தீ விபத்து ஏற்பட்டால், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து மீண்டும் அவ்விபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்வது தான் அறிவுடைமை. வணிக வளாகங்கள், திரையரங்குகள், தெழிற்சாலைகள் இன்னும் பல இடங்களில் தீ விபத்துகள் நடந்து இருக்கின்றன. ஆனால் அதற்காக அக்கட்டிடங்கள் மீது, தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று மட்டுமே கூறுகிறார்களே ஒழிய அவற்றை ஒரேயடியாக மூட வேண்டும் என்று யாரும் கூவவில்லை. ஆனால் கும்பகோணம் தீ விபத்தைக் காரணம் காட்டி, தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்; இல்லை என்றால் பள்ளிக்கூடங்களை மூடி விட வேண்டும் என்று அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். நீதிமன்றங்களும் இதைப் பற்றி "அக்கறையுடன்" விசாரித்து அழுத்தமான ஆணைகளைத் தருகின்றன.

கும்பகோணம் தீ விபத்து நடந்து பதினான்கு ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால் அதைச் சாக்கிட்டுக் கொண்டு, கணிசமான அளவில் பள்ளிகளை மூட முடியவில்லையே என்று எரிச்சல் அடையும் ஆதிக்க சக்திகள் பெருந்தலைவரிடம் காட்டிய வாலை இப்பொழுது மீண்டும் நீட்டிக் காட்டுகின்றனர். அன்று அவாள் சொன்ன வலுவான கட்டிடங்கள், சோதனைச் சாலைகள் இன்னும் நிறைய வசதிகளைக் குறிப்பிட்டு, அவை எல்லாம் இல்லாமல் பள்ளிக்கூடங்கள் இயங்கக் கூடாது என்று வழிகாட்டு நெறிகளைப் பொழிந்து கொண்டு உள்ளனர்.


காவிகளுக்கு அடிமையாகத் தெண்டனிட்டுக் கொண்டு இருக்கும் தமிழ்நாடு அரசும் 30.4.2018 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்த வழிகாட்டு நெறிகளை அனுப்பி அவை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அதில் சிறு பிறழ்வு இருந்தாலும் அப்பள்ளிக்கூடங்களை மூடி விட வேண்டும் என்றும் உத்தரவிட்டு உள்ளது. எந்தக் காரணத்தைக் கொண்டும் பள்ளிக்கூடங்களை மூடக்கூடாது என்றோ வழிகாட்டு நெறிகளை நடைமுறைப்படுத்தாதவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றோ கூறவில்லை.

இந்நிலையில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் போராட்டங்கள் என்ன வழிமுறையில் இருக்க வேண்டும்? ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் படிக்கக் கூடிய பள்ளிக் கூடங்களை மூடி விட வேண்டும் என்று அவாள் மறைமுகமாகத் திட்டமிடுகிறார்கள். இதற்கு எதிராக, பள்ளிகளில் விகிதாச்சாரப் பங்கீட்டு முறையைச் செயல்படுத்த வேண்டும் என்று போராடி வெற்றி பெற்றால், அவாளுடைய சதித் திட்டங்கள் ஊசியால் குத்தப்பட்ட பலூன் போல் 'புஸ்' என்று காற்று இறங்கிவிடும். எத்தனை பள்ளிகள் வேண்டுமானாலும் திறக்கப்படட்டும்; எத்தனை பள்ளிகள் வேண்டுமானாலும் மூடப்படட்டும். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டால் அதே விகிதத்தில் பார்ப்பனர்களுக்கும் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும். பார்ப்பனர்கள் அனைவரும் கல்வி பெற வேண்டும் என்றால் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் அனைவரும் கல்வி பெற்றாக வேண்டும் என்ற நிலையை உருவாக்கினால்தான் அவாள் நமக்கு எதிராகச் சதி செய்வதைத் தடுக்க முடியும். அதற்கான வலுவான கருத்தியலுக்கும் தெளிவான விவாதங்களுக்கும் நம்மை நாம் ஆயத்தப் / வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அன்று அறிஞர் நெ.து.சுந்தரவடிவேலு அவாளின் சதித் திட்டத்தை உடைத்து எறிந்து நம் உரிமைகளை விதைத்தார். அவர் நம் அனைவராலும் நினைக்கப்பட வேண்டியவர். அவருடைய விதைப்பில் வளர்ந்த நாம் அவரைப் போலவே இயங்கி இன்றைய நிலைக்குத் தேவையான விகிதாச்சாரப் பங்கீட்டு முறையை வென்றெடுக்க வேண்டும், வாருங்கள். ❖

# சமூக நீதிக்கும் மாநில உரிமைக்கும் எதிரான நீட் தேர்வை விரட்டியடிப்போம்

- க. முகிலன்



தமிழ்நாட்டில் மூன்று ஆண்டுகளாக ஏப்பிரல்-மே மாதங்களில் மருத்துவப் படிப்பில் சேருவதற்கான தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு (NEET-நீட்) தொடர் பாக தீவிரமான விவாதங்கள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டு 5000க்கும் மேற்பட்ட தமிழக மாணவர் களுக்கு வெளிமாநிலங்களில் நீட் தேர்வு மய்யங்கள் ஒதுக்கப்பட்டதற்குக் கடும் எதிர்ப்பு எழுந்தது. நீட் வேண்டாம் என்று எதிர்த்து வந்த தமிழர்களை, நீட் தேர்வு மய்யங்களைத் தமிழ்நாட்டிலேயே இருக்குமாறு செய் என்ற கோருகின்ற நிலைக்கு வஞ்சகமாகத் தள்ளியது நரேந்திர மோடியின் ஆட்சி.

இந்த ஆண்டு மே 6 அன்று நீட் தேர்வு நடத்தப்பட்டது. இந்திய அளவில் 13,26,725 பேர் இத்தேர்வை எழுதினர். கடந்த ஆண்டைவிட 1,89,835 பேர் கூடுதலாக விண்ணப்பித்திருந்தனர். 136 நகரங்களில் 2,255 மய்யங்களில் நீட் தேர்வு நடந்தது. தமிழ் நாட்டில் நீட் தேர்வு எழுத, 1,07,288 மாணவர்கள் விண்ணப்பித்திருந்தனர். இது கடந்த ஆண்டைவிட 25,206 அதிகமாகும். பத்து நகரங்களில் 170 தேர்வு மய்யங்கள் அமைக்கப்பட்டன.

இந்திய அளவில் கூடுதலான மாணவர்கள் விண்ணப்பித்திருந்தபோதிலும் தமிழ்நாடு தவிர பிற மாநிலங்களின் மாணவர்களுக்கு அந்தந்த மாநிலங்களிலேயே நீட் தேர்வு மய்யங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் 5,500க்கு மேற்பட்ட தமிழ்நாட்டு மாணவர் களுக்குக் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், இராஜஸ்தான், மகாராட்டிரம், சிக்கிம் முதலான வெளிமாநிலங்களில் தேர்வு மய்யங்கள் ஒதுக்கப்பட்டன. குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்ட மாணவர்களே இப்பட்டியலில் அதிக எண்ணிக்கையில் இருந்தனர்.

நீட் தேர்வுக்கு ஒரு கிழமைக்கு முன்புதான் பிற மாநிலங்களில் நுழைவுத் தேர்வை எழுத வேண்டும் என்ற செய்தியை அறிந்து மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் அதிர்ச்சியடைந்தனர். நீட் தேர்வை நடத்தும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்திடம் (சி.பி.எஸ்.சி.) பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பிற மாநிலங்களில் தேர்வு மய்யம் ஒதுக்கியிருப்பது ஏன்? என்று கேட்டனர். சி.பி.எஸ்.சி. உயர் அதிகாரிகள் முறையாக பதில் சொல்லவில்லை. எத்தனை மாணவர்கள் எந்தெந்த மாநிலங்களுக்கு நீட் தேர்வு எழுதச் செல்கின்றனர் என்ற விவரத்தை சி.பி.எஸ்.சி. தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் ஜெயக்குமார் குறை கூறினார். முன்னதாகவே. தமிழக மாணவர்கள் நீட் தேர்வு எழுதுவதற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் குறித்து தமிழ்நாட்டு அரசு சி.பி.எஸ்.சி.யிடம் கேட்டுப் பெற்றிருக்க வேண்டும். இப்போதுள்ள தமிழ்நாட்டு அரசுக்கு இதைக் கேட்டுப் பெறுவதற்குக்கூட துணிவும் வலிமையும் இல்லை என்றுதான் எண்ண வேண்டியுள்ளது.

**தேர்வு மய்யங்களை இணையம்தான் ஒதுக்கீடு செய்கிறது என்று சி.பி.எஸ்.சி. உயர் அலுவலர்கள் நாகூசாமல் கூறினர். மற்ற எல்லா மாநில மாணவர்களுக்கும் அந்தந்த மாநிலங்களிலேயே தேர்வு மய்யங்களை ஒதுக்கீடு செய்யும் இணையம். தமிழர்களுக்கு வஞ்சகம் செய்ய வேண்டும் என்று செயல்படும் மோடி அரசைப் போலவே. தமிழக மாணவர்களுக்கு மற்ற மாநிலங்களில் தேர்வு மய்யங்களை ஒதுக்கீடு செய்ததா?**

நீட் தேர்வுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பல நாள்களுக்குப் பிறகுதான் தேர்வு மய்யம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் பத்து விழுக்காடு அளவுக்குத்தான் கூடுதலாக விண்ணப்பிப்பார்கள் என்று எதிர்பார்த்தோம்; ஆனால் முப்பது விழுக்காடு அளவில் கூடுதலாக விண்ணப்பங்கள் வந்ததால், எல்லோருக்கும் தமிழ்நாட்டில் தேர்வு மய்யம் ஒதுக்க முடியவில்லை என்று சி.பி.எஸ்.சி. நிருவாகம் கூறியது. தமிழ்நாட்டில் 580 பொறியியல் கல்லூரிகள் அதேபோல் கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் பல இலட்சம்



நீட் தேர்வுக் கூடத்தில் நுழைவதற்கு முன் கட்டுப்பாடு என்ற பெயரில் மாணவர்கள் பலவகையான தொல்லைகளுக்கும் மனஉளைச்சலுக்கும் உள்ளாக்கப்பட்டனர்

மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கான கட்டமைப்பு வசதிகள் உள்ளன. சி.பி.எஸ்.சி. நிருவாகத்துக்கு இந்த இருப்பு நிலை தெரியும். ஆயினும் வேண்டுமென்றே மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழக மாணவர்களைப் பிற மாநிலங்களுக்கு விரட்டியது.

இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கில் தமிழக மாணவர்களுக்குத் தமிழ்நாட்டிலேயே தேர்வு மய்யம் ஒதுக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. இதை எதிர்த்து சி.பி.எஸ்.சி. உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தது.

3.5.2018 அன்று உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்து, சி.பி.எஸ்.சி. பிற மாநிலங்களில் ஒதுக்கிய தேர்வு மய்யங்களிலேயே தமிழக மாணவர்கள் தேர்வு எழுதவேண்டும்; அடுத்த ஆண்டு முதல் தமிழ்நாட்டிலேயே தேர்வு மய்யங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. தமிழ்நாட்டில் உள்ள கட்டமைப்பு வசதிகள், இன்றுள்ள இணையதள வசதி ஆகியவற்றைக் கொண்டு ஒரே நாளில் தமிழகத்திலேயே தேர்வு மய்யங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்க முடியும். தமிழர் நலனுக்கு எதிரான எண்ணங்கொண்ட சி.பி.எஸ்.சி. அதிகாரிகள் இறுதி வரையில் இதைச் செய்ய மறுத்துவிட்டனர்.

பிற மாநிலங்களில் நீட் தேர்வு எழுத தமிழக மாணவர்கள் செல்ல நேரிட்டதற்குத் தமிழ்நாட்டு அரசின் பொறுப்பற்றத்தனமும் காரணம் என்று கடும் கண்டனங்கள் எழுந்தன. அதனால் பிற மாநிலங்களுக்குச் செல்லும் மாணவர்களுக்கும் அவருடன் செல்பவருக்கும் தொடர் வண்டியில் இரண்டாம் வகுப்புக் கட்டணத்துக்குரிய தொகையும் கைச்செலவுக்காக உருபா ஆயிரமும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் பழநிசாமி அறிவித்தார். தென்மாவட்டங்களிலிருந்து கேரளத்துக்குச் செல்வதற்காகப் பேருந்துகள் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டன.

வேறுவழியில்லாமல், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் பெருத்த மனஉளைச்சலுடன் பிற மாநிலங்களுக்குச் சென்றனர். புதிய இடம், புரியாத மொழி, தங்கும் இடம் தேடுவது, தேர்வு மய்ய இடத்தை உரிய நேரத்தில் சென்றடைவது என்று பல இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் இலக்காயினர். திருத்துறைப்பூண்டி அருகில் பெருகவாழ்ந்தான் ஊரில் நூலகராகப் பணியாற்றிவந்த கிருட்டிணசாமி என்பவர் கேரளத்தில் உள்ள எர்ணாகுளத்தில் தன் மகன் தேர்வு எழுதுவதற்காக உடன் சென்றார். தன் மகனைத் தேர்வுக்கூடத்தில் விட்டுவிட்டு, விடுதிக்குத் திரும்பியவர் மனஉளைச்சலால் மாரடைப்பால் மாண்டார்.

மருத்துவப் படிப்பில் தகுதி, திறமையை நிலைநாட்டுவதற்காக நடத்தப்படுவதாகச் சொல்லப்படும் நீட் தேர்வை நடத்துவதற்கு சி.பி.எஸ்.சி.க்கு தகுதியும் திறமையும் இல்லை. தமிழ்நாட்டு அரசின் கல்வித்துறை ஆண்டுதோறும் பத்து இலட்சம் மாணவர்கள் எழுதும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வையும் ஒன்பது இலட்சம் மாணவர்கள் எழுதும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வையும் சீரிய முறையில் நடத்துகிறது. சி.பி.எஸ்.சி. இதே அளவில் எண்ணிக்கை கொண்ட மாணவர்களுக்குப் பொதுத் தேர்வை நடத்துகிறது. இந்த ஆண்டு 10ஆம் வகுப்பு கணக்கு வினாத்தாளும், 12ஆம் வகுப்பு பொருளியல் வினாத்தாளும் தேர்வுக்கு முன்பே வெளியாயின. சி.பி.எஸ்.சி. உயர் அதிகாரிகளுக்கு இந்த வினாத்தாள்கள் மின் அஞ்சல் மூலம் தேர்வுக்கு முன்பே அனுப்பப்பட்டன. கணக்கு பாடத்திற்கு மறுதேர்வு வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. பொருளியல் பாடத்துக்கு இந்தியா முழுவதும் மறுதேர்வு நடத்தப்பட்டது. வினாத்தாள்கள் கசிவுக்குக் காரணமானவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மதுரையில் ஒரு தேர்வு மய்யத்தில் 120 மாணவர்களுக்குத் தமிழில் வினாத்தாள் தருவதற்குப்

பதிலாக இந்தியிலும் ஆங்கிலத்திலும் வினாத்தாள் தரப்பட்டது. மாணவர்கள் செய்வதறியாது திகைத்தனர். மூன்று மணிநேரத்திற்குப் பிறகு தமிழில் வினாத்தாள் தரப்பட்டது. தவிப்பான அந்த மனநிலையில் மாணவர் களால் தேர்வைச் செம்மையாக எழுத முடியுமா? தேர்வு மய்ய அதிகாரிகள் நரித்தனமாக, தாங்கள் எந்தவகையான மனஉளைச்சலுக்கும் ஆளாகவில்லை என்று அம்மாணவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டனர்.

தமிழில் தரப்பட்ட வினாத்தாளின் தகுதி-திறமை எப்படி இருந்தது என்று பார்ப்போம். மொழிபெயர்ப்பு மற்றும் பிழைகளுடன் 49 வினாக்கள் இருந்தன. எடுத்துக்காட்டாக, செங்குத்து என்பதற்கு நேர்குத்து, சிறுத்தையின் என்பதற்கு சீத்தாவின் (இராமன் மனைவி சீத்தாவா?), சிறுநீர் நாளம் என்பதற்கு யூரேட்டர், இயல்பு மாற்றம் என்பதற்கு இயல் மாற்றம், தாவரங்கள் என்பதற்கு பிளாண்டே, புழுப்பு என்பதற்கு பழப்பு, இறுதி நிலை என்பதற்கு கடைநிலை என்று வினாக் களில் இடம்பெற்றுள்ளது. இத்தவறுகள் குறித்து நீட் தேர்வை நடத்திய அதிகாரிகளிடம் கேட்டபோது, இது பற்றி எந்தக் கருத்தையும் கூறமுடியாது என்றனர்.

நீட் தேர்வு எழுதிய 1,07,288 தமிழ்நாட்டு மாணவர் களில் 24,720 மாணவர்கள் தமிழ்மொழியில் தேர்வு எழுதினார்கள். நீட் தேர்வின் தமிழ் வினாத்தாளில் 49 பிழையான வினாக்களுக்கு இவர்களால் சரியான விடையை எழுதியிருக்க முடியாது. அதனால் அவர்கள் மதிப்பெண் குறையும். ஒரு வினாவுக்கு 4 மதிப்பெண் வீதம் 49 வினாக்களுக்கு 196 மதிப்பெண் தமிழ்வழியில் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இதுகுறித்து சி.பி.எஸ்.சி. பதில் கூறாமல் இருப்பதும், தமிழக அரசு வாய்மூடிக் கிடப்பதும் கண்டிக்கத்தக்க தாகும்.

ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்கிற ஆர்.எஸ்.எஸ். கொள்கையைச் செயல்படுத்துவதே நரேந்திர மோடி ஆட்சியின் தலையாய நோக்கமாகும். இந்தியா பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு என்கிற நிலையைத் தகர்ப்பதற்காக மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து நடுவண் அரசில் குவிக்கும் நடவடிக்கைகளை மோடி ஆட்சி முடுக்கிவிட்டுள்ளது. இத்தகைய நடவடிக் கைகளில் ஒன்றுதான் நீட் தேர்வு கட்டாயம் என்றாக்கிய தாகும்.

மன்மோகன் சிங் ஆட்சியில் 2012ஆம் ஆண்டில் நீட் தேர்வு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதில் மாநிலங் கள் விரும்பினால் விலக்கு பெறலாம் என்ற விதி இடம் பெற்றிருந்தது. நீட் தேர்வு ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு 2013 சூலையில் நீட் தேர்வு அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று தீர்ப்பளித்தது. ஆனால் மோடி ஆட்சிக்கு வந்தபின் இந்தத் தீர்ப்பின்மீது சீராய்வு விண்ணப்பம் உச்சநீதிமன்றத்தில் போடப்பட்டது. 2013இல் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் இருந்த நீதிபதி அனில் தவே நீட் தேர்வு வேண்டும் என்று மாறுபட்ட தீர்ப்பை எழுதினார். அந்த அனில்தவே தலைமையில் அமைக்கப் பட்ட அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு சீராய்வு கோரிக்கையை விசாரித்தது. 11.4.2016 அன்று அளித்த தீர்ப்பில் 2013இல் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நீட் தேர்வு வேண்டாம் என்று வழங்கிய தீர்ப்பைத் திரும்பப் பெறுவதாகவும், வழக்கை மீண்டும் முதலிலிருந்து விசாரிக்கப் போவ தாகவும் கூறியது.

இந்நிலையில்தான் மோடி அரசு நீட் தேர்வை 2016ஆம் ஆண்டே நடத்த வேண்டும் என்று உச்சநீதி மன்றத்துக்கு அழுத்தம் கொடுத்தது. நீட் தேர்வு குறித்த வழக்கை முறையாக விசாரிக்கப் போவதாகக் கூறிய 17 நாள்களுக்குள்ளாகவே, மோடி ஆட்சியின் விருப் பத்தை நிறைவேற்றும் வகையில் 28.4.2016 அன்று 2016ஆம் ஆண்டு முதலே நீட் தேர்வு நடத்தலாம் என்று கூறியது. உச்சநீதிமன்றத்தில் முதன்மையான வழக்குகளை விசாரிப்பதற்காக அமைக்கப்படும் அமர்வு களில் நடுவண் அரசின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கக்கூடிய நீதிபதிகளையே தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா நியமிப்பதாக உச்சநீதிமன்றத்தின் செல்ல மேசுவரர் உள்ளிட்ட மூத்த நீதிபதிகள் நால்வர் 2018 சனவரியில் செய்தியாளர்களைக் கூட்டி அறிவித்ததை இவ்விடத்தில் பொருத்திப் பார்க்க வேண்டும்.

திடீரென நீட் தேர்வு மூலம்தான் மருத்துவப் படிப்பில் சேர்க்கை இருக்க வேண்டும் என்ற அறிவிப்புக்குத் தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. வேறு சில மாநி லங்களும் எதிர்த்தன. 2016ஆம் ஆண்டிற்கு மட்டும் விரும்புகின்ற மாநிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப் படும் என்கிற அவசரச் சட்டத்தை நடுவண் அரசு பிறப்பித்தது. 2016இல் நீட் தேர்வு நடந்தது. ஆயினும் தமிழ்நாட்டில் 2007 முதல் பன்னிரண்டாம் வகுப்பின் மதிப்பெண் தரவரிசைப்படி ஒற்றைச்சாளர முறையில் மருத்துவப் படிப்பில் மாணவர்களைச் சேர்க்கின்ற நடைமுறை பின்பற்றப்பட்டது. ஆனால் நடுவண் அரசு அவசரச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்ற போது, நீட் தேர்வு வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் நிலையில், வஞ்சகமாக 2017ஆம் ஆண்டு முதல் எல்லா மாநிலங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் நீட் மூலமே மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்று சட்டம் இயற்றியது.

நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்தன. நீட் தேர்வு முறை சமூகநீதிக்கு எதிரானது; மாநிலத்தின் கல்வி உரிமையைப் பறிப்பது என்று அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் கண்டித்தன. நீட் தேர்வு இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளில் மட்டும் நடத்தப்படுவதால், இந்தியில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆக்கம் சேர்ப்பதாகவும், இந்தி அல்லாத பிற தாய்மொழிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பெருந்தடையானதாகவும் இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதன்பின் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, குஜராத்தி, ஒரியா உள்ளிட்ட பத்து மொழிகளில் 2017 நீட் தேர்வில் வினாத்தாள் வழங்கப்படும் என்று நடுவண் அரசு அறிவித்தது.



நீட் தேர்வுக்காக அரசுப் பள்ளிகளில் தனிப் பயிற்சி திட்டத்தை முதலமைச்சர் பழனிச்சாமி 13.11.17 அன்று தொடங்கி வைத்தார்

2017இல் நடைபெற்ற நீட் தேர்வின் வினாத்தாளில் ஒவ்வொரு மொழியிலும் வெவ்வேறு வினாக்கள் இடம்பெற்றிருந்தன. ஒரே மாதிரியான வினாக்கள் இருப்பது என்பதே ஒரே தேர்வின் அடிப்படை என்பதைக்கூட நீட் தேர்வு நடத்திய சி.பி.எஸ்.சி. பின்பற்றவில்லை. சி.பி.எஸ்.சி. எந்த அளவுக்குப் பொறுப்பற்ற தன்மையில் செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு சான்று. இதுகுறித்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது. 2018 முதல் நீட் தேர்வின் அனைத்து மொழிகளின் வினாத்தாள்களிலும் ஒரே மாதிரியான வினாக்கள் இடம்பெற வேண்டும் என்று உச்சநீதி மன்றம் சி.பி.எஸ்.சி.க்கு ஆணையிட்டது. 2018இல் தமிழ் வினாத்தாளில் 49 தவறுகள் இருப்பது குறித்து இக்கட்டுரையில் முன்பே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**மருத்துவக் கல்வி வணிகமயமாவதைத் தடுக்கவும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் ஒளிவு மறைவு அற்ற மாணவர் சேர்க்கை நடைபெறுவதை உறுதி செய்யவும், மாணவர்கள் பல தேர்வுகளை எழுத வேண்டியிருக்கும் நிலையை மாற்றவும், தகுதியான மாணவர்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரியில் சேருவதை உறுதி செய்யவும் நீட் தேர்வு முறையைக் கொண்டு வருவதாக நடுவண் அரசு கூறியது. இந்தக் குளறுபடிகள் தனியார் மருத்துவக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிகளில் மட்டுமே நடைபெறுகின்றன. இக்கல்லூரிகளுக்கு மட்டும் நீட் தேர்வு நடத்தாமல், மாநிலங்களின் அரசுக் கல்லூரிகளுக்கும் சேர்த்து நீட் முறையைக் கொண்டு வந்திருப்பது, மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டதாகும்.**

**2016ஆம் ஆண்டில் நீட் தேர்வு நடத்தப்பட்ட போதிலும் தனியார் மருத்துக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் உள்ள இடங்களுக்கு மாணவர் சேர்க்கை எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்கிற நெறிமுறையை நடுவண் அரசின் சுகாதாரத் துறை வகுக்கவில்லை. அதனால் இந்த மருத்துவக் கல்லூரிகள் மருத்துவப் படிப்பு இடங்களை ஏலத்தில் விற்றுக் கொள்ளை இலாபம் ஈட்டின. 10.2.2017 அன்று நடுவண் அரசின் மக்கள் நல்வாழ்வு அமைச்சகம் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு 2017-18ஆம் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கையை ஒற்றைச் சாளர முறையில் பொதுக் கலந்தாய்வு மூலம் மாநில அரசுகளே நடத்த வேண்டும் என்று கூறியது. ஆனால் கடந்த ஆண்டில் நீட் தேர்வின் தரவரிசைப் பட்டியலின்படி இல்லாமல், ஆண்டுக்கட்டணம் ரூ.15 இலட்சம் முதல் 20 இலட்சம் என்கிற அடிப்படையில்தான் மாணவர்கள் இக்கல்லூரி களில் சேர்ந்தனர் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். எதற்காக நீட் தேர்வு முறை கொண்டு வரப்பட்டதோ அதன் நோக்கம் அடியோடு தோற்றுவிட்டது.**

1.2.2017 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக நடுவண் அரசுக்கு அனுப்பப்பட்டது. அ.தி.மு.க. அரசு நீட் தேர்விலிருந்து விலக்கு கிடைத்து விடும் என்று கூறிக்கொண்டிருந்தது. மாநிலப் பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் தமிழக அரசின் உறுதி



மாணவி அனிதாவின் உயிரைப் பறித்த நீட் தேர்வு

மொழியை நம்பி ஏமாந்தனர். இறுதியில் விலக்கு கிடைக்காததால் நீட் தேர்வு எழுதும் நிலைக்குத் தள்ளப் பட்டனர். மாநிலப் பாடத்திட்டத்தில் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மருத்துவப் படிப்பில் சேரு வதற்குத் தேவையான மதிப்பெண்களைப் பெற்றிருந்த போதிலும், நீட் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றதால் மருத்துவப் படிப்பில் சேர முடியாத கொடுமை நேர்ந்தது. அரியலூரைச் சேர்ந்த-தாழ்த்தப்பட்ட வகுப்பினரான அனிதா 1176 மதிப்பெண்ணும் 196.5 கட் ஆப் மதிப்பெண்ணும் பெற்றிருந்தும் மருத்துவப் படிப்பில் சேர முடியாத மனஉளைச்சலால் 1.9.17 அன்று தற்கொலை செய்து கொண்டார். அனிதாவைப் போலவே, பன்னிரண்டாம் வகுப்பில் உரிய மதிப்பெண் பெற்றும் நீட் எனும் நெடுஞ்சுவரைத் தாண்ட முடி யாமல் 500க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட, தாழ்த் தப்பட்ட வகுப்பு மாணவர்களின் மருத்துவக் கனவு நொறுங்கியது.


அதன்பின் தமிழக அரசு நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கான எந்த முயற்சியையும் மேற்கொள்ள வில்லை. ஏழரைக் கோடித் தமிழர்களின் சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டத்தை நடுவண் அரசு கால்தூசாகவும் மதிக்காமல் கிடப்பில் போட்டுள்ளது. இது தமிழ் இனத்தையே இழிவுபடுத்தும் செயலாகும்.

நீட் தேர்வுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் 70,000 பேருக்கு 412 மய்யங்களில் இலவச நீட் பயிற்சி அளிக்கும் திட்டத்தை 2017 நவம்பரில் தமிழக முதலமைச்சர் ஆடம்பரமாகத் தொடங்கி வைத்தார். ஆனால் 2018 சனவரி வரையில் 100 பயிற்சி மய்யங்கள் மட்டுமே தொடங்கப்பட்டன. கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் இறுதியில் 2018 ஏப்பிரல் 5 முதல் மே 4 வரை 9 இடங்களில் 2000 மாணவர்களுக்குத் தங்கும் வசதியுடன் பயிற்சி அளிக்கப்பட்டது. நீட் தேர்வு நடத்த மே 6 அன்று மாலை கல்வி அமைச்சர் செங்கோட் டையன், தமிழக அரசு அளித்த பயிறிசியால் போதிய பயன் ஏற்படவில்லை என்று கூறினார். **இந்த ஆண்டும் ஆண்டிற்கு ஒரு இலட்சம் கட்டணம் செலுத்தி, சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரு நகரங்களில் தனியார் பயிற்சி மய்யங்களில் படித்த பணக்கார வீட்டுப் பிள்ளைகளே மருத்துவப் படிப்பின் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றுவார்கள்.**

2018ஆம் ஆண்டில் மருத்துவப் படிப்புக்கு மட்டு மின்றி, இந்திய மருத்துவம் என்று அழைக்கப்படும் சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி ஆகிய படிப்புகளின் இடங்களும் நீட் தேர்வு மூலமே நிரப்பப்பட வேண்டும் என்று நடுவண் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சித்த மருத்துவம் தமிழ் மருத்துவ முறையாகும். ஆனால் தமிழே தெரியாதவர்கள் சித்த மருத்துவப் படிப்பில் சேரப் போகிறார்கள். பொறியியல் படிப்புக்கும் நீட் எழுத வேண்டும் என்று நடுவண் அரசு முடிவு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அ.தி.மு.க. ஆட்சி நரேந்திர மோடிக்கு அடிபணிந்து கிடப்பதன் மூலம் பதவியைத் தக்க வைப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறது. கல்வியிலும் பிற துறைகளிலும் மாநில உரிமைகள் பறிக்கப்படுதை வாயை மூடிக் கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

**நீட் நிரந்தரமாகிவிட்டது என்ற எண்ணத்தை விட்டொழித்து, சமூகநீதிக்கும் மாநில உரிமைக்கும் எதிரான நீட் தேர்வை விரட்டியடிக்கும் வரையில் ஓயாது தமிழர்கள் ஓரணியில் திரண்டு போராட வேண்டும்.** ❖

## திருச்சி ஆ. தங்கவேலு மறைவு



நீண்டநாள் சிந்தனையாளன் வாசகரும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவருமான தோழர் த. ரவீந்திரன் அவர்களின் தந்தையார் ஆ. தங்கவேலு, தனது 89ஆவது வயதில் 30.4.2018 அன்று உடல்நலக் குறைவால் மறைவுற்றார். இவர் திருச்சி, பொன்மலை இரயில்வே பணிமனையில் சதர்ன் ரயில்வே இன்ஸ்பெக்டராக 30 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றவர். நல்ல ஆங்கில புலமை பெற்ற அறிஞர். பெரியார், அம்பேத்கர் கொள்கை பற்றாளர். அனைவரிடமும் அன்புடன் பழகும் பண்பாளர்.

தந்தையை இழந்து வருந்தும் த. இரவீந்திரன் உள்ளிட்ட நான்கு மகன்கள், மூன்று மகள்கள் இவர்கள் அனைவருக்கும் சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- செய்தி : திருச்சி **ந, கருணாகரன்**

**கட்டுரைத் தொடர்-59**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



**இந்துஸ்தான் சுயராஜ்யம் என்று நாளை கொண்டாடப் போகும் வட நாட்டு ஏகாதிபத்திய ஆட்சி, பிரிட்டி ஷாருக்கு ஏஜெண்டாக-கையாளாக யிருந்து வெள்ளையருடன் வடநாட்டு பிர்லா, பஜாஜ் கோஷ்டியினர் செய் துள்ள ஒப்பந்த ஆட்சியேயன்றி, சுய ஆட்சி என்று எந்தக் காங்கிரஸ் அரசியல் நிபுணராகிலும் கூற முடியுமா?**

1946 தேர்தலுக்குப் பிறகு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதுவதற்காக 1946இல் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டே அரசியல் நிர்ணய சபை உருவாக்கப்பட்டது. அதை தொடக்கம் முதலே கண்டனத்துக்கு உட்படுத்தியவர் பெரியார்.

1947இல் இந்தியா சுதந்தரமடைந்ததாக நாடே கொண்டாடிய போது அது திராவிடருக்கு (தமிழருக்கு) துக்க நாள். வெளி நாட்டானுக்கு அடிமைப்பட்டது போய் இனி வடநாட்டானுக்கு நாம் அடிமையாக இருக்க நேரிடும் என்று எச்சரித்தார், பெரியார்.

இதுகுறித்த பெரியாரின் அறிக்கையைப் பார்ப்போம்.

**பிரிட்டிஷ்-பனியா-பார்ப்பனர் ஒப்பந்த நாள் - பெரியார் அறிக்கை:**

ஆகஸ்ட் 15-ந் தேதி சுயராஜ்யத்தைப் பற்றி ஏதேதோ கூறப்படுகிறது. பூரண சுயராஜ்யம் என்றும், அதற்காகக் கொண்டாட்டமென்றும் திட்டம் வகுக்கப்படுகிறது. இதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை; வேண்டுமானால் தன்மானமுள்ள காங்கிரஸ் திராவிடர்கள் அன்று வெட்கித் தலைகுனிய வேண்டும்; ஏன்? 1929ஆம் ஆண்டிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் எந்த அர்த்தத்தில் தீர்மானிக்கப்பட்டதோ அந்த சுயராஜ்ந்தானா நாளை வரப்போவது? வெள்ளையர் உறவு சிறிதுகூட இல்லாத பூரண இந்தியா முழுவதையும் கொண்ட சுயராஜ்யம் - அதாவது, பூரண சுயேச்சை கேட்கப்பட்டது. அதற்காக அன்றுமுதல் இன்று வரை நமது மக்கள் எவ்வளவு தியாகங்கள் செய்தனர்? குறிப்பாகக் கூறவேண்டுமானால் காங்கிரஸ் திராவிடர் எவ்விதக் கஷ்டநஷ்டங்களுக்கு ஆளானோம்? என்னையும் சேர்த்து நம் இனத்துக்குள்ளாகவே எவ்வளவு போராட்டம்; எவ்வளவு பொருளை வாரிக்கொட்டி இருப்போம்! சுயராஜ்யத்தின் பேரால் அவ்விதமெல்லாம் செய்தும் கடைசியாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துதான் கிடைத்தது.

இந்தக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அன்று மிதவாதிகள் என்று கூறப்பட்டவர்களால் கேட்கப்பட்ட போது - அவர்களைப் பிற்போக்காளர், வெள்ளையர் தாசர்கள் என்று கூறி ஒத்துழையாமை செய்து, நாட்டில் பெரிய கலவரங்களிலிருந்து பல எதிர்ப்புகளை உண்டாக்கி, கடைசியாக அதே குடியேற்ற நாட்டு அந்தஸ்தை-அதுவும் முழு இந்தியாவுக்குமின்றி இந்திய உபகண்டத்தின் மூன்றிலொரு பாகமான இந்துஸ்தான் என்ற பகுதிக்கு மட்டும் பெற்று, அதை சுயராஜ்யம் என்று கொண்டாடுவது என்றால் இதைவிட வெட்கக் கேடான முறை வேறு இருக்க முடியுமா?

வேண்டுமானால், வடநாட்டுக்காரர்களுக்கு இன்னும் அதிகமாக நம் மாகாணத்தின் பொருளாதாரத்தைச் சுரண்ட அதிகாரம் இந்த சுயராஜ்யத்தின் மூலம் ஏற்பட்டிருக்கிறதற்கு அவர்களுக்குக் கொண்டாட்டம் ஏற்படலாமே தவிர, மானமுள்ள திராவிடன் இனி திண்டாட வேண்டித்தானே இருக்கப் போகிறது? ஆகஸ்ட் சுயராஜ்யம் அநீதிக்கு அடிப்படையானதே தவிர, நம் நாட்டு மக்களின் நேர்மையான உண்மைச் சுதந்திர வாழ்வுக்கு ஏற்றதல்ல.

இந்த இந்திய உபகண்டத்தின் மற்ற மாகாணங்களை விட நம் மாகாணமே எல்லா வளப்பத்திலும், அறிவிலும் முதன்மையானதென்பது உலகறிந்த சரித்திரச் சான்றாகயிருக்கும். நமக்குள் இன ஒற்றுமையில்லாததாலேயே மற்றமாகாணத்தவர்களுக்கு, குறிப்பாக வடநாட்டுக்காரர்களுக்கு நாம் தாசானுதாசனாய் இருந்து வருகிறோம்.

இந்துஸ்தான் சுயராஜ்ய மாகாணங்களில் இனி கவர்னராக இருப்பவர்கள் சாதாரண கலெக்டர்களுக்குள்ள அதிகாரங்கள்கூட இன்றி, வடநாட்டுத் தாக்கீதுக்கு அடிபணிந்து இருக்க வேண்டுவதோடல்லாமல், வேறு ஏதாவது உண்டா என்று கேட்கிறேன். கவர்னர்களின் கதியே இவ்வாறென்றால், மந்திரிகளைப் பற்றிக் கூறவேண்டுவதில்லை. 'அட்வைசரி' சர்க்காரிலாவது மந்திரிகளுக்குச் சிறிது அதிகாரம் இருந்தது. ஆகஸ்டு சுயராஜ்யத்தில்-பஞ்சாயத்து போர்ட்டு மெம்பர்களுக்கிருக்கும் அந்தஸ்தைவிடக் குறைவானதென்றே கூறலாம்-மாகாண மந்திரிகளுக்குக் கொடுத்துள்ள அந்தஸ்து.

இந்த இலட்சணத்தில் கொண்டாட்டமாம்! காங்கிரஸ் ஆரியன்தான் கொண்டாடுகிறான் என்றால் காங்கிரஸ் திராவிடனுக்கு ரோஷம் இருக்க வேண்டாமா? ஏன், நமது தோழர்கள் அவினாசியோ, பக்தவத்சலமோ, சிவசண்முகமோ, ஆகஸ்டு சுயராஜ்ய ஜனாதிபதியாக, பிரதமராக இருக்க இலாயக்கில்லையா? வடநாட்டான் தேசபக்திதான் அசல் தேசபக்தி; மற்றவர்களுடையது போலியா? இவ்விதப் பித்த

லாடடங்களையெல்லாம் தகர்த்தெறியாமல் வெத்துவேட்டு சுயராஜ்யத்தில் எத்தனை நாளைக்கு மானத்துடன் வாழ முடியும்?

எனவே, தோழர்களே! வடநாட்டுப் பாசிச ஆட்சியை அறவே அழித்த, நம் மாகாணத்துக்கு - திராவிட நாட்டுக்குப் பூரண சுதந்தரம் கொண்ட விடுதலையையடைய வேண்டுமென்ற போராட்டம் எளிதில் கைகூடுமென்று நாம் நம்ப முடிய வில்லை. காங்கிரசின் போக்கே குண்டாந்தடி ஆட்சியாக இருந்து வருகிறது. மக்களைத்துன்புறுத்துவதே அகிம்சா மூர்த்தியின் அருளைப் பெற்ற சீடர்களின் சுயராஜ்யத்தின் அடிப்படையாக இருந்து வருகிறது. **தொழிலாளர்களைத் துன்புறுத்துவதே இன்றைய பட்டேலின் பாசிச வெறியாகக் காட்சியளிக்கிறது.** நம் நாட்டை நாம் ஆள வேண்டும். மற்ற நாட்டினரின் பொதுவான விவகாரங்களில் நட்புக் கொண்டு வாழ்வதே மானமுள்ள வாழ்வு என்றால், அதை எதிர்க்கும் துரோகிகளின்-பட்டம், பதவிக்காக இனத்தைக் காட்டிக் கொடுக்கும், வடநாட்டவர்களின் ஆதிக்கச் சுரண்டலுக்குத் துதிபாடும் நமது விபீஷணர்களின் போக்கு ஆகியவற்றிற் கிடையே நாம் போராட வேண்டியிருக்கிறது.

**எதிர்காலத்தில் இந்துஸ்தானத்தில், குறிப்பாக நம் நாட்டில் 'நவகாளி'கள் தோன்றுவதில் ஆச்சரியப்படுவதற் கில்லை. நம்மை அவ்வளவு நாசப்படுத்தவே வடநாட்டு ஏகாதி பத்தியம் தயார் செய்து கொண்டிருக்கிறது, சுயராஜ்யம் என்ற பேரால்.**

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். இவ்வளவு எதிர்ப்பு களையும் அநீதிகளையும் சகித்து வென்று, நம் திராவிடத்தின் சுதந்தரத்தை நிலைநாட்டியே தீருவோம். எனவே, அதற் கேற்ப, இளைஞர்களே! திராவிட இனத்தவர்களான தொழி லாளர்களே! விவசாயிகளே! மாணவர்களே! அறிஞர்களே! உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். திராவிடத்திலும் 'நவகாளி'கள் தோன்றினால் அதற்கு நாம் அல்ல பொறுப்பு; இந்நாட்டு ஆரியர்கள்தாம் என்பதை எதிர்காலம் கூறும். அந்த நிலையிலிருந்து பழிச்சொல் ஏற்படாவண்ணம், இனி யாவது, ஆரியம் வடநாட்டு ஆதிக்கத்துக்குத் தரகராயிருந்து நமது திராவிடத்திற்குத் துரோகம் செய்ய வேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறேன்.

நாட்டை ஆண்டதாக சரித்திரச் சான்றுகளில் தனது இனத்தைப் பற்றி இதுவரை பொறிக்கப்படும்படியான நிலை யில்லாதிருந்து வரும் ஆரியம் - நாட்டைப் பிறர்க்குக் காட்டிக் கொடுக்கும் இனம் என்பதையாவது திராவிட நாடு பிரிவினை விஷயத்திலாகிலும், பிற்காலத்தில் எழுதும்படியான நிலை யைத் தேடிக் கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கை செய் கிறேன். இதனால் - திராவிடத்தால் ஆரியத்துக்குத்தான் முழுதும் அழிவு ஏற்படும் என்பதை ஆரியம் உணரட்டும்.

எனவே, காந்தியாரல்லர், அவர்தம் சீட கோடிகளல்லர், அல்லது அந்தராத்மா அல்ல, யார் எதிர்த்தாலும், திராவிட நாட்டை அடைந்தே தீருவோம் நாம்! அதற்குப் பல தொல்லைகளைத் தாண்ட வேண்டியிருக்கும் - சலிப்படை யாதீர்! மானமில்லாது வாழ்வது வாழ்வல்ல. திராவிடன் மானமுள்ளவன் என்பது சரித்திரச் சான்று. அதற்கேற்ப அவன் இனி எந்த நாட்டவனுக்கும், எக்காரணத்தை முன்னிட்டும் அடிமையாயிரான் என்பது உறுதி. (விடுதலை, 27.7.1947: ஈ.வெ.ரா.சிந்தனைகள், 684-686, முதல் பதிப்பு 1974)

## ஏமாற்றும் திருவிழாவை திராவிர்கள் கொண்டாட வேண்டாம் - பெரியார் அறிக்கை

வெள்ளையர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறிவிட வில்லை. இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளித்திருப்பதாய்ச் சொல்லுவதன் மூலம், இந்தியாவின் நிர்வாக அதிகாரத்தை இந்தியருக்கு மாற்றியிருக்கிறார்கள்.

இந்தியர்களில் எல்லாக் கட்சி மக்களிடையேயும் அதி காரத்தை ஒப்புவிக்காமலும், எல்லோருடைய குறைகளைக் கேட்காமலும், எல்லாக் கட்சியாரையும் சமரசப்படுத்தாமலும், தங்களுக்குப் பல வழிகளிலும் வியாபாரத்திற்கும் பிரிட்டன் நலத்திற்கும் சில இரகசிய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு காங்கிரஸ்காரரிடம் மாத்திரம் அதாவது, பார்ப்பன ஆதிக்க மும் வடநாட்டார் சுரண்டல்வாதியும் கொண்ட - ஒரு சுயநல தந்திர சூழ்ச்சி கொண்ட கோஷ்டியார் கைக்கு அதிகாரத்தை மாற்றிவிட்டு, அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் நிபந்தனை யோடு அதிகாரத்தை மாற்றி இருக்கிறார்கள்.

எனவே, குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பது அதிகார மாற்றமே தவிர, நாடு ஒப்படைப்பு அல்ல.

உதாரணமாக, இந்தியாவுக்கு அரசர் ஜார்ஜ் மன்னர் ஆவார். மேற்பார்வையாளர், கவர்னர் - ஜெனரல் மேன்மை தங்கிய மவுண்ட்பேட்டன் ஆவார்.

ஆதலால், வெள்ளையருக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட ஓர் ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்தர ஆட்சியல்ல. இதன் பயனாய் இந்த நாட்டிலுள்ள காங்கிரசல்லாத மக்களுக்கு நன்மை இல்லை; பிரதிநிதித் துவம் இல்லை. வருணாசிரம தர்மக் கொடுமை ஒழிவதில்லை.

ஏற்படப் போகும் மாகாண ஆட்சி என்பது வெள்ளையர் அதிகார ஆட்சிக்காலத்திலிருந்த உரிமையைவிட மோசமான ஆட்சியேயாகும். அதிகாரங்கள் யாவும் மத்திய அரசாங்கத் திற்குத்தான் உண்டு.

சில அதிகாரங்கள்தாம் மாகாணங்களுக்கு என்றாலும், அவைகளும் கவர்னருக்கே ஒழிய, மந்திரிகளுக்கல்ல.

கவர்னர், தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்குட்பட்ட வரல்லர்; மந்திரிகள் வெறும் பொம்மைகள் - அதாவது ஆலோசனை சொல்லுபவர்கள் ஆவார்கள்.

சென்னை மாகாணத்துக்கு 2000 மைல் தூரமான தில்லியில் இருக்கும் பிரஸிடெண்ட் கையில், சென்னை மாகாண மக்களை நடத்தும் ஆட்சி இருக்கிறது.

பிரஸிடெண்டும் மத்திய அரசாங்க மந்திரிகளும் அசெம்பிளி மெம்பர்களும் சேர்ந்த மொத்த கணக்கில் 10இல் ஒரு பாக எண்ணிக்கைக்குக் குறைவான எண்ணிக்கையாளர்தாம், அங்கு சென்னை மாகாணப் பிரதிநிதிகளாய் இருப்பார்கள். அவர்களும் பெரிதும் ஆரிய அடிமைகளாகத் தாம் இருப்பார்கள்.

வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஏராளமான பேதம் உண்டு.

வியாபாரத்தில் வடநாட்டார் கொள்ளை இனியும் அதிகப்படுமே ஒழிய, சிறிதும் குறையாது.

ஆத்மார்த்தத்துறை என்னும் மதக்கொடுமையால் சமுதாயக் கொடுமை வடநாட்டார் இஷ்டப்படிதான் பெருகுமே தவிர, சமுதாய சமத்துவம் ஏற்பட வழி இல்லை.

**நாம் இன்று திராவிட நாடு கேட்பது முக்கியமாய் வட நாட்டான் பொருளாதாரச் சுரண்டலும், ஆரியன் விளைந்த சமுதாய இழிவும் நீங்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.**

**அதாவது - இன்று, நைஜாம், திருவாங்கூர், மைசூர் நாடுகள் விரும்புவது போல் சென்னை மாகாண நாலே முக்கால் கோடி திராவிட மக்கள் தங்களது கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவைகளுக்கு ஏற்ற சுயேச்சை நாடாக இருக்க வேண்டும் என்பதே.**

ஆதலால், வெள்ளையர் நம்மை மோசடி செய்ததை வெறுக்கவும் அதாவது, வடநாட்டு பனியாக்களுடையவும், ஆரியப் பார்ப்பனர்களுடையவும் சூழ்ச்சிக்கும், ஏமாற்றத் துக்கும் உள்ள தந்திரத்திற்கும் நாம் ஏமாந்துவிடவில்லை என்பதைக் காட்டவும்; பூரண சுயேச்சையுள்ள திராவிட நாடுதான் நமது இலட்சியமே தவிர, அதற்குக் குறைந்த எதைக் கொண்டும் நாம் திருப்தியடையமாட்டோம், ஓயமாட்டோம், கிளர்ச்சி செய்தே தீருவோம் என்பதைக் காட்டவும் இம்மாதம் 15-ந் தேதிநடக்கும் சுதந்தரத் திருநாள் என்னும் ‘ஆரியர்-பனியா’ ஏமாற்றுத் திருவிழாவில் நாம் கலந்து கொள்வதில்லை என்கிறோம்.

இதைக் காங்கிரஸ்காரரும், ஆரியர்-பனியாக்கள்-அடிமைகளும் திரித்துக் கூறி ‘வெள்ளையனை வெளியேற்றுவது, திராவிடர் கழகத்தாருக்கு இஷ்டமில்லை’ என்று விஷமப் பிரச்சாரம் செய்வார்களாகில், அது காங்கிரசாரின் மற்றொரு பித்தலாட்டப் பிரச்சாரம் என்று திராவிட மக்கள் கருத வேண்டுமேயொழிய ஏமாந்து போகக் கூடாதென்று வேண்டிக் கொள்கிறேன்.

(விடுதலை, 6.8.47:
ஈ.வெ.ரா.சிந்தனைகள், 686-688, முதல் பதிப்பு, 1974).

**- தொடரும்**

தோழர் மா. சமத்துவமணி அவர்களின் தாயார்

## திருமதி அரும்பு அம்மையார் மறைவு

தமிழியம், குறளியம், பெரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம், ஆகிய சிந்தனைகளின் வயப்பட்டுத் தம் வாழ்வில் சமத்துவம் பேணி வாழ்ந்து வருகின்ற தோழர் மா. சமத்துவமணி அவர்களின் தாயாரும், திரு. மாணிக்கம் அவர்களின் மனைவியுமான திருமதி அரும்பு அம்மையார் அவர்கள் உடல்நலக்குறைவால் தம் 85ஆம் அகவையில் 15-05-2018 இரவு 10.24 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

ஒரு நாள், தோழர் மா. சமத்துவமணி அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் சமத்துவமணி என்னும் பெயர் பெற்றோர் சூட்டிய பெயரா? நீங்கள் சூட்டிக்கொண்ட புனைப்பெயரா? உங்களுடைய மனத்துக்குப் பொருத்தமான பெயராக இருக்கிறதே என்று கூறினேன். பெற்றோர் சூட்டிய பெயர்தான் என்று சொன்னார். இன்று சமத்துவ நெறியுடன் சமத்துவ நெறிக்காக வாழ்ந்து வருகின்ற உங்கள் வாழ்வை நீங்கள் பிறந்தபோதே முன்னுணர்ந்து சமத்துவமணி என்று பெயர்சூட்டிய உங்கள் பெற்றோரை நேரில் பாராட்ட வேண்டும் என்று கூறினேன். அந்த வாய்ப்பு நேரவில்லை.

இரங்கல் தெரிவிப்பதற்கு முன்னதாக, தம் மகனுக்கு சமத்துவமணி எனும் நல்லதொரு பொருள்பொதிந்த தமிழ்ப்பெயரைச் சூட்டிய பெற்றோருக்குப் பாராட்டு தெரிவித்து மறைந்த திருமதி அரும்பு அம்மையார் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பிலும் மக்கள் நெஞ்சம் சார்பிலும், சிந்தனையாளன் சார்பிலும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் சார்பிலும் அதன் புரவலர் - தலைவர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் சார்பிலும் இறுதி மரியாதை செலுத்துவதுடன் அம்மையாருடைய குடும்பத்தினரின் துயரிலும் பங்குகொள்கிறோம்.

**- கலசம்**

## செந்தலை ந.கவுதமன் பெயர்த்திக்கு பெயர் சூட்டுவிழா



கோவை சூலூரில் 27.5.2018 ஞாயிறு காலை 10 மணிக்கு செந்தலை கவுதமன்-உலகநாயகி இணையரின் பெயர்த்தி தாய்மொழி-கு.இளந்தமிழன் இணையரின் மகளுக்கு தா.இ. அவனி இளமொழி எனப் பெயர் சூட்டப்பட்டது.


# ச.ப. தங்கவேலு : தன்னம்பிக்கையின் மறுபெயர்

**- துரை. மடங்கன்,** சேலம்

**புது**தில்லி, திருவேங்கடவன் கல்லூரியில், அரசியல் அறிவியல் துறையில் பணியிலிருந்த பேராசிரியர் ச.ப. தங்கவேலு, 7.5.2018 காலை மறைந்தார். கடந்த சில மாதங்களாகவே உடல்நிலை சரியில்லாமலிருந்த அவருடைய திடீர் மறைவு அவரை அறிந்த அனைவருக்கும் அதிர்ச்சி அளித்தது. (எஸ்.பி. தங்கவேலு) சவுரி பாளையம், பழனிசாமி தங்கவேலு, கடந்த முப்பத்து நான்கு ஆண்டுகளாக தில்லியில் இருந்தவர். தில்லிக்காரர்களுக்கு அவர் மதராசி; தமிழர்களுக்கோ 'டெல்லி தங்கவேலு'. கோவை அரசு கலைக்கல்லூரியில் இளங்கலையும், மாநிலக் கல்லூரியில் முதுகலையும் படித்து, தில்லி சென்று ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (ஜே.என்.யு.) அரசியல் அறிவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றார். ஒன்றிரண்டு ஆண்டுகள், இந்திராகாந்தி திறந்த வெளிப் பல்கலை, காட்மண்டுவில் அரசு செயலருக்கு அரசியல் ஆவணப் பணி ஆகியவற்றில் கழித்து, தொடர்ந்து இருபத்து நான்கு ஆண்டுகள் தில்லி திருவேங்கடவன் கல்லூரியில் பணிபுரிந்தார்.

வாழ்ந்த காலம் முழுதும் 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே' வாழ்ந்து மறைந்தார் என்பதுவே அவருடைய சிறப்பு. அப்பா ஆலைத் தொழிலாளி; தாயார் சிறுகக்கட்டி பெருக வாழ்ந்தவர். தங்கவேலுவின் உடன்பிறந்த தம்பி தங்கையர் அறுவர். குடும்பத்தில் மூத்தவரான தங்கவேலு பதின்ம அகவையை எட்டும் முன்பே இளம்பிள்ளை வாதத்தால் (போலியோ) தாக்குண்டார். பள்ளிப் பருவத்தில் புத்தகச் சுமையைத் தூக்க இயலாத நிலையில் நண்பர்களே அவருக்குச் சுமைதாங்கி ஆயினர். அந்த நட்பு வட்டத்தை தன்னுடைய இறப்பு வரை பெருமுயற்சி எடுத்துப் பேணிக்காத்தார். உறுப்புக்குறையின்றி நல்ல உடல்நலம் வாய்த்தும் முறையான பணியமையாமல் வாடிய நண்பர்களை ஊக்குவித்து அவர்களின் உள்ளுறை ஆற்றல்களை வெளிக்கொண்டு வந்து, அவர்கள் வளர உதவினார்.

நாட்டாரியலர் தொ. பரமசிவன், தில்லியில் தங்கவேலுவின் வீட்டை 'அடையா நெடுங்கதவம்' என்றே அழைப்பார். தமிழ்/பிற நாடுகளிலிருந்து முன்பின் தெரிந்த/தெரியாத எவர் எந்த நேரத்தில் சென்றாலும் அவருடைய அறைக்கதவு திறந்தே இருக்கும். நடு இரவிலும் நண்பர்கள் வந்து தங்குவர். 'எமக்கும் தொல்லை வேண்டா; வருபவரும் தொல்லைப்படக் கூடாது' என்பாரவர். நெடுங்காலம் பல்கலை மின் துறை ஊழியர்-வெளியே வீடெடுத்துத் தங்க இயலாமல் - தங்கவேலுவின் 'அறைவாசி'யாகவே இருந்தார்; உறுதுணையாகவும் செயல்பட்டார். நண்பர்களை அறைக்கு அழைத்து வரவும் வழி அனுப்பவுமான பயணங்களுக்கும், வீட்டுக்கான மளிகைகளுக்குச் செல்வதுமாக உற்ற நண்பராக இருந்தார்.



கலை, இலக்கிய வாதிகள், அரசியல் வாணர்கள், தில்லி வரும் மாணவர்கள், இளமைக்கால நண்பர்கள், கல்வி வட்டத்தைச் சேர்த்தோர், இதழியல் துறையினர், மக்கள் உரிமை இயக்கத்தோர், ஜே.என்.யு. எனும் ஆலமரத்துப் பறவைகள் எனப்பலரும் ஒரு நாளாவது (படிக்கும் போது ஜே.என்.யூ.வின் பூர்வாஞ்சல் விடுதி; பணியாற்றும் போது திருவேங்கடவன் கல்லூரி தங்குமனை) தங்கவேலுவின் அறையில் தங்கியோராக இருப்பர்.

இடதுசாரிக் கருத்துகளுக்குப் பெயர்போன பல்கலையில் பயின்றதாலும் சமூகத்தின் அடித்தட்டில் - பெருங்குடும்பத்தில் இருந்து வந்ததாலும், தங்கவேலு இயல்பாகவே இடதுசாரிக் கருத்துள்ளவராகவே இருந்தார். தமிழ்நாட்டு மண்ணில் முளைத்த பயிராக இருந்ததால், பெரியாரை நெஞ்சில் நிறுத்தினார். சமூகத்தின் மேல்தட்டு அரசியலாளர் குழந்தைகளுக்கே சென்ற தலைமுறையில் அறிமுகமாயிருந்த ஜே.என்.யு. இன்று கன்னையாகுமார், ரோகித் விமுலர், அம்பேத்கர் - பெரியார் படிப்பு வட்டங்களால் பொது வெளியில் பரவலாகத் தெரிய வந்துள்ளது. தமிழ்நாட்டின் எம்.எஸ்.எஸ். பாண்டியன் உட்படப் பலரும் ஜே.என்.யு. மாணவர் குழாத்தின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர்களாக இருந்தனர்.

மார்க்சை விரும்பிப் படித்திருந்தாலும், சமூவியலில் மாக்ஸ் வெபரின் கருத்துகளை கவனப்படுத்துவார். அண்டனி கிட்டனின் நூல்களிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது. தன் வரலாறுகளை விரும்பிப் படிப்பவராக இருந்த தங்கவேலு, ஆனைமுத்து அவர்களின் 'பெரியார் வாழ்க்கை வரலாற்றை' ஆர்வமுடன் எதிர்நோக்கியிருந்தார். தாம் பணியாற்றிய கல்லூரியின் மேனாள் பேராசிரியர் சாலினி பணியாற்றியதை நினைவு கூர்ந்து 'செம்மொழிக்காக உண்மையில் உயிரிழந்தவர் சாலினியே' என்பார். (தில்லியில் நடைபெற்ற செம்மொழிக்

கருத்தரங்கில் கலந்துகொள்ளப் புறப்பட்டு வரும் வழியில் ஒரு நேர்ச்சியில் அவர் இறந்தார்).

'கதை' எப்படியிருந்தாலும், சிறுகதை, கவிதை, புதினம், அறிவியல் புனைவு, நாடகம் போன்றவற்றில் புதுநடையை உருவாக்கியவர் 'சுஜாதா' என்பார். தி. ஜானகிராமன் கதைகளில் தஞ்சை மண்ணின் நிலவுடைமைப் பண்பாட்டுப் பதிவைச் சுட்டிக்காட்டுவார். ச. சீனிவாசனின் (உடன் பணியாற்றிய பேராசிரியர்) தில்லிச் சிறுகதைத் தொகுப்பைக் குறிப்பிட்டு, தில்லியைப் பற்றித் தமிழ் எழுத்தாளரின் பார்வைக் கோணங்களைப் பலபட விளக்குவார். 'நீல நட்சத்திர நடவடிக்கை, இந்திராகாந்தி படுகொலை'யை ஒட்டி சாருநிவேதிதாவின் 'பிளாக் நம்பர்:27 திர்லோக்புரி' சிறுகதையை சிறப்பாகக் குறிப்பிடுவார்.

அயோத்திதாசரின் இதழ் தொகுப்பைத் தொகுத்த ஞான. அலோசியஸ் வெளியிட்ட-வெளியிடும் 'கிரிட்டிகல் கொஸ்ட்'-டின் குறுநூல்களைத் தொடர்ந்து நண்பர்களுக்கு வாங்கி அனுப்பி வந்தார். தில்லியில் இருந்து வெளிவந்த Marxism Today, Third World Calling, Main Stream, Lokayan இதழ்களையும், Vanguard, EPW, Frontier, Social Scientist இதழ்களையும் அறிமுகப் படுத்தினார்.

கூபா (கியூபா), இலத்தீன், அமெரிக்க நாடுகள், பொதுவுடைமைக் கட்சிகள் ('பல பொதுமைக் கட்சிகள் ஒரு நாட்டில் இருப்பதில் என்ன தவறு?' என்பார்). ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள், சீனம் ஆகியவை குறித்து அவருக்கென்று தனிப்பார்வைகள் இருந்தன.

சாணக்கியபுரியின் அரசியலையும், இடதுசாரிகள், லோகியா சோசலிஸ்டுகள், பெரியாரியர்கள், அம்பேத்கரியர்கள் மூலம் துணைக்கண்ட அரசியலையும் கூர்மையாக விள்ளனம் (விமர்சனம்) செய்வார்.

இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டப் படிப்பின் போது அறிமுகமான நண்பர் குழுவை தொடர்ந்து 34 ஆண்டுகள் பேணி வந்தார். அவ்வகையில் விடியல் பதிப்பக செளந்தர், கல்பாக்கம் நடராசன் போன்றோர் அவருடைய அனைத்து இன்ப துன்பங்களில் பங்கேற்றவர்களாவர். ஆத்தூர் பழனிவேலு, ஈரோடு மோகன், கோவை அரசுக் கல்லூரி முதல்வர் முரளீதரன், சலீம் அலி பறவைகள் ஆய்வக இயக்குநர் அஜீஸ், MIDS நண்பர்கள் அனைவரும் அவருடன் பயின்றோரே. கு.ச. ஆனந்தனின், 'மலர்க மாநிலச் சுயாட்சி' நூலை வடக்கின் தோழர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

தோழர்கள் வே.ஆனைமுத்து, எஸ்.என். நாகராசன், எஸ்.வி.ஆர்., ஞான அலோசியஸ், து. மூர்த்தி, சங்கமித்ரா, காவிரிநாடன், பா. செயப்பிரகாசம், தொ. பரமசிவன், பொன். சந்திரன், அமரந்த்தா, கல்பாக்கம் நடராசன், துரை. ஆனந்தன் போன்றோர் தில்லி செல்லும் பொழுது பெரும்பாலும் தங்கவேலுவுடன் உடனுறைவர். இந்திரா பார்த்தசாரதி, சாலையார், ஆதவன் தொடங்கி அறவேந்தன், பிரேம் உட்பட இன்றைய வரையிலான படைப்பாளிகளை வாசித்தவராக அவர் இருந்தார்.

ஜே.என்.யு.வில் அவருடன் படித்த நண்பர்கள் பலரும் அவர் இறப்பை அறிந்து கோவை வந்து இறுதி நிகழ்ச்சி வரை இருந்தனர். தில்லி, அய்தராபாத், பெங்களூரு (சென்னை, நெல்லை, கல்பாக்கம், சேலம், ஆத்தூர், ஈரோடு) எனப் பிற நாடுகளிலிருந்தும் வந்து அஞ்சலி செலுத்தினர். வெளிநாடுவாழ் நண்பர்களும், குடும்பங்களும் உடனடியாக முகநூலில் தங்கள் பதிவுகளை இட்டிருந்தனர். பல்லடம் மாணிக்கம் போன்றோர் - ஓரிருமுறை பார்த்துப் பழகி இருப்பினும் அவருடைய சமூகச் செயல்பாடுகளை கைப்பேசி வழி நினைவு கூர்ந்தனர்.

விடியல் பதிப்பக நண்பர்கள் அனைவரும் வந்திருந்து இறுதி நிகழ்ச்சி வரை இருந்தனர். ஆனைமுத்துவின் சார்பில் சூலூர் பாவேந்தர் பேரவைத் தோழர்கள் செந்தலை கவுதமன் திராவிட தமிழர் பேரவை சார்பில் தேவராசன் போன்றோர் வந்திருந்து அஞ்சலி செலுத்தினர்.

முகந்தெரிந்தோர் மட்டுமின்றி, பீகார், அசாம், வடகிழக்கு மாநில முகந்தெரியா மாணவர்களுக்கும், கல்வி உதவிகள், பண உதவி, வேலை வாய்ப்பு உதவிகளை அவர் செய்தார். செவ்வாயன்று ம.பெ.ச.க. சார்பில் தில்லியிலும் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. கண் சிகிச்சைக்காக சென்னையில் அவர் தங்கி இருந்த போது, தானி (ஆட்டோ) ஓட்டுநர் கந்து வட்டி வாங்கி இருப்பதை அறிந்து, அதிலிருந்து உடனே மீள அவர் உதவியதை தானி ஓட்டுநர் சொன்னார். நண்பர்களுக்குக் கல்வி, திருமணம், நூல் முயற்சிகளுக்கு அவர் வலது கை தந்தது இடது கைக்குத் தெரியாது.

வாய்ப்பு நேரும் போது, தன்னுடன் பயின்றோர், எங்கெங்கு பணியில் உள்ளனர் என்று கூறி நண்பர்களுக்கு வழிகாட்டுவார். கல்வியாளர்களிடமும், பல்துறை சார் நண்பர்களிடமும் நட்பைப் பேணியதன் மூலம் நண்பர்களுக்கு உற்றுழி உதவினார். வசதியற்ற நண்பர்களை தில்லிக்கு அழைத்து மாதக் கணக்கில் தங்க வைத்தார். தோழர் ஆனைமுத்து ஏற்படுத்திய அறக்கட்டளை நூலகத்துக்கான ஆங்கில நூல்களைப் பெரிதும் அவரே தேர்ந்தெடுத்தார். சிந்தனையாளன், பெரியார் ஈரா இதழ்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். நிறை வாழ்வு வாழும் தோழர் ஆனைமுத்து சொன்னார் : 'தோழர், தங்கவேலுவைப் போன்று (அவர் பேராசிரியர் என்றே குறிப்பிடுவார்) ஊக்கம், தன்னம்பிக்கை கொண்ட வேறொருவரைப் பார்க்க முடியாது.' முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை அவர் மறைந்த நாளில் நேரில் கண்டோம்.

# பகுத்தறிவுவாதியும் பேராசிரியருமான
# சவுரிபாளையம் பழனிச்சாமி தங்கவேலு மறைவு

(22.07.1957-07.05.2018) சிந்தனையாளன் இதழின் வாழ்நாள் உறுப்பினரும், தமிழ் ஆர்வலரும், பகுத்தறிவுவாதியும், தில்லிப் பல்கலைக்கழக அரசியல் அறிவியல்துறைப் பேராசிரியருமான டாக்டர்.ச.ப. தங்கவேலு அவர்கள் 07.05.2018 திங்களன்று காலை 7.30 மணியளவில் தமது 61-வது அகவையில் இயற்கை எய்தினார். அன்னாரது பூத உடல் அவர் பணியாற்றிய ஸ்ரீ வெங் கடேஸ்வரா கல்லூரி வளாகத்திலுள்ள அவரது குடியிருப்பில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவருடன் பணியாற்றிய பேராசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர் ஆகியோர் திரளாக வந்து அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் அவரது சொந்த ஊரான கோவை சிங்கா நல்லூர் கொண்டு செல்லப்பட்டு 08.05.2018 செவ்வாய் அன்று மதியம் 1.30 மணியளவில் தகனம் செய்யப் பட்டது. உடன்பிறந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், பகுத்தறிவுவாதிகள்,தமிழ் எழுத்தாளர்கள் பலர் கலந்து கொண்டு அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

உடல்நலக் குறைவு காரணமாகத் திரு. ஆனைமுத்து அய்யாஅவர்கள் சென்னையிலிருந்து கோவை வரைப் பிரயாணம் செய்ய முடியாத நிலையில் அவரது சார்பில் பலர்கோவை சென்று இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். மறுநாள் அதாவது 08.05.2018 செவ்வாய் அன்று பேராசிரியர் தங்கவேலு பணியாற்றிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரியில் மதியம் 12.30 மணி யளவில் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. இதில், கால்லூரி முதல்வர் (பொறுப்பு) டாக்டர். ஆர்.பி. சிங் உட்படப் பல பேராசிரியர்கள், நண்பர்கள் மற்றும் மாண வர்கள் பலர் இரங்கல் உரை ஆற்றினர்.

09.05.2018 புதன் அன்று புது தில்லி லோதி சாலை யிலுள்ள இந்திய சமூக நிறுவனத்தில் நடைபெற்ற பெரியார் அம்பேத்கர் சேவை மைய மே மாதக் கூட்டத்திலும் நினை வேந்தல் கூட்டம் நடைபெற்றது. திரு. பி.ராமமூர்த்தி, திரு. ச. சீனிவாசன் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்திய பின்னர், ஒருநிமிட மவுன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பேராசிரியர் தங்கவேலுவைப் பற்றிய சில நினைவுகள்....

வாழ்க்கைப் பயணம் : எதிர்நீச்சல் கோயமுத்தூர் மாவட்டம் சவுரிபாளையம் பழனிச்சாமி-பாப்பம்மாள் தம்பதியினருக்கு 22.07.1957-இல் மூத்த மகனாகத் தங்கவேலு பிறந்தார். பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி யைக் கோவையிலும், முதுகலைப் படிப்பை சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்றார். உயர்கல்வியைப் புது தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில்:



துறைத்தலைவர் டாக்டர் சி.சிவசங்கர ரெட்டியுடன் தங்கவேலு

(1966-1979) என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

17 ஜூலை, 1995 முதல் புது தில்லியிலுள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி யில் அரசியல் அறிவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். இருபத்து மூன்று ஆண்டுகள் கல்விப் பணி ஆற்றியிருக்கின்ற டாக்டர் தங்கவேலு, இரண்டுமுறை துறைத் தலைவர் பொறுப்பையும் செவ்வனே செய்து தனது பங்களிப்பை நிறைவேற்றிருக் கிறார். ஆசிரியப் பணியில் சேர்வதற்கு முன் சில காலம் பேரா. பாரிக் அவர்களின் ஆராய்ச்சித் திட்ட உதவி யாளராகப் பணியாற்றினார். ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக நேபாள நாட்டிற்குச் சென்று வந்த அனுபவமும் பெற்றவர். முனைவர் பட்ட ஆய்வுக்கு முன்னும் பின்னும் காலை முதல் மாலை வரை புது தில்லியிலுள்ள தான் அவரது புகலிடம். அர்ப்பணிப்புடனான இந்த முழுநேர நூலக வாசமே அவருக்குக் கல்லூரியில் நிரந்தர வேலை கிடைக்க உதவியாக அமைந்தது என்றால் அது மிகை யாகாது.

டாக்டர் தங்கவேலு அவர்களின் கல்வித் தகுதியையும் புலமையையும் அங்கீகரித்து நிரந்தர வேலை வாய்ப்பு வழங்கிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி ஆட்சிக் குழுவிற்கும், அதற்கு உறுதுணையாக இருந்த அப்போ தைய கல்லூரி முதல்வர் டாக்டர் ஏ. சங்கர ரெட்டி அவர் களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள், பாராட்டுக்கள்.

நூலகமே கதி என்று கிடந்த தங்கவேலுவை அடை யாளம் கண்டு அழைத்துவந்து கல்லூரி முதல்வருக்கு அறிமுகப்படுத்தி வேலைவாய்ப்புக் கிடைக்க சிபாரிசு செய்து உதவிய அப்போதைய துறைத்தலைவர் டாக்டர்

சி. சிவசங்கர ரெட்டி அவர்கள் என்றும் நன்றிக்குரியவர். பதின்ம வயதில் பேராசிரியர் தங்கவேலு அவர்கள் போலியோ தாக்கத்திற்கு ஆட்பட்ட நிலையில் அவரது வாழ்க்கைப் பயணம் பெரும் சவாலானதாக மாறியது. தான் ஒரு மாற்றுத் திறனாளியாகிவிட்டதை ஒரு பெரிய குறையாகக் கருதாமல் மன உறுதியுடன் சென்னைக்கும் பின்னர் பல்லாயிரம் கிலோமீட்டர் தூரம் கடந்து தில்லி வரைப் பிரயாணித்து முயன்று படித்து முதுகலை மற்றும் முனைவர் பட்டங்கள் பெற்று வெற்றியும் கண்டார். சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ஒருவரின் மிகப்பெரிய சாதனை என்றே இதனைக் கூறலாம். சுயநலம் கருதாமல் உடன்பிறந்தவர்களின் பொதுநலன் கருதியும் அவர்களது எதிர்கால வாழ்க்கைத்தர மேம்பாடு கருதியும் தொலைநோக்குச் சிந்தனைகளுடனும் திருமணம் எனும் பந்தத்திற்குள் தங்கவேலு தன்னை இணைத்துக்கொள்ளவில்லை. வாழ்வின் இறுதிக்காலம் வரை தனிமையாகவே வாழ்ந்து கழித்தார். அதை ஈடு செய்யும் விதமாக சமூக சேவை செய்வதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். தமது நடுத்தர வயதில் பெற்றோரை இழந்த தங்கவேலுவுக்குத் தன் ஒற்றை வருமானத்தில் தம்பி-தங்கைகள் கொண்ட பெரிய குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பொறுப்பு ஏற்பட்டது. எதையும் மன உறுதியுடன் எதிர்கொண்டதுதான் அவரது மிகப்பெரிய பலம்.

நீங்கள் கற்றதெல்லாம் கருத்தியல் மார்க்சியம், நான் அனுபவித்ததோ செயல்முறை மார்க்சிசம் என்றெல்லாம் தான் கடந்து வந்த கரடுமுரடான அனுபவங்களை மனம் திறந்து முரளீதர ராவிடம் பேசியிருக்கிறார். மக்கள் மீதும் மாக்கள் மீதும் கூர்ந்த கவனம் உடையவராக இருந்தார். நேருவைப் போலக் குழந்தைகள் என்றாலே அவருக்குக் கொள்ளைப் பிரியம். அவர்கள் மீது அலாதியான அன்பும் பாசமும் காட்டுவார். கல்லூரி வளாகத்திலிலுள்ள பல ஏழைக் குழந்தைகளுக்கு மாலை நேரங்களில் இலவசமாகப் பயிற்சி வகுப்புகள் நடத்தி அவர்களின் அறிவுக் குறைகளை நீக்கிமனநிறைவு அடைவார். பல ஏழைக் கல்லூரி மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்திக் கரை சேர்த்தவர். உதவி கேட்டு வருபவர்களுக்கு இரக்கக் குணத்தோடு எந்தச் சூழ்நிலையிலும் முன்னின்று உதவக்கூடியவர். ஆபத்து நேர்ந்தவர்களுக்காகத் தனது பங்களிப்போடு நண்பர்களிடமும் பணம், பொருள் வசூல் செய்து ஒருங்கிணைத்து உதவுவதில் முன்னின்று செயல்படுவார். சிறு வயதிலிருந்தே சிறுபத்திரிகைகள் வாசிக்கும் பழக்கம் கொண்டவர். வாசிப்பை நேசிப்பதற்குத் திரு. கோவை மடங்கன் அவர்கள்தான் அடித்தளமிட்டார் என்று அடிக்கடி சொல்லி மகிழ்வார். தங்கவேலு அரசியல் அறிவியல் துறையில் பட்ட மேற்படிப்பு முடித்திருந்தாலும் அவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், ஓயாத வாசிப்புத் திறனும் அவரைப் பல்துறை அறிஞராக்கியது எனலாம். புத்தகங்கள் தான் அவரது உலகம். அபரிமிதமான நினைவாற்றலும், கூர்மையான சிந்தனைத்திறனும் கொண்டவர். அடிப்படையில் நல்ல மனிதர். ரவுத்திரம் பழகியிருந்தாலும், அவரது ரவுத்திரம் இதுவரை நன்மையையே விளைவித்திருக்கிறது.

பேராசிரியர் தங்கவேலு தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியங்கள் மீது ஆழ்ந்த பற்றும்,புலமையும் உடையவர். தமிழ்ச் சிறுகதைகள் அவருக்கு ரொம்பப் பிடிக்கும், ஏராளமான சிறுகதைகளை வாசித்து முடித்திருப்பதோடு அவற்றின் சாராம்சங்களைத் தமது வாழ்க்கையிலும் பயன்படுத்தி மனநிறைவு கண்டுள்ளார். இலக்கியப் படிப்பின் வழி வாழ்க்கையைச் செப்பனிட முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

மாணவர்களுக்குப் பயிற்றுவித்தல் என்பது அவருக்கு உயிர் போன்றது. உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவ விடுப்பில் இருந்த காலங்களில் கூட மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க இயலாத சூழலை எண்ணி அடிக்கடி வருந்தியிருக்கிறார். கொடும் வெயில், கடுங் குளிர், கொட்டும் மழை என எந்தச் சூழ்நிலையிலும் வகுப்பறைகளுக்குச் செல்லத் தவறியதில்லை. அதே சமயம் வகுப்பறைக்கு வராத மாணவர்களிடம் கடுமையாக நடந்துகொள்வார். பின்னர் சமாதானமாகி, உங்களுடைய நன்மைக்காகவே என்று அவர்களுக்கு ஆறுதலும் கூறுவார். வகுப்பறைகளுக்குவருவதற்கு முன் அதற்கான தயாரிப்பில் அதிகம் கவனம் செலுத்திக் கூடுதல் தகவல்களுடன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு வருவார்.அனைத்துலகத் தத்துவ அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் குறித்த அறிய தகவல்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் தங்கவேலு சார் வல்லவர். எந்தக் கருத்தையும் எளிமையான எடுத்துக் காட்டுகளுடன் மாணவர்களுக்குப் புரியவைப்பார். மாணவர்கள் எழுப்பும் ஐயங்களைத் தெளிவுபடுத்து வதற்காகத் தகவல்களைத் திரட்டுவதில் அதீத சிரத்தை எடுத்துக் கொள்வார். மாணவர்கள் மனதில் நீங்காத இடம்பிடித்தவர் என அவரது மாணவிசரஸ்வதி தனது வகுப்பறை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

மாணவர்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர், அவர்களுக்காகக் குரல் கொடுப்பதில் முதன்மையானவர். இவரது உதவும் மனப்பானமை,அறிவாற்றல் மற்றும் பயிற்றுவித்தல் திறனைப் பயன்படுத்திக்கொள்ள மாணவர்கள் எப்போதும் இவரைப் புடைசூழ்ந்திருப்பர். கடந்த 23 ஆண்டுகளில் மாணவர்களுக்கு ஒரு ஆசிரியராக மட்டுமல்லாமல் பலருக்குக் குருவாக, வழிகாட்டியாக, நெறியாளராகத் திகழ்ந்திருக்கிறார். முன்னாள் மாணவர்கள் உட்பட நடப்பு மாணவர்களும் திரளாக வந்து வரிசையில் நின்று இறுதி அஞ்சலி செலுத்தியமையே அதற்கு சாட்சி. மார்க்சிய அறிவையும், அறிஞர்களையும் குறித்து அத்துபடியானவர். ட்ராட்ஸ் கியால் கவரப்பட்ட பேராசிரியர் தங்கவேலு அவரது எழுத்துக்கள் மீதும் தீராத காதல் கொண்டவராகவும் வழித்தோன்றலாகவும் விளங்கினார். சமகால மார்க்சியம் குறித்த கூர்நோக்கும்

தெளிந்த சிந்தனையும் உடையவர். அவரது அமைதி, அனுசரிப்பு மற்றும் பல்துறை அறிவுத் திறனுக்காகவே பலர் இவரிடம் நட்பு பாராட்டினர்.

திரு. ஆனைமுத்து அய்யாவுடன் பெரியார்-அம்பேத்கர் கருத்து ரீதியிலான நீண்டகால உறவும், நெருக்கமும் கொண்டவர் டாக்டர் தங்கவேலு. விகிதாச்சார அடிப் படையில் இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி போராட்டங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்துவதற்காக ஆனைமுத்து அய்யா அவர்கள் புது தில்லி வரும்போதெல்லாம் பேராசிரியர் தங்கவேலு வீட்டில் தங்குவது வழக்கம். அப்போது, இட ஒதுக்கீடு, தமிழர் உரிமை குறித்து அய்யாவுடன் ஆரோக்கியமான நீண்ட கலந்துரையாடல் நிகழ்த்துவார். சிந்தனையாளன் இதழைக் கூடுதல் பிரதிகள் பெற்று நண்பர்கள் மற்றும் மாணவர்களுக்குக் கொடுத்துப் படிக்கச் செய்து அம்பேத்கர்-பெரியாரியக் கொள்கைகளைத் தில்லி மக்களிடையே பரவிடச் செய்தார். **(தங்கவேலு தனது வீட்டில் திரு. ஆனைமுத்து அய்யாவுடன் எடுத்துக் கொண்ட படம். உடன் அவருடைய ஆத்ம நண்பரும் அவர் பெயர் சூட்டிய காவேரியும்)**

வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்பது போல போட்டித் தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் அலுவல் நிமித்தம் தமிழகத்திலிருந்து தில்லிக்கு வரும் தமிழர் பலருக்குத் தங்கவேலு தமது வீட்டில் உணவும் உறைவிடமும் கொடுத்து அடைக்கலப்படுத்துவதைக் கடைசிவரை ஒரு சேவையாகவே செய்து வந்தார். தங்கவேலு அவர்கள், தான் குடியிருந்த வீட்டின் கதவை ஒருநாளும் உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டதே இல்லை. எனக்கும் திறந்துவிட வேண்டும் என்ற தொந்தர வில்லை, உள்ளே வருபவர்களுக்கும் தொந்தரவில்லை என்று நியாயப்படுத்துவார்.

**அறிவுச் செல்வத்தை நாடிச் செல்வதில் எப்போதும் மிகுந்த ஆர்வம் கொண்டவர் தங்கவேலு, மறைவிற்கு நான்கைந்து மாதங்களுக்கு முன்னர் கூட 4-6 ஜனவரி, 2018-இல் புது தில்லியிலுள்ள நடைபெற்ற, 100 என்ற பொருளிலான மூன்று நாள் தேசியக் கருத்தரங்கில் ஜனவரி மாதக் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டார். அறிவைத் தேடிச் சென்ற அதே நேரம் குளிரின் தாக்கத்தை எதிர்கொண்ட அதுநாள் முதலே உடல்நலக் குறைவும் தொற்றிக்கொண்டது. தங்கவேலு வின் அருமைத் தம்பி திரு. பாலன் கூடுதல் சிரத்தையுடன் ஒரு குழந்தையைக் கையாள்வது போல் ஊண், உறக்கமின்றி எப்போதும் உடனிருந்து அண்ண னைக் கவனித்துக்கொண்டார். கிட்டத்தட்ட ஒரு மருத்து வராகவே மாறிவிட்டார் பாலன்.**

தங்கவேலுவின் தங்கைகளான மரகதம், மற்றும் வாசுகி இருவரும் கோவையிலிருந்து ஒருவர் மாற்றி ஒருவர் தில்லிக்கு வந்து அண்ணனுக்கு அருகிலிருந்து வாய்க்கு ருசியானதைச் சமைத்துக் கொடுத்துப் பணி விடைகளும் செய்தனர்.

நீண்ட காலம் நீரிழிவு நோயுடன் வாழ்ந்தாலும் கடந்த ஜனவரி, 2018-லிருந்து திடீரென நோயின் தாக்கம் அதிகரித்துவிட்டது. நாட்பட்ட நீரிழிவு நோய் மருந்து மாத்திரைகளுக்கு மட்டுப்படாததால் சிகிச்சை பலனின்றி புது டில்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் உயிர் பிரிந்தது. தங்கவேலுவுக்குப் பல்வேறு நிலைகளில் உதவிகள் செய்ததில், திரு. செல்வக்குமார், திரு. விஸ்வம், திரு.மூர்த்தி, ஆகியோருக்குப் பெரும் பங்குண்டு தில்லிக்கு அருகிலுள்ள குருகிராமில் மளிகைக்கடை நடத்திவரும் திரு. செல்வகுமார் எந்த நேரத்திலும் பிரதிபலன் பாராமல் ஒரு சாரதி போல் ஓடிவந்து வந்து உதவிகள் செய்த அவர் என்றும் நினைக்கப்பட வேண்டியவர். தில்லியிலிருந்து கோவை வரை தங்கவேலுவின் பூத உடலோடு விமானத் தில் பயணித்து நல்லடக்கம் செய்து திரும்பிய செல்வ குமாரின் சேவைக்கு ஈடு இணை இல்லை!.

மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் அவசரம் உடனே வாருங்கள்!, அவசரமாகப் பணம் தேவை கொண்டு வாருங்கள்! என்று எந்த நேரத்தில் கூப்பிட்டாலும் ஓடோடி வந்து உதவிய விஸ்வம் அவர்களின் மனிதாபிமான சேவை விஸ்வரூப சேவை என்றே சொல்லலாம்.

மருத்துவமனையில் இறந்த தங்கவேலுவின் உடலைப் பெற்று உடற்கூறு அறுவை செய்ய ஏற்பாடு செய்வதிலி ருந்து உடலை விமானத்தில் ஏற்றிக் கோவை அனுப் பியது வரை அத்தனை வேலைகளையும் நானே செய்வேன் என்று எல்லா வேலைகளையும் தலைமேல் போட்டுக்கொண்டு பம்பரமாகச் சுழன்று இயங்கிய மூர்த்தி அவர்களை எத்தனை பாராட்டினாலும் தகும். எல்லா வற்றிற்கும் மேலாக இருபது வருடங்களாகத் தங்க வேலுவுக்கு சமையல் செய்து கொடுத்து, துணிகள் துவைத்து,வீட்டு வேலைகள் செய்து கடைசிவரைக் கவனித்துக் கொண்ட நேபாள நாட்டுப் பார்வதி அம்மா வின் தாய்மை உள்ளம் போற்றுதலுக்குரியது.

இன்னும் அவர்பால் அன்புகொண்டு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைப் பதிவு செய்கிறோம். மதச்சார்பின்மையில் ஆழ்ந்த பற்றும், மனித உரிமை குறித்து அதிகம் சிந்திதும் பேசியும் வாழ்ந்த பேரா. ச.ப. தங்கவேலுவின் இழப்பு அவர் சார்ந்த அரசியல் அறிவியல் துறைக்கும், பணி யாற்றிய கல்லூரிக்கும், அவரது மாணவர்களுக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் பேரிழப்பாகும். குறிப்பாகப் பயிற்றுவித்தல் துறைக்கு மாபெரும் இழப்பாகும்.

பேரா. ச.ப. தங்கவேலு அவர்களை இழந்து வாடும் அவரது சகோதர-சகோதரிகளுக்கும், உறவினர்களுக் கும், உற்ற நண்பர்களுக்கும் அவர் பணியாற்றிய கல்லூரி சார்பாகவும் மற்றும் அவரது மாணவர்கள், சக ஆசிரியர் கள், நண்பர்கள் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் பதிவு செய்கிறோம்.

**வாழ்க பேராசிரியர் ச.ப.தங்கவேலுவின் புகழ்.**

முனைவர் ச. சீனிவாசன்,
தமிழ் இணைப்பேராசிரியர்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி, புது தில்லி.
கைபேசி : +91-9911223484

# ஒழியட்டும் அடிமை ஆட்சி


இப்போதெல்லாம்
தமிழ்நாட்டைப்
பிறாண்டும்
ஏராளச் சிக்கல்கள்
இவற்றுக்கிடையே
சும்மாவே குரைக்கின்றன
இரண்டு அக்ரகாரச்
சொறிநாய்கள்
எச்ச(கல) எச். ராஜா
எஸ்.வி. சேகர்
இவை படமெடுத்தாடும்
பச்சைப் பார்ப்பன
பாம்புகள்.

திரிபுரா
ஆட்சி மாற்றத்துக்குப்பின்
இலெனின் சிலைகள் தகர்ந்தன
அம்பேத்கர் சிலைகளுக்கு
அவமதிப்பு
பெரியார் சிலைகளும்
உடைந்தன
காரைக்குடி கசுமாளம்
நாக்கில் நரம்பில்லை!
அதற்கு
நாராசமாய்ப் பேசுவது
பாயாசம் பருகுவதுபோல்.


ஜம்மு–காஷ்மீர் சிறுமி
ஆசிபா
கோயிலுக்குள்ளேயே
கொடூரமாய்ச் சிதைக்கப்பட்டாள்.
கருவறைக்குக்
கதவுகள் இருக்குமே
என்றது இந்தக் கழிசடை
கண்டதைப் பதிவிடும், பின்
நான் இல்லை எனப்
பல்டி அடிக்கும்.

எஸ்.வி. சேகர் எனும்
இன்னொரு எருமை
வாயைத் திறந்தாலே அழுக்கு
வடிகட்டிய பார்ப்பனக் கொழுப்பு
தாய்க்குலத்தை இழிவுபடுத்தும்
தறுதலை
அடுத்த ஆணோடு
தாராளமாகப்
படுக்கையைப் பகிரத்
தயாராகும்
பெண் பத்திரிகையாளர்
பெரிய ஆளாகலாம்
என்பவன் வாயை
பினாயில் ஊற்றிக் கழுவினாலும்
தொலையாது பீடை.

இவனையெல்லாம்
சிறையில் பூட்ட
எடப்பாடி அரசுக்கு
வக்கில்லை
புரட்சிப் பாடகர் கோவன்
காரணமேயில்லாமல் கைது
அச்சடித்த துண்டறிக்கை
அளித்தார் என்பதற்காய்ச்
சேலம் மாணவி
வளர்மதிக்குச் சிறை
முள்ளிவாய்க்கால்
நினைவேந்தல் நடத்தியதால்
திருமுருகன் காந்திக்குக்
குண்டர் சட்டம்
இந்தக் கேடுகெட்ட ஆட்சியில்
ராஜாவும், சேகரும்
ராஜநடை போட்டு
ஊர் சுற்றுகிறார்கள்
பாடுபடும் மக்களுக்கோ
தொல்லைகள் பலப்பல,
ஒழியட்டும் அடிமை ஆட்சி







- **தமிழேந்தி**

# கன்னியாகுமரி திருவள்ளுவர் அறக்கட்டளையின் ஆண்டு விழா

வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கடலும் கூடும் கன்னி யாகுமரியில் கடல் மேல் நிலைபெற்ற கரும்பாறை மேல் குறளதிகார உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் திருவள்ளுவருக்கு ஒரே அமைப்புதான் தவறாமல் திட்டமிட்டுத் திருக்குறள் திருவிழா நடத்தி வருகின்றது. சிலைக்கு எந்தவிதத்திலும் கேடுவராமல் அரசு தூய்மைப்பணிகளைச் செய்துவர வேண்டு கோள் விடுத்து வருகின்றது. வள்ளுவரின் ஆறடிச் சிலை ஒன்றைச் சிற்றுந்தில் காட்சிப்படுத்தி ஆண்டுதோறும் சிற்றூர் களிலும் நகரங்களிலும் பரப்புரை செய்து வருகின்றது. இப்புரத்தில் கடலோரத்தில் திருக்குறள் நூலகம் அமைத்து அதிலிருந்து அலுவல்களைச் செய்து வருகின்றது. திருக்குறள் பற்றாளர்கள் வாங்கியுள்ள இடத்தில் முதற்கட்டமாகக் கூட்ட அரங்கொன்றையும் கட்ட முனைந்துள்ளது.

குறித்த நாளில் குமரியில் விழா என்ற முடிவுப்படி ஆண்டுதோறும் விடை (வைகாசி) முதல் நாள் தேர்வு செய்து, அந்த நாளில் தமிழக அளவில் குறள் குடும்பங்கள் ஒருங் கிணைந்து நாள் முழுவதும் பொருள் பொதிந்த நடவடிக்கை களாக நிகழ்ச்சிகளை வடிவமைத்து நடத்தி வருகின்றனர். இந்த ஆண்டு 15.5.2018ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அறக்கட்ட ளைக்காகப் புலவர் சோ.கா. அறிவுடைநம்பி வாங்கிக் கடலோரத்தில் நிறுவியுள்ள ஒண்சுடர் தூணில் கடலில் கதிரவன் தோன்றும் நேரத்தில் சுடரேற்றித் திருக்குறள் முற்றோதல் நடந்தது.

திருக்குறள் தொண்டர் கரு. பேச்சிமுத்து சுடரேற்றி உரையாற்றினார். புலவர் கி.த. பச்சையப்பனார் முன்னிலை யுரையாற்றினார். கடல் சீற்றத்தால் படகில் சென்று மலர் வழிபாடு நடத்தப் படகுத் துறையினர் இசைவு தரவில்லை. விழாவிற்கு வந்தவர்கள் திருக்குறளூரில் நடைபெற்ற 'திருக் குறள் அறமேம்பாட்டுச் சிந்தனைகள்' என்னும் கருத்தரங்க நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றனர். 128 ஆய்வுக் கட்டுரை களைக் கொண்டு 784 பக்கங்களில் வெளிவந்துள்ள நூலை அறிஞர் பத்மநாபன் வெளியிட காப்பித்துரை, குடியாத்தம் குமணன் வெளியிட்ட நூற்களைப் பெற்றுக் கொண்டு உரை யாற்றினர். ஆய்வாளர்களின் உரைகளைக் கேட்டபின் ஐயம் தெளிதல் நடைபெற்றது.

உணவு இடைவேளையில் 300 பேர் உணவு உண்டனர். மாலையில் மாம்பலம் ஆ. சந்திரசேகர் விழா ஊர்வலத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். நறுந்தேன் குழுவினர் 22 பேர் தப்பாட்டம் ஆடினர். காலையில் கடற்கரையில் எழுந்த பறை முழக்கம் மாலையில் இப்புரவீதிகளை எழுச்சிப் படுத்தியது. விழா மேடையில் இரவு சங்கரன்கோவில் தாய்த்தமிழ்ப்பள்ளி மாணவ மாணவிகளின் 1 மணி நேர நிகழ்ச்சியைத் தமிழாசிரியர் சங்கரராமன் நடத்தி னார். திருக்குறள் திறப்பாட்டு போட்டியை மருத்துவச் செம்மல் விமுனாமூர்த்தி நடத்தி 40 பேருக்கு தான் வாங்கி வந்த பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். ஆட்சிப் பொறுப்பாளர் தமிழ் முகிலன் தலைமையில் சா. இராமன் முன்னிலையில் நிறைவு விழா நடைபெற்றது.

திருக்குறள் பரப்புரை அமைப்புக்குரிய விருதைத் தமிழ்நாடு திருவள்ளுவர் கழகத்திற்குச் சென்னை யிலிருந்து வந்திருந்த வை.மா. குமார் பெற்றுக் கொண்டார். 'திருக்குறள் கருத்துப் பெட்டகம்' என்னும் நூலெழுதியதற்குத் திருக்குறள் அறிஞர் விருதைப் புலவர், பாவலர் தமிழ்நாவன் (சென்னை) பெற்றுக் கொண்டார். தமிழாசிரியர் ஆ. நெடுஞ்சேரலாதன் விருது பெற்றவர்களைப் பாராட்டிப் பேசினார். விழுழவில் இரா.பாண்டியராசன், புலவர் சோ. கருப்பசாமி, அ. தமிழ் மணி, பா. உதயகுமார், வீ. இறையழகன், ஏ. நற்றேவன், அ.தமிழ்மணி விழா ஏற்பாடுகளில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

செய்தியாளர் : **ஆ. நெடுஞ்சேரலாதன்**

## சேலம் வீர.தம்மண்ணன் துணைவியார் விஜயாம்மா மறைவும் நினைவேந்தலும்



தந்தை பெரியாரின் பெருந் தொண்டரும் வே.ஆனைமுத்து அவர்களின் வழியோடியுமான சேலம் வீர.தம்மண்ணன் அவர் களின் அருந்துணைவியார் திருமதி. விஜயாம்மா அவர்கள் 04.04.2018 புதன் கிழமை இரவு சேலத்தில் உடல்நலக்குறை வால் 63ஆவது வயதில் இயற்கை எய்தினார். 05.04.2018 வியாழன் மாலை 4.30 மணி யளவில் சேலம் கோரிமேடு இடுகாட்டில் தமிழ் சித்தர் மரபுப் படி மண் மரிக்க அடக்கம் செய்யப்பட்டார். இவர், 01.05.1979 அன்று செவ்வாய்க்கிழமை காலை எமகண்டத்தில் விடு தலை ஆசிரியர் வீரமணி அவர்கள் தலைமையில் இவ் விணையர் வாழ்க்கை ஒப்பந்தம் ஏற்றனர். இவ்விணை யர்க்கு திராவிடமணி, செந்தமிழ்ச் செல்வி, மதியரசு ஆகிய மூன்று மகள்கள் உள்ளனர். விஜயம்மா விருந்தோம்பும் பண்பில் சிறந்தவர்.

இவரது இறுதி உடல் அடக்க நிகழ்வு சடங்கு ஏது மின்றி மூத்த மகள் திராவிடமணி தலைமையில் நடந்தேறியது. 08.04.2014 ஞாயிறு பகல் 12மணியளவில் சேலம் கோரிமேடு விஜயாம்மா இல்லத்தில் நினை வேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. விஜயாம்மாவின் நிழற்படம் சேலம் மாவட்ட செயலாளர் செ.ஆனையப்பன் அவர்கள் தலைமையில் முதுபெரும் பெரியார் தொண்டர் கூத்தன் அவர்களால் திறக்கப்பட்டு அவரது பெருவாழ்வு போற்றப்பட்டது.

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

### ந.சா.பெரியசாமி - ப.பி.கீதா



கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் ஆச்சிபட்டி நஞ்சப்பன் - சாரதாமணி இணையரின் மகன் ந.சா.பெரியசாமிக்கும் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டம் திருநீலகண்டபுரம் பழனிச்சாமி-பிரேமலாத இணையரின் மகள் ப.பி.கீதாவிற்கும் சுயமரியாதைத் திருமணம் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் தலைமையில் கோவை பெரியார் படிப்பகத்தில் 27.5.2018 ஞாயிறு அன்று நடைபெற்ற பெரியாரியல் பயிலரங்கில் உணவு இடைவேளையின் போது மிகவும் எளிய முறையில் நடைபெற்றது.

### தீக்கதிர் மேலாளர் சி. கல்யாணசுந்தரம் இல்லத் திருமண விழா



20.5.2018 ஞாயிறு காலை 10 மணியளவில் தீக்கதிர், சென்னை, பொது மேலாளர் தோழர் சி. கல்யாணசுந்தரம் - காசியம்மாள் இணையரின் மகன் க.வசந்தன் அவர்களுக்கும், வெளியம்பாக்கம் வந்தவாசி பொ. ஜம்புலிங்கம் - பொன்னம்மாள் இணையரின் மகள் ஜ. சுமதிக்கும் திருமணம் இனிதே நடைபெற்றது. முதுபெரும் தோழர் என்.சங்கரய்யா திருமண விழாவிற்குத் தலைமை தாங்கினார். கே. பாலகிருஷ்ணன், ஜி. ராமகிருஷ்ணன், தீக்கதிர் ஆசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மா.பெ.பொ.க. சார்பில் ப. வடிவேலு, சுகுணா மற்றும் சி. மகேஷ் (காவல் துறை), அரிகிருஷ்ணன், பூ. குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். சி. கல்யாணசுந்தரம் நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுற்றது.

### ஆ. கௌதமன் - சா. யோகேஸ்வரி

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பென்னாத்தூர் வட்டம், நாரியமங்கலம் கிராமம், மா.பெ.பொ.க. தோழர் க. ஆசைத்தம்பி-கிருஷ்ணவேணி இணையரின் மகன் ஆ. கௌதமனுக்கும், திருவண்ணாமலை மாவட்டம், நூக்கம்பாடி கிராமம், ம. சாரதி-பச்சையம்மாள் இணையரின் மகள் சா. யோகேஸ்வரிக்கும் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 20.5.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு திருவண்ணாமலை திருமலை திருமண மண்டபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தா. வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. துரை திருமணத்தை நடத்தி வைத்தார். க. முத்து வரவேற்புரையாற்றினார். கு. பிச்சாண்டி, கோ. எதிரொலி மணியன், க. மணிவர்மா, பொன். சுப்பிரமணி, மா. முருகேசன், கோ. கோதண்டராமன் உள்ளிட்ட ஏராளமானோர் வாழ்த்துரை வழங்கினர். ஆர். பெருமாள் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது.

## அரியலூர் மாவட்டம், மருதூரில் பொதுக்கூட்டம்



6.5.2018 மாலை 6 மணிக்கு அரியலூர் மாவட்டம், மருதூரில் மாமேதை அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் கனக சுப்புரத்தினம் பிறந்த நாள் பொதுக்கூட்டம், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகம், அரியலூர் மாவட்டச் செயலர் கா. சிந்தனைச்செல்வம், இந்திய பொதுவுடைமைக் கட்சி மாவட்டச் செயலர் இரா. உலகநாதன், தி.மு.க. இராம. கா.இராசேந்திரன், பெரம்பலூர் மாவட்ட மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் மா. நாராயணசாமி, கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் வடக்கு மாங்குடி மோகன், இரா. பச்சைமலை, மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் தி.துரை சித்தார்த்தன் மற்றும் பாண்டிச்சேரி மா.பெ.பொ.க. செயலாளர் இரா. திருநாவுக்கரசு ஆகியோர் சிறந்த உரையாற்றினர். மா.பெ.பொ.க. செந்துறை ஒன்றிய செயலர் சா.சீனிவாசன் வரவேற்புரையாற்றினார். கு. பாரி நன்றியுரை ஆற்றினார்.

# தகுதியற்றவர்கள்

வெள்ளையரிடமிருந்து விடுதலையாகி 71 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் நம் நாட்டுக் கொள்ளையர்களிட மிருந்து விடுதலை பெற முடியவில்லை. வெள்ளையர்கள் கட்டிய கட்டடங்களைப் போல் உறுதியான கட்டடங்கள் கட்ட முடியவில்லை.

பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அரசு இன்னும் நமக்கு அமையவில்லை. ஒரு மாணவன் மேல் படிப்புக்குப் படிக்க பல விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்து தேர்வு எழுதி தகுதி பெறவேண்டும் என்பது தெரிந்ததே.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மாணவர்களின் தேர்வுக்கு இந்த உடை, இந்த பேனா, இந்த மிதியடி, இந்த கூந்தல் பின்னல், இந்த நகைகள், இந்த பொட்டு கூடாது என்று பல கட்டுப்பாடுகளை விதித்து நடைமுறைப்படுத்தியவர்கள்.

படிக்காதவர்கள், பொறுக்கிகள், திருடர்கள், குற்றவாளிகள், கொள்ளையர்கள் போன்ற பல மக்கள் விரோதிகளைத் தேர்தல் ஆணையம் தகுதி பார்க்காமல் தேர்வு செய்கின்றது. உயர் பதவிகளை அடைய ஒருவர் பல தேர்வுகளையும் சோதனை களையும் செயல்படுத்தி தேர்வாகி பதவிக்கு வருகின்றனர்.

அண்மையில் தமிழகத்தில் நடந்த அனைத்துக் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் தேர்தல் மிக மிகக் கேவலமாக தமிழக அரசால் நடத்தப்பட்டது. கூட்டுறவு சங்கங்களில் போட்டி போட்டுக்கொண்டு குறுக்கு வழியில் தலைவர் பதவிக்கு ஏன் வருகின்றனர் என்றால், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிடைக்கும் அனைத்து மானியங்களைச் சுரண்டவும் எந்தக் குற்றம், கொள்ளை நடந்தாலும் வேறு ஒருவர் மீது சுலபமாக பழி சுமத்தவும் முடியும்; கூட்டுக் கொள்ளையும் செய்யலாம் என்ற எண்ணத்தில் போட்டி போடுகின்றனர்.

இன்றைய அரசு ஊழியர்கள், நல்லவர்கள் கையூட்டு வாங்காதவர்கள், ஊதியத்திற்கு மட்டும் உழைப்பவர்கள் என்றால் பத்து விழுக்காடு கூட இருக்கமாட்டார்கள். ஒருவன் தகுதியானவன் என்று வாக்கு இயந்திரம் கூறக் கூடாது. வாக்குச்சீட்டு கூற வேண்டும். கணினி வாக்கு முறையில் ஓட்டு போட்ட பின்பு பல மாற்றங்களைச் செயல்படுத்த மென்பொருள் முறையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினால் ஒட்டுமொத்த மாக தேர்வு முறையே மாறிவிடும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

மின்னணு வாக்கு முறையை எதிர்க்காத அனைத்து அரசியல் கட்சிகளும் ஊழலுக்கு உடைந்தையான கட்சிகளே. மற்றும் நம்மை ஆட்சி செய்ய தகுதியிழந்த கட்சிகளே ஆகும்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூன்-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. சகுந்தலா குப்புசாமி | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சூன்-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**பெரியார் ஈ.வெ.ராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு வங்கி வழியே பணம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட வங்கிக் கணக்கிற்கு விடுக்கலாம்.**

**PERIYAR E.V.RAMASAMY-NAGAMMAI EDUCATION & RESEARCH TRUST**

Bank Name : **BANK OF BARODA**
A/c. No. : 06780100000274 IFSC Code : BARBOTIRUVA
Branch : Tiruvateeswaranpet Branch
Triplicane, Chennai-600 005

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**